GOKULAM

கோகுலம்

மே '97 ரூ. 5/-



வழக்கமான போட்டியும் கோடை விடுமுறைப் போட்டியும்!

சிதறாது கவனம் தப்பாது குறி!



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/-

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BO CLUB' and take advantage of the benefits. I have read all y rules and shall abide by these I promise to accept the V.P. e month.

NAME ____________

ADDRESS ____________

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Sta worth Rs. 10/-

My Birth date ____________


Note : We shall not enrol you as a member till we receive membership fee.


NEW AMAR CHITRAKATHA (Price Rs. 25/- Each)

• **Panchtantra**-Crow & Owls • **Panchtantra**-Brahman & The Goat • **Chaitnaya Mahaprabhu** • **Shivaji** • **Rana Pratap** • **Rana Sa**

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020


DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Co **Hyderabad** : • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut :** Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut





மே 1997
மலர் : 15
இதழ் : 4

கோகுலம்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். கோடை விடுமுறையை எப்படிக் கழித்து வருகிறீர்கள்? சிலர் வெளியூருக்குக் கூடப் புறப்பட்டுக் கொண்டிருப்பீர்களே? நீங்கள் கோடை விடுமுறையை உள்ளூரில் கழித்துக் கொண்டிருந்தாலும் சரி, இல்லை வெளியூருக்குப் போய்க் கழித்து வருவதானாலும் சரி, உங்கள் கோடை விடுமுறை அனுபவத்தை கோகுலத்துக்கு எழுதி அனுப்புங்கள். தகுதி உள்ளவற்றைக் கண்டிப்பாக வெளியிடுவோம். உங்கள் கோகுலம் இல்லையா? இடமில்லாத காரணத்தால் இந்த இதழில் பிருந்தாவனக் கவியரங்கம் இடம் பெறவில்லை.

வழக்கப்படி இந்த இதழில், "கோடை விடுமுறைப் போட்டி" வெளியாகிறது. இதைத் தவிர வழக்கமான போட்டியும் இருக்கிறது. இரண்டுமே உங்கள் அறிவுப் பசிக்கு விருந்தளிப்பவை. மகிழ்ச்சிதானே?

தொடர்கதையில் மேலும் விறுவிறுப்புக் கூடுகிறது. பரிசுக் கதைகள், பரிசு பெற முற்றிலும் தகுதியானவை என்ற எண்ணத்தை உங்கள் கடிதங்கள் உறுதிப்படுத்துகின்றன.

கோகுலத்தை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களையும் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.





செய்ய முடியுமா?



ஒரு காட்டில் யானை ஒன்றும், குரங்கு ஒன்றும் வசித்து வந்தன. இரண்டும் நண்பர்கள்.

யானை குரங்கைத் தன் முதுகில் ஏற்றிக் கொள்ளும். அதைச் சுமந்து கொண்டு காட்டினுள் செல்லும்.

குரங்கும் மரங்களின் மீதேறி யானைக்கு வேண்டிய இலை, தழை, கனிகளைப் பறித்துப் பறித்துப் போடும். யானை கீழே இருந்தபடி அவற்றைச் சாப்பிடும்.

ஒன்றுக்கொன்று உதவி செய்து கொண்டு இரண்டும் நல்ல நண்பர்களாகத் திகழ்ந்தன.

ஒருநாள் குரங்குக்கு வேண்டாத சிந்தனை ஒன்று வந்தது,

'நான் மரத்தில் ஏறி இந்த யானைக்கு இலை, தழை, கனி எல்லாம் பறித்துப் போடவில்லையென்றால், இந்த யானை பசியால் துடித்துப் போகுமே?' என் கையை எதிர்பார்த்து வாழும் இந்த யானையை விட நான்தானே உயர்ந்தவன்?' என்று குரங்கு தனக்குத் தானே கர்வப்பட்டுக் கொண்டது.

"இன்று யானை வரட்டும். இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்" என்று குரங்கு மனதினுள் முடிவு செய்து கொண்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் வழக்கம் போல் யானை ஆடி அசைந்து வந்தது. "ஏ, யானையே! நான் செய்வது போல் உன்னால் செய்ய முடியுமா?" என்று பெரிய குரலில் கேட்டது குரங்கு.

யானைக்குக் குரங்கின் பார்வையும், குரலும் கேள்வியும் வியப்பாக இருந்தது. இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல், "என்ன செய்ய வேண்டும் சொல்?" என்றது வழக்கமான பணிவுடன்.

குரங்கு 'டக்'கென்று ஒரு மரத்தில் விறுவிறுவென ஏறிக் கிளைக்குக் கிளை தாவியது. பின் கீழே இறங்கி,

"இதுபோல் உன்னால் செய்ய முடியுமா?" என்று யானையைப் பார்த்து வினவியது.

குரங்கின் புத்தி திடீரென மாறி விட்டதை உணர்ந்து யானை விய இதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்ட யானை, "என்னதான் இருந்தாலும் உன்னைப் போல் என்னால் செய்ய முடியுமா? நீ எவ்வளவு பெரிய ஆள்! ஆனால் நா ஒன்று செய்கிறேன். அதை உன்னால் செய்ய முடியுமா?" என்று திருப்பிக் கேட்டது பணிவாக.

"என்ன என்று சொல்?" என்றது குரங்கு கர்வத்துடன்.

"முதலில் நீ என் முதுகில் ஏறி உட்கார்ந்து கொள். அதன்பின் நீ கீழிறங்கு. அப்புறம் உன் முதுகில் நான் அமர்கிறேன்" என்றது யானை.

இதைக் கேட்ட குரங்கு நடுங்க ஆரம்பித்தது. "இந்த யானை நம் மீது உட்கார்ந்தால் நாம் அவ்வளவுதான்! நொறுங்கி விடுவோம்" எனப் பயந்தது. அதன் ஆணவம் ஒடுங்கியது. தன் நிலையையும் தன் தவறையும் உணர்ந்தது. "யானையாரே நீங்கதான் பெரியவர்! நான் அறியாமல் பேசி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றது புத்தி வந்த குரங்கு.

"உலகில் யாருமே பெரியவரில்லை. கடவுள் ஒவ்வொருவருக்கும் சில சிறப்புத் தன்மையினை அளித்துள்ளார். நாம் அதை வைத்து கர்வம் கொள்ளக் கூடாது. அவ்வாறு கர்வம் கொண்டால் அதுவே நம்மை அழித்துவிடும். எந்த நிலையிலும் கர்வம் கூடாது" என்று யானை அறிவுரை கூறியது.

"இனி நான் கர்வம் கொள்ள மாட்டேன்" என்றது குரங்கு.

யானையும் குரங்கை மன்னித்து அதை முன் போல தன் முதுகில் ஏற்றிக் கொண்டு காட்டில் உலா வர நடைபோடத் தொடங்கியது.

- பாளை. பசும்பொன்

கோகுலம்

மே 1997

இந்த இதழில்...

பசித்தால் புசி!

தமிழ் ஆசிரியர் தமிழ்ப் பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார். அது உடல் நலத்தைப் பேணுதல் பற்றிய பாடம். 'பசித்த பிறகே புசிக்க வேண்டும்' என்ற கருத்து விரிவாகப்பட்டு இருந்தது.

அதற்கு ஆசிரியர் விளக்கம் கூற ஆரம்பிப்பதற்குள் அடுத்த பாடவேளை தொடங்குவதற்கான மணியடித்து விட்டது.

"நாளை இதற்குப் பொருள் கூறுகிறேன்'' என்று கூறிய ஆசிரியர், "முடிந்தால் பசித்தால் புசி என்ற வரியைப் பற்றி யோசித்து வீட்டில் பொருள் கண்டுபிடித்து எழுதி வாருங்கள்" என்று மாணவர்களிடம் சொல்லிவிட்டுச் சென்று விட்டார்.

சுட்டிப் பெண் பவானி வீட்டிலுள்ள அண்ணனையோ, படித்த பெரியவர்களையோ கலந்தாலோசிக்காமல் 'பசித்தால் புசி' என்பதற்குத் தனக்குத் தோன்றிய பொருளை எழுதி விட்டாள்.

அடுத்த நாள் –

தமிழாசிரியர் வகுப்புக்குள் நுழைந்தவுடன் எல்லோரும் தாங்கள் எழுதி வந்ததை எடுத்துச் சென்று ஆசிரியரிடம் காட்டுவதில் போட்டா போட்டி போட்டனர். பவானியும் ஆவலுடன் முந்திச் சென்று தான் எழுதிய கருத்தைக் காண்பித்தாள்.



அதைப் படித்த தமிழாசிரியையின் முகத்தில் சில நிமிடங்கள் ஒரே திகைப்பு; குழப்பம். பிறகு, "பவானி உங்க வீட்டுல பூனை இருக்கா?'' என்று கேட்டார். "இருக்கே டீச்சர். என் செல்லப் பூனை" என்று பெருமையாகக் கூறினாள் பவானி.

"அதன் பெயர் என்ன?"– டீச்சர் தான் கேட்டார். "புசி டீச்சர்"– பவானி பதிலளித்தாள்.

"அதானே பார்த்தேன்!" என்று கூறிய டீச்சர் "கடகட"வென்று மறுபடி சிரிக்க ஆரம்பித்தார்.

ஆசிரியையின் சிரிப்புக்குப் பொருள் புரியாத மற்ற மாணவர்கள், "எங்களுக்கும் படித்துக் காட்டுங்கள்" என்று வேண்டிக் கொண்டனர்.

அதற்கு ஆசிரியர், "பசித்தால் புசி என்பது சரியல்ல. தினமும் பசித்தால், புசி வேண்டும் என்றால் அத்தனை புசிக்கு எங்கே போவது? என்று பவானி எழுதியிருக்கிறாள்" என்று சிரித்தார்.

"ஆமாம் டீச்சர். என் பூனையின் பெயர் புசி. பசித்தால் புசி என்றால் எப்படி எடுத்துக் கொள்வது?" என்று கேட்டாள் பவானி.

பவானியின் கேள்வி எழுப்பிய சிரிப்பலையால் வகுப்பே அதிர்ந்தது.

- அ.கு. கிருஷ்ணன்

வலைக்கம்பிக்குள் இரையாகப் போடப்பட்ட மீனைச் சுவைத்தபடி கரண்டிவாயன் மனைவியிடம் கேட்டது.

"கூண்டுக்கு வெளியே ரெண்டு பசங்க நிக்கறாங்களே... உனக்கு அவங்களை அடையாளம் தெரியுதா?"

கரண்டிவாயி தலையைச் சாய்த்து உற்றுப் பார்த்தது.


"நல்லாத் தெரியுதே! கைக் கடிகாரம் கட்டியிருக்கும் பையன் தங்கமான பையன். ஒரு ரூபாய்க்குக் கடலையை வாங்கி, பொட்டலத்தைப் பிரிச்சு அப்படியே கூண்டுக்குள் வைச்சு நம்மைத் திங்க வைச்சானே! நம்மைப் போன்ற பறவைகளிடம் எத்தனை ஆசை!"

"சரியா சொல்லிட்டே... இன்னொரு பையன் இருக்கானே அரைக்கை சட்டையோட...? அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியுதா பார்?"

"அட! எம்மேல் கல்லை வீசி எறிஞ்சு நான் துடிச்சதை ரசிச்ச அந்த ராட்சப் பயலேதான்! அந்த நல்ல பிள்ளையோட இவன் ஏன் சேர்ந்தான்?" என்று வியந்தது கரண்டிவாயி.

"எனக்கும் அதான் புரியலே. ஆனா ஒன்னு நிச்சயம்... இந்த அரைக்கை வந்திருக்கிறது நல்லதுக்கே இல்லே... என்ன வேணுமானாலும் பண்ணக் கூடிய கிராதகன். நம்ம இனத்தாரை எல்லாம் ...ட்டப்போய், நதிக் ...ரை ஓரமா, இந் ...நக் கிராதகன் ...பார்வை படாத இடத்தில் இருக்கும்படி எச்சரிக்கை பண்ணி வைக்கணும்" என்று திரும்பியது கரண்டிவாயன்.

"இரு இரு. நானும் வரேன்.



கரண்டி வாயனுக்குக் கொண்டை உண்டா?

ரேவதி


இவன் மூஞ்சியைப் பார்க்கவே எனக்கும் புடிக்கலே'' என்று திரும்பியது கரண்டிவாயி.

"என்னடா இது! நம்மைக் கண்டதும் இந்தக் கரண்டிவாயன் பறவைங்க எல்லாம் ஒட்டுமொத்தமாக உள்ளாரே போயிடுத்து!" என்று வியந்தான் கைக் கடிகாரம் கட்டியிருந்த பாலு.

''எனக்குக் காரணம் தெரிஞ்சு போச்சு பாலு. போனமுறை நாம உயிர்க் காட்சி சாலைக்கு வந்தோமே, அப்ப நான் கல்லால இந்தப் பறவைகளில் ஒன்றை அடிச்சேன். அந்தப் பகையை இதுங்க மறக்கலே. அதான் பிடிக்காத வங்க வந்தால் திரும்பிப்போன்னு கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் பண்ணும் தொண்டருங்க மாதிரி இதுங்களும் நடந்துக்குது!" என்றான் திகைப்பு மாறாமல் அரைக்கைச் சட்டை தாமு.

"அப்படியா! உனக்கு வேண்டியது தான் இந்த அவமதிப்பு'' என்றான் பாலு.

"சரிடா, நான்தான் கல்லடிச்சேன். தண்டனையா முகத்தைத் திருப்பிக்



கிட்டுப் போவுதுங்க. நீ அன்பா, ஆசையா கடலை வாங்கி வைச்சியே? உங்கிட்ட அதுங்க நன்றியோட இருக்க வேண்டாம்?"

"பொல்லாதவர்களுடன் பழகினால், நல்லவர்களுக்கும் இதே கதிதான்னு இதுங்க அறிவுறுத்துதுங்க்."

"சரிடா, இப்ப என்ன பண்ணலாம்? கரண்டிவாயன் பறவையைப் பற்றிக் கட்டுரை எழுதறதா பெரிசா பேரை வேற தந்துட்டோமே? இதுங்க திரும்பி வருமா? இல்லே நாம போறவரைக்கும் முகத்தைக் கூடக்காட்டாதா?" என்று குழம்பினான் தாமு.

சீருடை அணிந்த உயிர்க்காட்சி சாலைப் பணியாளர் ஒருவர் அந்தப் பக்கம் வரவே, தாமு அவரை அழைத்துக் கேட்டான்.

"இதுங்க இயற்கையான சூழ்நிலையில் இருக்கணும்கறதுக்காக, நதியை சின்னதா வெட்டி இதுங்களுக்காகக் காவா மாதிரிக் கொண்டு வந்திருக்காங்க. அந்தப் பக்கம் பலமான இரும்புக் கம்பித் தடுப்புப் போட்டிருக்காங்க. மத்த மூணு பக்கமும் இந்த மாதிரி உயர மான கம்பி வலை. அந்தக் காவாய்ப் பக்கம் இதுங்களுக்கு வேண்டிய நந்தை, தவளை, மீன், நண்டு எல்லாம் இருக்கு. அதனால் இந்தப் பக்கம் வரவேண்டிய அவசியமே இல்லை. அதுங்களுக்கா தோன்றி இந்தப் பக்கம் வந்தால்தான் உண்டு" என்று கூறிவிட்டுப் போனார் அந்தப் பணியாளர்.



பாலுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. இரண்டு ரூபாய்க்குக் கடலையை வாங்கி இரண்டு பொட்டலமாக்கினான். கைகளைக் கம்பி வலைக்குள் விட்டுப் பிரித்து வைத்தான். இதற்கு நல்ல பலன் இருந்தது. குஞ்சு, குட்டி, சின்னது, வளர்ந்தது, பெரியது என்று எல்லா வயது கரண்டி வாயன் பறவைகளும் திரண்டு வந்து நொடியில் பொட்டலங்களைக் காலி செய்து விட்டன!

பேனாவையும் நோட்டையும் எடுத்துக் கொண்ட தாமு, "பாலு சீக்கிரம் இதுங்களோட தோற்றத்தைப் பற்றிய குறிப்பைச் சொல்லிகிட்டே வா. நான் எழுதிக்கறேன்" என்று பரபரத்தான்.

"வீட்டு வாத்தை விடக் கொஞ்சம் பெரிசு. பெரிய பறவைகளின் உயரம் 50 செ.மீ. இருக்கும். அலகு கறுப்பும் மஞ்சளும் கலந்தது. தட்டையா, நுனியில கரண்டி மாதிரி இருக்கு. பொதுவா உடம்பு வெண்மை

அறிவியல் உண்மைகள்

* கரண்டிவாயன், மண்வெட்டி வாயன் என்று பல பெயர்களால் அழைக்கப்படும் ஸ்பூன்பில்லின் (SPOON BILL) வின் விலங்கியல் பெயர் PLATALEA LEO; ORODIA. CICONIFORMES வரிசையில் இது CICONIIDAE குடும்பத்தைச் சேர்ந்தது.

* எந்தப் பறவை இனத்தோடும் இது ஒற்றுமையாக வாழும்.

* வளராத பறவைகளின் அலகுகள் நன்கு மஞ்சளாக இருக்கும்.

* முட்டை இடத் தயாராகும் பருவத்தில் சிறகுக் கொண்டை வளரும்.

* இது யாரையும் சட்டை செய்யாது. சண்டை வந்தால் விலகிப் போகும். நினைவாற்றல் மிக்கது. ஆனால் இதற்கு நேர்மாறான கருத்தும் இருக்கிறது.

* கூடுகளை அலங்கோலமாக மரக்கிளைகள் அல்லது நீர்நிலைகளின் கரைகளில் கட்டும். நான்கு முட்டைகள் வரை இடும். முட்டைகள் சிவப்புக் கலந்த பழுப்பு வண்ணப் புள்ளிகளுடன் இருக்கும்.

* வானில் பறக்கும்போது எல்லாம் ஆங்கில V வடிவத்தில் சீராகப் பறக்கும்.

* அதிகமாகக் குரல் எழுப்பாது.

நிறம். நீண்ட கழுத்து. நீளமான உயர்ந்த கால்கள். பிடரிப் பக்கம் பிரிஞ்சு போன கொண்டை மாதிரி வெளிர் மஞ்சள் வண்ணத்தில் இறகுகள்."

சொல்லிக் கொண்டே வந்த பாலு "இதென்னது! இதுகளில் சில வற்றிற்கு தலையில் நீளமான கொண்டை போல் சிறகுகள் இருக்கு! முன் கழுத்தின் அடிப்பக்கத்தில் நிறைய மஞ்சள் புள்ளிகள் இருக்கு! ஒருவேளை இவை பெண் பறவைகளோ!" என்று குழம்பி னான்.

அந்[illegible] பக்கமாக வந்த உயிர்க் காட்சி [illegible]லை அலுவலர், அவன் அருகே வந்தார். அவன் கேட்ட சந் தேகம் அவர் காதில் விழுந்திருக்க வேண்டும்.

"தம்பி, கரண்டிவாயன் பறவை களில் ஆண் பெண் இரண்டுமே பார்க்க ஒரே மாதிரித்தான் இருக்கும். குஞ்சுகள் பெரிதாகும் வரை இப்படி அலகுகள் மஞ் சளாக இருக்கும். குடும்பம் நடத்தும் பருவத்தை அடையும் போது இவைகளுக்குத் தலையில் சிறகுக் கொண் டைகள் தோன்றும். கழுத்துக்குக் கீழே மஞ்சள் தூவி தோன்றும்," என்றார் அலுவலர்.

"சார், இதுகளின் அலகு இப்படிக் கரண்டி மாதிரி தட்டையா இருக்கே! இவைகளால் எப்படி இரையைப் பிடிக்க முடியும்?" என்று கேட்டான் தாமு.

"இப்படித் தட்டையா அலகு இருப்ப தால் சட்டுவக் கரண்டியைப் போட்டுக் கிளறுவது மாதிரி நீரில் இவை அலகை விட்டு அலசும். அங்குள்ள அத் தனை புழுபூச்சிகளும், சல்லடையில் சலித்த மாதிரி, அலகுக்குள் தங்கிவிடும்!" என்றார் அலுவலர்.

திறமையைப் பாராட்ட வேண்டிய இவரே, இப்படிச் செய்தால் மற்ற ஆசிரியர்கள் என்ன பண்ணுவார்கள்? நான் என்ன பிழை செய்து விட்டேன்? இயற்கையின் அழகில் மனதைப் பறிகொடுத்தது தவறா?'' என்று கீர்த்தி தனக்குள் நினைந்து வருந்தினாள். அதற்கு மேல் கீர்த்தியின் மனம் பாடத்தில் பதியவில்லை.


மூன்று வகுப்புகள் முடிந்து இடைவேளைக்கான மணி அடித்தது.

எங்கும் செல்ல மனம் இல்லாமல் கீர்த்தி தனது இடத்திலேயே அமர்ந்திருந்தாள். ப்ரியா வந்தாள்.

''கீர்த்தி! உன்னைத் தமிழாசிரியர் அழைத்து வரச் சொன்னார்'' என்று ப்ரியா கூறினாள். இன்னும் என்னவெல்லாம் கடிந்து பேசப் போகிறாரோ, கவிதை எழுவதையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துப் பாடத்தில் கவனத்தைச் செலுத்துன்னு சொல்லத்தான் கூப்பிடுகிறாரோ என்று எண்ணிக் குழம்பியவளாகக் கீர்த்தி அவளைப் பின்தொடர்ந்தாள்.

''வாம்மா கீர்த்தி!''- தமிழாசிரியரின் குரலில் இழைந்த அன்பைக் கண்டு கீர்த்தி திகைத்துப் போனாள்! கவிதையைப் பறிமுதல் செய்து கொண்டு போன ஆசிரியரா இப்படி அன்பொழுகக் கூப்பிடுகிறார்!

''கீர்த்தி, இதில் உள்ள பாடல் நீ எழுதியதுதானே? உன் திறமையைப் பார்த்துப் பெருமை அடைகிறேன். எல்லோரும் நம்ம பள்ளியை அடுத்து இருக்கும் பூங்காவின் அழகைக் கண்களால் ரசிக்கிறோம். ஆனால், அதைக் கவிதையால் மிக அழகாக ரசித்திருக்கிறாயேம்மா! உன்னிடம் ஒரு கலைஞனுக்கு உள்ள கண்ணோட்டமும், அதைக் கவிதையில் வடிக்கும் அற்புதத் திறமையும் இருக்கும்மா. உன்னுள் உள்ள இந்தத் திறமையை வளர்த்துக் கொள். இது எளிதில் யாருக்கும் கிடைக்காத பேறு அம்மா.'' தமிழாசிரியரே தொடர்ந்தார். ''கவிதையை இன்னும் முடிக்கவில்லையே? அது பாதியில் நிற்கிறது. மீதியையும் பூர்த்தி செய்து என்னிடம்



உள்ளமும் இருந்ததால், கீர்த்தி ஜன்னலுக்கு வெளியே நிறைந்திருந்த அழகுப் பூங்காவின் எழிலில் தன்னையே மறந்து விட்டாள். அது பள்ளி, தான் அங்கு பயில வந்திருக்கும் மாணவி என்ற நினைப்பே அவளுக்கு மறந்து விட்டது. நோட்டையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு உடனே கவிதை எழுத ஆரம்பித்து விட்டாள்.

கவிதை, கீர்த்திக்கு கைவந்த கலை. எதைப் பற்றி வேண்டுமானாலும் ஒருசில நொடிகளில் கவிதை எழுதி விடுவாள். அதிலும், அவளுக்கு ஈடுபாடு இருந்த இயற்கை எழில் பற்றி, இனிமை கொஞ்சும் கவிதைகள் பலவற்றை அவள் எழுதியிருக்கிறாள். அவளுடைய அழகான கவிதைகள், பல சிறுவர் இதழ்களில் வெளி வந்துள்ளன. அவளுக்குப் பெயரையும் வாங்கித் தந்துள்ளன.

"கீர்த்தி!"

தமிழாசிரியரின் கோபமான குரல் கேட்டுத் தடுமாறி எழுந்தாள் கீர்த்தி.

தமிழாசிரியர் அவள் கையில் இருந்த நோட்டைக் கொடுக்கச் சொல்லி வாங்கிப் பார்த்தார்.

"நீதானே புதிதாகச் சேர்ந்துள்ள மாணவி? ஆசிரியர் வந்தவுடன் எழுந்து 'வணக்கம்' சொல்ல வேண்டும் என்பதை நீ படித்த பழைய பள்ளியில் உனக்குச் சொல்லித் தரவில்லையா? ஆசிரியர் வந்த பிறகு எழுந்திருக்கக் கூட இல்லாமல் இப்படி உட்கார்ந்திருப்பதுதான் பழைய பள்ளியின் பண்பாடா? முதல் நாள் என்பதால் தண்டனை தராமல் விடுகிறேன். இனி இந்த மாதிரி நடந்து கொள்ளாதே!''

என்று கூறிவிட்டுத் தன் இடத்திற்கு விரைந்தார் ஆசிரியர். பாடல் எழுதிய நோட்டு அவருடன் போய் விட்டது!

புதிய பள்ளியின் முதல் நாள் அனுபவமே இப்படியா இருக்க வேண்டும்? கீர்த்திக்கு மிகவும் அவமானமாகப் போய் விட்டது. அவளால் சக மாணவிகளை நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. கண்கள் குளமாகின.

''சே! என்ன தமிழாசிரியர் இவர்! இதற்கு முன்பு படித்த பள்ளியின் தமிழாசிரியர்கள் அவளைத் தாங்களே அழைத்து, தலைப்பைக் கொடுத்துப் பாடல் எழுத வைத்துப் பாராட்டுவார்கள். இப்படி யாருமே நடந்து கொண்டதில்லை. என்



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில்

3-ஆவது பரிசு பெறும் 2-ஆவது கதை

முட்டுக்கட்டை தடையா?

நிலா


கீர்த்திக்கு மகிழ்ச்சி பொங்கியது.

கோடை விடுமுறைக்குப் பின் அன்று தான் பள்ளி தொடங்கி இருந்தது. கீர்த்தியின் அப்பாவுக்கு மாற்றலாகி விடுமுறையில்தான் இந்த ஊருக்கு வந்திருந்தனர். அவள் அப்பாவுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றலாகும் வங்கிப் பணி. அதனால், அவளைப் பொறுத்தவரை அதுதான் அவளுக்குப் பள்ளி முதல் நாள். நேரத்திற்கு, காலை வழிபாட்டிற்கே வந்து விட்டாள். புதுப் பள்ளி எப்படி இருக்குமோ என்ற படபடப்பு மனதில் நிறைந்திருந்தது. வழிபாடு முடிந்தவுடன் முதன் முறையாக வகுப்பில் நுழைந்தாள் கீர்த்தி.

வகுப்புத் தலைவி ப்ரியா, அவளை ஜன்னலோரம் அமரவைத்தாள். ஜன்னலுக்கு வெளியே பார்த்த கீர்த்தி தன்னையே மறந்து விட்டாள்!

பள்ளிக்கு வெளியே, பள்ளியை அடுத்து ஒரு அழகிய பரந்த பூங்கா இருந்தது. கீர்த்தியால் பூங்காவின் முழு அழகையும் தன் இருக்கையில் இருந்தபடியே காண முடிந்தது. ஆதவன் தன் கிரணங்களை பூங்காவில் பரப்பி இருந்தான். வெயிலின் ஒளி பட்டு தோட்டத்தின் நடுவே இருந்த குளத்தில் இருந்த தாமரை மலர்கள் இதழ் விரித்துச் சிரித்திருந்தன. மரங்கள் வெயிலுக்குப் பழக்கப்படுத்திக் கொள்ளப் பல வண்ண மலர்கள் அழகுசெய்த நீண்ட கிளைகளை விரித்துக் குடையாய்ப் பிடித்திருந்தன. ரோஜா மலர்கள் புன்னகைத்து வணக்கம் கூறுவது போல் இருந்தன!

கவிதை எழுதும் திறமையும், சொல் வளமும், இயற்கையின் எழிலை ரசிக்கும்



காட்டும்மா. நானே திருத்தித் தரேன். மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதைப் போட்டி அடுத்த மாதம் நடக்க இருக்கிறது. அதற்கு உன் கவிதையை அனுப்பு. பரிசு கிடைக்க வாய்ப்பு இருக் கிறது. ஆனால் ஒரு முக்கியமான விஷயம். நான் கண்டிப்பானவன். உன் கவிதை எழு தும் ஆற்றலைப் பற்றிப் பெருமைப்படும் நான், வகுப்பில் பாடத்தைக் கோட்டை விட்டுக் கவிதை எழுத உன்னை அனு மதிக்க மாட்டேன். கவிதை, வகுப்புக்கு வெளியே. வகுப்பு நேரங்களில் பாடத் தைக் கண்டிப்பாகக் கவனிக்க வேண்டும். நீ நன்கு தேர்ச்சி பெற்று முதல் மாண வியாகத் திகழ்ந்தால்தான் உன் கவிதை எழுதும் ஆற்றலுக்கும் பெருமை. ஏதாவது ஒரு பாடத்தில் பெயிலானால் கூட எல் லோரும் உன்னையும் உன் கவிதை ஆற்ற லையும் ஏளனமாகப் பேசுவார்கள். உனக்கு மதிப்பு இருக்காது. அதனால், வகுப்பு நேரத்தில் பாடம். ஓய்வு நேரத்தில் மட்டுமே கவிதை இருக்க வேண்டும்'' என்றார் ஆசிரியர்.

''நன்றி ஐயா'' என்று கூறிய கீர்த்தி கவிதை எழுதிய நோட்டை ஆசிரியரி டமிருந்து வாங்கிக் கொண்டு வகுப்புக்கு வந்தாள். இடைவேளை முடிவதற்குள் மீதிக் கவிதையையும் எழுதி முடித்தாள். மாலையில் ஆசிரியரிடம் காட்டினாள். அவர் கூறிய கருத்துகளை ஏற்று சில இடங்களில் மாற்றம் செய்தாள். அடுத்த மாதம் பத்திரிகைகளில் கவிதைப் போட்டி வெளியானதும், அதை அனுப்பி வைத் தாள். அதற்குப் பிறகு அதைப் பற்றி மறந்தும் விட்டாள்.


இரண்டு மாதங்கள் ஓடின. அன்று வகுப்பில் கணக்குப் பாடத்தைக் கவனித் துக் கொண்டிருந்த கீர்த்தியை தலைமை ஆசிரியர் அழைப்பதாகத் தகவல் வந்தது. கீர்த்தி போனாள். தலைமை ஆசிரியர் அறையில் தமிழாசிரியரும் இருந்தார்.

''பாராட்டு கீர்த்தி! உன் கவிதைக்கு முதல் பரிசு கிடைத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. என் பாராட்டுகள்'' என்று கைகுலுக்கினார் தலைமை ஆசிரியர்.

''அதைப் படித்த போதே அது பரிசு பெறக்கூடியது என்று எண்ணினேன். என் நம்பிக்கை வீண்போகவில்லை'' என்று பாராட்டினார் தமிழாசிரியர்.

''எல்லாம் உங்கள் ஆசிதான், ஐயா! நீங்கள் என்னை மனக்கஷ்டப்படுத்தாது திட்டி இருந்தால், இன்று இந்தப் பெருமை எனக்குக் கிடைத்திருக்காது. நீங்கள், திட்டி விட்டுக் கவிதை எழுதிய நோட்டை எடுத் துச் சென்றதும் எனக்குச் சொல்ல முடி யாத வேதனையைத் தந்தது ஐயா. என் கவிதை ஆர்வத்திற்கு நீங்கள் முட்டுக் கட்டை போட்டு முடக்கி விடுவீர்களோ என்று பயந்தேன். இப்பொழுதுதான், முட் டுக்கட்டை என்பது முன்னேற்றப் பயணத்திற்குத் தடையல்ல; வழிநடத்தல் என்பதை உணர்ந்து கொண்டேன். இது என் வெற்றியல்ல. உங்கள் வெற்றி. உங்கள் வழிகாட்டலால் நான் பெற்ற வெற்றி. அதனால் இதன் பெருமையாவும் உங் களுக்கே'' என்றாள் கீர்த்தி.

தமிழாசிரியர் பெருமையோடு அவளை வாழ்த்தினார்.



இரண்டு கைகளையுடைய வில் லாளிகள் எல்லா நாடுகளிலும் இருக் கிறார்கள். வில்லாளிகளுக்கு இரு கரம் தேவைதானா? ஒரு கை இல்லாதவர்கள் வில்லாளிகளாக இருக்கிறார்களா? அமெரிக்காவில் மிச்சிகன் மாநிலத் திலுள்ள கிரீன்வில்லே என்ற இடத்தைச் சேர்ந்த ரிக்கிளீன் என்பவர் ஒரு கையை மட்டுமே வைத்துக் கொண்டு சிறந்த வில்லாளராக விளங்குகிறார். ஒரு கை யால் வில்லைப் பிடித்துக் கொண்டு தன் பற்களால் நாணேற்றுகிறார்.

– உமா முஸ்தபா,
தக்கோலம்.

தூங்காதே!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி 1

(திலக், பூமா, மீனா)

திலக்: பூமா அக்கா! ஏ, பூமா!

பூமா: வாடா திலக்! என்ன புதையல் கிடைச்சுட்டா மாதிரி பெரிசா சத்தம் போட்டுக்கிட்டுவர!

திலக்: ம்!... புதையல்தான் கிடைக்கப் போறது... இந்த விளம்பர நோட்டீஸை ஒரு தடவை படிச்சுப் பாரு... என்ன புதையல், எப்படிக் கிடைக்கும்னு தெரியும்!

பூமா: கொண்டா இப்படி! (படிக் கிறாள்) ராக்கெட் சேமிப்புத் திட்டம்... சிறுவர்களே! உங்களுக்குப் புதையல் வேண்டுமா? அப்படியானால் தினந்தோறும் 25 காசுகளை கீழ்க்கண்ட முகவரியிலுள்ள எமது அலுவலகத்தில் நாள் தவறாமல் சேர்த்துக் கொண்டு வந்தால், நூறு தினங்களுக்குப் பின், நீங்க சேர்த்துள்ள 25 ரூபாய்க்குப் பதில் 50 ரூபாய் கொடுக்கப் டும்! மொத்தம் ஆயிரம் பேர்கள்தான் க்கப்படுவர். திட்டத்தில் சேர கடைசி நாள் பிப்ரவரி முதல் நாள். பணம் இரட்டிப்பாக உங்கள் கைக்குக் கிடைக்கும் நாள் மே மாதம் பன்னிரெண்டாம் தேதி. நல்ல சந்தர்ப்பம்! நழுவ விடாதீர்கள்! - உங்கள் சத்யன், நிர்வாகி, ராக்கெட் சேமிப்புத் திட்டம், நடராஜா ரோடு, சென்னை.

திலக்: இதான் பூமா நான் சொன்ன புதையல்!

பூமா: இதை என்னால நம்ப முடியல்லே... நம் சேமிப்பு நம் கைக்குத் திரும்பக் கிடைக்குமான்னே சந்தேகமா இருக்கு!


திலக்: அக்கா, நம்ம அப்பா ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருக்குச் சந்தேகம் வரலாம்! உனக்குமா சந்தேகம் வரணும்?.. அக்கா, அதோ பாரு உன் சிநேகிதி மீனா வரா!... இதைப் பத்தி நீயே அவகிட்டே கேளு!

பூமா: வா மீனா!...

மீனா: பூமா! நீ கூட தாராளமா இந்த சேமிப்புத் திட்டத்திலே சேரலாம்! இது ஆரம்பிச்ச புதுசுலே நான் தினம் பத்து பைசா வீதம் 30 நாளைக்குக் கட்டினேன்! 31-ஆம் நாள் எனக்கு ஆறு ரூபா- அதாவது ரெட்டிப்புப் பணம் கிடைச்சுது.

பூமா: மீனா!... நீ சொல்றதனால சேர றேன்! திலக், நம்ம அப்பா தினம் நம் கைச் சிலவுக்கு ஐம்பது பைசா தரார் இல்லே... அதுலேந்து இருபத்தைந்து பைசாவை இந்தத் திட்டத்திலே சேமிச்சு வைப்போம்!

திலக்: அப்படிச் சொல்லு! வா இன் னிக்கே போய்ச் சேர்ந்துடுவோம்!... பூமாக்கா.. ஆனா ஒண்ணு... அப்பாகிட்டே இதைப் பத்தி சொல்லிடாதே!



''உன் பையன் ஏன் அழுவறான்?''

''புற்றுக்குள்ளே அவனுக்கு வேர்க்கு தாம். அத ஏ.ஸி (A.C) பண்ணனுமாம்!''

— ப. தமிழழகன்

காட்சி 2

(இன்ஸ்பெக்டர், திலக், பூமா)

இன்ஸ்பெக்டர்: திலக்! பூமா... இப்படி வாங்க!

திலக்: என்ன அப்பா?

இன்ஸ்பெக்டர்: இன்னிக்கு மே மாசம் 8-ஆம் தேதி! ஆனா இந்தத் தினசரி கேலண்டர்லே மே மாசம் 5-ஆம் தேதி யோடு நின்னுக்கிட்டிருக்கு... காலண்டரை தினசரி கிழிக்க வேண்டியது உங்க வேலை தானே?.. ஏன் கிழிக்கல்லே?

பூமா: ஆமாம்ப்பா... அது வந்து மறந்து போச்சு?

இன்ஸ்பெக்டர்: ம். அது சரி, ராக்கெட் சிறு சேமிப்புத் திட்டத்திலே நீங்க ரெண்டு பேரும் சேர்ந்திருக்கீங்களா? என்ன முழிக் கறீங்க?... உண்மையைச் சொல்லுங்க! நீங்க பணம் கட்டறதைப் பாத்துட்டுத்தான் கேட்கறேன்.

திலக் : ஆமாம்ப்பா! நீங்க தர கைச் சிலவுக்கான காசுலேந்துதான் சேர்த்துக் கிட்டு வரோம்!

பூமா: முடிவிலே, ரெட்டிப்பா பணம் வரும்ங்கிற ஆசையினாலதான் சேர்ந்திருக் கோம்.

இன்ஸ்பெக்டர்: இது ஆசை இல்லை... பேராசை. என்னிக்கும் ஆபத்துதான்... அந்த சீட்டுக்காரன் நீங்க கொடுத்த பணத்தை ரெட்டிப்பா தருவான்னு என்ன நிச்சயம்?

திலக்: நோட்டீஸ்லே அழகா அச்சடிச் சுக் கொடுத்திருக்காங்க! பக்கத்து வீட்டு மீனாகூட சேர்ந்திருக்கா!

இன்ஸ்பெக்டர்: அதனால நம்பிட றதா?

திலக்: மீனா ஒருமுறை கட்டி, ரெட்டிப்புப்பணம் வாங்கியிருக்கா!

இன்ஸ்பெக்டர்: இருக்கலாம்! ஆனா தொடர்ந்து அவங்க நியாயமா நடந்துப் பாங்கன்னு சொல்ல முடியாது.

பூமா: தபாலாபீஸ்லேகூட எங்களைப் போன்ற மாணவ மாணவியர்க்கு சேமிப் புத் திட்டம் நடத்தறாங்க. அவங்க மட்டும் கடைசியிலே பணத்தைத் திருப்பிக் கொடுப்பாங்கன்னு என்ன நிச்சயம்?

இன்ஸ்பெக்டர்: தபாலாபீஸ் சேமிப்புத் திட்டம் அரசாங்கம் நடத்தற திட்டம்! அர சாங்கம் யாரையும் எப்பவும் மோசடி செய் யாது. ஆனா நீங்க பணம் கட்டிக்கிட்டு வர ராக்கெட் சேமிப்புத் திட்டத்தை ஒரு தனி மனிதன்தான் நடத்தறான்... தனி மனிதர் நடத்தற திட்டங்களை எப்பவும் நம்பமுடியாது. முதல்லே நம்பிக்கையா நடந்துப்பாங்க... அப்புறம் அகப்பட்ட பணத்தைச் சுருட்டிக்கிட்டு ஓடிடுவாங்க! பல பெரிய கம்பெனிகளே கூட பெரியவங் களையே இப்போ ஏமாத்திக்கிட்டு வருது... எனக்கும் இந்த 'சத்யன்' மேலே சந்தேகம் ஏற்பட்டிருக்கு!

திலக்: அப்போ கட்டின பணத்தை இன்னிக்கே திருப்பிக் கொடுத்துடும்படி சொல்லலாமா?

இன்ஸ்பெக்டர்: வேண்டாம்! நீங்க கேட்டாலும் அவன் இப்ப திருப்பித் தர மாட்டான்! ஆமாம். நீங்க பணம் கட்ட ஆரம்பிச்சு எவ்வளவு நாளாச்சு?''

திலக்: இன்னியோடு 97 நாள் ஆச்சு... இன்னும் நாலு நாள்ளே ரெட்டிப்பு பணம் கிடைச்சுடும்! அவன் பார்க்க நல்ல வனாகத்தான் இருக்கான். நிச்சயம்

எங்களுக்கு ஐம்பது, ஐம்பது ரூபாய் திருப்பிக் கொடுத்துடுவான்.

இன்ஸ்பெக்டர்: சரி! பணம் திரும்பிக் கிடைக்கறதா இல்லையான்னு பொறுத்திருந்து பார்க்கலாம்! நாளைக் காலையிலே சீட்டுப் பணம் கட்டப் போறதுக்கு முன்னால என் அறைக்கு வந்து, என்னை மறக்காமப் பாத்துட்டுப் போங்க! உங்களுக்கு ஒரு முக்கிய வேலையிருக்கு!

காட்சி 3

திலக், பூமா, சீட்டுக்காரன்

திலக்: சீட்டுக்காரரையா... என்ன வழக்கம்போல 'பிஸி'யா?

சீட்டுக்காரன்: ஆமாப் தம்பி! ஆயிரம் பேர் சேர்ந்திருக்காங்களே! அடேடே... என்னம்மா பூமா! புதுச் சட்டை புதுப் பாவாடையெல்லாம் போட்டுக்கிட்டிருக்கே? என்ன விசேஷம்?

பூமா: இன்னிக்கு எனக்கு 'பிறந்த நாள்' சீட்டுக்காரரையா! அதுக்காகத்தான் உங்களுக்குக்கூட வீட்டுலேந்து 'பாதாம்கீர்' கொண்டு வந்திருக்கோம்! இந்த ஜாடி நிறைய இருக்கு!

சீட்டு: அப்படியாம்மா! உனக்கு என் 'கன்பியூஷன்ஸ்'!

பூமா: (சிரிப்புடன்) கன்பியூஷன்ஸ்! இல்லே! "கன்கிராஜு" லேஷன்ஸ்"னு சொல்லணும்!

சீட்டு: ஹ்ஹி... ஹி ஆமாம்!

பூமா: திலக்! உங்கிட்டே இருக்கிற டப்ளரை அப்பா சொன்னபடி, நல்லா துணியால துடைக்க இந்த மேஜை





விடுமுறை

வேதனை தேர்வு முடியுது
விடுமுறை நாளும் தொடருது
சாதனை யாக அனைவரும்
சுற்றி அலைந்து திரியுது.

கோடை வெயில் கொதிக்குது
குழந்தை நெஞ்சம் குதிக்குது
ஆடை வெல்லாம் வியர்வையில்
அமுங்கி நல்லா குளிக்குது.

சினிமா நாடகம் பூங்கா
சிக்கி ரமாய் நிறையுது
இனிமை கடற்கரை வெங்கும்
எளிதாய் கூட்டம் கூடுது.

விடுமுறை யின்ப மளிக்குது
விடம்போல் தேர்வு முடிவதும்
நடுவில் வந்து தொலைக்குது
நாடி நரம்பும் துடிக்குது.

தேர்ந்த மாணவர் களுக்கு
தேடிப் பரிசு கிடைக்குது
தேரா மாணவர் களுக்கு
திடீர் அடியும் கிடைக்குது.

- வேட்டைநல்லூர் தமிழன்பன்

மேலே வை!

சீட்டு: அப்பா சொன்னாரா?

பூமா: ஆமாம்! கிளாஸ் டம்ளர்லே தூம்பு தூசு இல்லாம 'பளிச்'சின்னு துடைச்ச பிறகு பாதாம் கீரை விடுங்க'ன்னு சொல்லி அனுப்பிச்சாரு!

சீட்டு: பலே! பலே!... விடு!... போதும்!... ம்!... ரொம்ப நல்லாயிருக்கும்மா... போதும்! இந்தா டம்ளர்?

பூமா: இதோ இந்த அட்டைப் பெட்டியிலே அப்படியே வச்சுடுங்க!

திலக்: சீட்டுக்காரையா... உங்களை நாங்க ரொம்ப நேசிக்கறோம்!... உங்க போட்டோ ஒண்ணு எங்களுக்கு வேணும்!

சீட்டு: எங்கிட்டே ஒரே ஒரு போட்டோதான் தம்பி இருக்கு?

திலக்: பரவாயில்லை! கொடுங்க! பக்கத்து ஸ்டுடியோவிலே ஒரு 'காபி' எடுத்துக்கிட்டு இப்பவே கொடுத்துடறோம்!

சீட்டு: நல்ல குழந்தைங்க... இந்தாங்க போட்டோ! பத்திரமா திருப்பிக் கொடுத்துடுங்க!

காட்சி 4

இன்ஸ்பெக்டர், திலக், பூமா

இன்ஸ்பெக்டர்: பூமா!... திலக்! என்ன இது... ரெண்டு பேரும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டிருக்கீங்க?

திலக்: அப்பா... நீங்க நினைச்சபடியே எல்லா சீட்டுப் பணமும் போயிடுத்துப்பா...

பூமா: ஆமாம்ப்பா! நூறு நாள் நேத்தோடு முடிஞ்சு போச்சு! இன்னிக்குக் காலையிலே சீட்டுக்கடைப் பக்கம் போயிருந்தோம்! கடை மொத்தம் காலி... சத்யன் ஊரை விட்டே போயிட்டதா எல்லாரும் பேசிக்கறாங்க!

திலக்: உங்களுக்குத் தெரியாம பணத்தைக் கட்டி நாங்க நல்லா ஏமாந்துட்டோம்... 50 ரூபா அனாவசியமா போயிட்டுது... (பூமா கண்ணைக் கசக்கி அழுகிறாள்)

இன்ஸ்பெக்டர்: ம்...ம்... பூமா அழாதே! ... சொன்னா கேளு!... உங்க பணம் எங்கேயும் போகல்லே... பத்திரமாயிருக்கு!

திலக்: என்ன! எங்க பணம் பத்திரமாயிருக்கா?

இன்ஸ்பெக்டர்: ஆமாம்! இதோ நீங்க கொண்டு வந்த சத்யன் போட்டோவை யும், இந்த போட்டோவையும் நல்லா

பாருங்க! இவன் சத்யன், உங்களுக்கு நல்லா தெரியும்!... இவன் யாரு, பாத்திருக்கீங்களா?

திலக்: இல்லை, பார்த்ததில்லை.

இன்ஸ்: இல்லை, பார்த்திருக்கீங்க... இவனும் இதே சத்யன்தான்!

பூமா: அப்படியா?

இன்ஸ்: ஆமாம்! இந்த சத்யன் ஒவ்வொரு ஊர்லேயும் ஒவ்வொரு மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு, உங்களை மாதிரி சிறுவர், சிறுமிகளை இப்படி ஏமாத்திக்கிட்டு வரான். இவன் பெரிய கேடி. போன மாசம் வேலூர்லே மொட்டைத் தலையோடு இப்படி சீட்டுக்கடை நடத்தி இவன் வசையா போலீஸ்லே மாட்டிக்கிட்டான். அப்போ பிடிச்ச போட்டோதான் இது! தண்டனை முடிஞ்சபிறகு மறுபடியும் சென்னைக்கு வந்து, இப்படி மீசையும் தொப்பியும் வச்சுக்கிட்டு சீட்டுக்கடை நடத்தியிருக்கான். இவனோட உண்மையான பேர் இருளப்பன்... இவன் கைரேகைகளை போலீஸ் ஸ்டேஷன் ரிகார்டுலே பதிஞ்சு வச்சிருக்கோம்... நீங்க நான் சொன்னபடியே அன்னிக்கு அவனுக்குப் பாதாங்கீர் தர சாக்கிலே, அவன் கைரேகைகள் படிஞ்ச டம்ளரை எங்கிட்டே கொண்டு வந்து கொடுத்தீங்க... அந்தக் கைரேகைகளை ஒப்பிட்டுப் பார்த்தபோது, இந்த சத்யன்தான் அந்த இருளப்பன்'னு தெரிஞ்சது!.

பூமா: அப்புறம்?

இன்ஸ்பெக்டர்: அவனைக் கைது செய்ய கடைக்குப் போனோம். கடை காலியாயிருந்தது... உடனே ரயில் நிலையம், பஸ் நிலையம் எல்லா இடத்திலேயும் ஜீப்புகளை அனுப்பி வலை போட்டுத் தேடினோம்... எங்க முயற்சிக்கு பலன் கிடைச்சது... ஆளும் கிடைச்சுட்டான். அவன் சுருட்ட நினைச்ச பணமும் கைக்குக் கிடைச்சுட்டுது! அதனால எல்லார் பணமும் திரும்பக் கிடைச்சுடும்!

திலக்: அப்பாவுக்கு எங்கள் வாழ்த்துகள்!

பூமா: அப்பா, நாங்க உங்களைக் கேக்காம உங்களுக்குத் தெரியாம இப்படி நடந்துக்கிட்டதுக்காக மன்னிப்புக் கேக்கறோம்!

இன்ஸ்: இனிமேலாவது இது மாதிரி விஷயங்களை தூங்காம, விழிப்போடு சிந்திச்சு முடிவெடுங்க... பெரியவங்க யோசனையைக் கட்டாயம் கேளுங்க!



ஈற்று வாக்கியக் கதைப் போட்டி

இது விடுமுறை காலமல்லவா? உங்களுடைய அறிவுக்கு வேலை தர வேண்டாமா? அதற்காகத்தான் இந்தப் போட்டி. இந்தக் கதை ''....விழுந்து விழுந்து சிரித்தான் அல்லது சிரித்தான்'' என்று முடிய வேண்டும். இது சமூகக் கதையாக இருக்கலாம்; வரலாற்றுக் கதையாக இருக்கலாம்; ராஜராணிக் கதையாக இருக்கலாம். ஆனால், கதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்; உள்நாட்டுக் கடிதத்தில் (INLAND LETTER) எழுதப்பட்டிருக்க வேண்டும். கதை உங்கள் சொந்தக் கற்பனை தான் என்பதற்கு உங்கள் தாய் அல்லது தந்தை அல்லது ஆசிரியரிடம் ஒப்புதல் வாங்கியனுப்ப வேண்டும். முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தரவேண்டும். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. **பரிசு பெறாத அல்லது வெளியிடத் தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திருப்பி அனுப்ப இயலாது.** இது குறித்து எந்தக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முடிவு தேதி 31.5.97

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097.



எங்கள் ஊரில் நடந்தது!


நல்ல நடத்துனர்!

திருச்சியிலிருந்து வேதாரண்யம் செல்லும் சோழன் பேருந்தில் வந்து கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. பயணிகள் தங்களுக்கு அருகில் உள்ள 'ஷட்டர்களை' மூட ஆரம்பித்தனர். அதில் பல ஷட்டர்க ளை மூடவே மிகுந்த சிரமமாக இருந்தது. அப்போது நடத்துனர் தனது பணப்பையிலிருந்து ஒரு கோணி (தைக்கும்) ஊசியை எடுத்து அதன் மூலம் அது போன்ற ஷட்டர்களை மூடிக் கொடுத்தார். பொதுவாக பேருந்து நடத்துனர்களின் செயல்பாட்டில் முகம் சுளிக்கும் பயணிகள் அன்று நடத்துனரின் செயலை வெகுவாகப் பாராட்டியதைப் பார்த்தபோது ஆச்சரியமாகவும், மனதுக்கு இதமாகவும் இருந்தது.

மன்னார்குடி, மு. தனகோபாலன்.

கால்குலேட்டர் அளவு

ஆசிரியர் எங்களை ஒருநாள் சில பழமொழிகளை அறிந்து வர வேண்டும் என்று கூறினார். அடுத்த நாள் வகுப்பில் ஒவ்வொரு மாணவராக தனக்குத் தெரிந்த பழமொழிகளைக் கூறினர். ராம்குமார் என்ற மாணவன் எழுந்து, "கற்றது கால்குலேட்டர் அளவு; கல்லாதது கம்ப்யூட்டர் அளவு" எனக் கூறினானே பார்க்கலாம்.



இராசிபுரம், எஸ். செல்வராஜ்.

கேரட்

எங்கள் ஊர் காய்கறி வியாபாரி ஒருவர் வசதி படைத்தவர்;

படிப்பறிவற்றவர். அவர் வைர நகை விற்பனையாளரான என் நண்பனின் தந்தையாரிடம் சென்று வைர மோதிரம் கேட்டிருக்கிறார். அதற்கு அவர் எத்தனை காரட்டில் வேண்டும்? என்று கேட்டிருக்கிறார். அதற்குக் காய்கறி வியாபாரி "காரட்தான் மூட்டை மூட்டையாய் வைத்திருக்கிறேனே? காரட் உணவுப் பொருள். அதில் எப்படி மோதிரம் செய்வீர்கள்?" என்று ஒரே மூச்சில் பொரிந்து தள்ளியிருக்கிறார். என் நண்பனின் தந்தை பொங்கியெழுந்த சிரிப்பைச் சமாளித்து, "ஐயா, தங்கத்தைக் கிராமில் கூறுவது போல் வைரத்தின் மதிப்பை காரட் என்று சொல்வோம். நீங்கள் காரட் என்றவுடன்



காய்கறியை நினைத்து விட்டீர்கள் என்று விளக்கிக் கூற அவரும் சிரித்து விட்டார்.

புதுக்கோட்டை, வி. அடைக்கம்மை.

ஏமாறாதே!

'கிரசின்' வாங்க, ரேஷனுக்குப் போனேன். பெண்கள் கியூ நீண்டிருந்தது. ஆண்கள் கியூ சிறியது. அதில் நடுவில், 6 அல்லது 7 வயது பையன் ஒருவன் நின்றான். அவனுக்குத் துணையாக, அவன் அம்மா,




கடையில் ஒரே கூச்சல், குழப்பம்! அப்போது திடீரென்று ஓர் அம்மையார் வந்தார். ஆண் வரிசையில், பையன் அருகில் நின்ற அம்மாவைப் பார்த்து, "என்ன லட்சுமி? உன்னைப் பாக்கத்தான் வந்தேன். இதாரு சுகன்யாவா? சுகிக்குட்டி...! என்ன இவளுக்கு ஆம்பள டிரஸ் போட்டிருக்கே? ஒரே பொண்ணுண்ணா...?" அந்த அம்மையார் பேசிக் கொண்டே போனார். சீக்கிரம் கெரசின் வாங்க, அந்த அம்மாள் செய்த தந்திரத்தை அனைவரும் புரிந்து கொண்டு, பிலுபிலுவென அவரிடம் சண்டைக்குப் போயினர். பையனை அழைத்துக் கொண்டு பேசாமல் பெண்கள் வரிசையில் வந்து நின்றார் அவர்!

திருப்பத்தூர் - 2,
தேவந்தி துரைராஜ்.

பாஸ்!

ஒருநாள் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு பள்ளி நிறுத்தத்தில் சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏறினார்கள். அதற்குள் நடத்துனர் "பாஸ் இல்லாதவங்க எல்லாம் டிக்கெட் எடுங்க" என்றார். பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டிருந்ததைத்தான் கூறினார். அந்தக் கூட்டத்தில் ஒரு குறும்புக்கார



மாணவன், "இன்னும் பரீட்சையே நடக்கவில்லை. அதற்குள் பாஸ், ஃபெயில் எப்படித் தெரியும்?" என்றானே பார்க்கலாம்!

மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

முதலில் சுற்றியவர்


அன்று ஆசிரியர் சமூக அறிவியல்



பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். அவர் இடையில் கேள்வி கேட்கும் பழக்க முடையவர். அவர் நடத்திக் கொண்டு இருக்கும் போது பாடத்தைக் கவனிக் காமல் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த ஒருவன் அவர் கண்ணில் அகப்பட்டு விட்டான். உடனே அவனை எழுப்பி, "உலகை முதலில் சுற்றியவர் யார்?" என்று கேட்டார். அவ்ன் சிறிதும் யோசிக் காமல், "வினாயகர்" என்று கூறினான்.

வெள்ளயாம்பட்டு,
கா. அனந்த செயன்.

வாட்ச்!



என் அக்கா மகள் கௌசி. ஐந்தாம் வகுப்பு படிக்கிறாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் "நன்றாகப் படி" என்று அட்வைஸ் செய்வேன். அவளோ, "எனக்கு கணக்குப் பாடம்தான் சரியாக வரவில்லை. பாக்கியெல்லாம் படித்து விடுவேன்" என்பாள். அவள் கணக்கிலே நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக அவளிடம், "நீ கணக்குல நூறு மார்க் எடுத்தால் முன்னூறு ரூபாய்க்கு கடிகாரம் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தேன். அரையாண்டுத் தேர்வு மார்க் முடிவு வந்தது. கணக்கிலே மட்டும் ஐம்பது மார்க்கும் மற்ற பாடங்களில் அதைவிட அதிகமும் எடுத்திருந்தாள். "இந்தாங்க மார்க் ஷீட் பாருங்கள். எனக்கு வாட்ச் வாங்கித் தாருங்கள்" என்றாள். மார்க்கைப் பார்த்துவிட்டு, "கணக்கிலே ஐம்பது மார்க்தானே வாங்கி இருக்கிறாய்?" என்றேன். அதற்கு அவள், "நூறு மார்க்குக்கு முன்னூறு ரூபாய் வாட்ச தருவதாகச் சொன்னீர்களே, ஐம்பது மார்க்குக்கு நூற்று ஐம்பது ரூபாய்க்கு வாங்கித் தாருங்கள்" என்றாளே பார்க்கலாம்.

இரு கை!

அன்று எங்கள் பள்ளியில் 'லீடரை' தேர்ந்தெடுக்கும் நாள். இரண்டு மாணவர்கள் போட்டிக்கு கொண்டு வரப்பட்டனர். சுரேஷ், ரமேஷ் என்ற இரு மாணவர்கள். ஒருவனுக்கு கையை உயர்த்தி விட்டு மற்றொருவனுக்கும் கையை



உ... ருந்தக் கூடாதென
ஆசிரியர் முன்பே
விளக்கி சொல்லவும் ஒரு
குறும்புக்கார மாணவன்
இருவருக்காகவும் கையை
உயர்த்தினான். இதை ஆசிரியர்
கவனித்து விட்டு கேட்டபோது, "சார்
ரமேஷுக்கு வலது கையை
உயர்த்தினேன் சார்; சுரேஷுக்கு
இடதுகையை உயர்த்தினேன் சார்"
என்றானே பார்க்கலாம்.

கத்திப்பட்டு,
இராம. ஜெயகாந்தன்.

ஆடு

நாங்கள் பள்ளிக்குச்
சென்று கொண்டிருக்கும்போது
அங்கே ஒரு கழனியில்
ஒரு நடுத்தர வயதுக்காரரும்
ஒரு சிறுவனும் இருந்தனர்.
அப்போது கழனி நெல்லை
ஒரு ஆடு மேய்ந்து கொண்டிருந்தது.



அப்போது அந்த நடுத்தர
வயதுக்காரர் சிறுவனைப்
பார்த்து, "ஆடு, ஆடு" என்றார்.
அவன் ஆடினான். அவர் மறுபடியும்,
"ஆடு, ஆடு" என்றார் அவனும்
ஆடினான். இதனால்
அவர் ஆட்டைக் கூட
கவனிக்காமல் சிரித்தே விட்டார்.
அந்த ஆடும் வயிறு நிரம்ப
மேய்ந்து விட்டது.

செஞ்சி,
பி. சீனுவாசன்.



சி. எம். என்றால் என்ன?

அன்று, எங்கள் ஆங்கில ஆசிரியர்
ஆங்கில இலக்கணம் நடத்தினார்.
அப்போது 'The CM is attending a meeting
at present' என்ற வார்த்தையை
எழுதிவிட்டு அதை ஒரு மாணவனை
உச்சரிக்கச் சொன்னார். பிறகு
இன்னொரு மாணவனை எழுப்பி
அதிலுள்ள 'CM' என்பதற்கு விரிவைக்
கேட்டார். அவன் உடனே
"சென்டிமீட்டர்" என்றானே
பார்க்கலாம்.

அனந்தபுரம், இராம. ஜெயகாந்தன்.

தனக்கு வந்தால்...



வியாசர்புரத்தை ஒரு திருடன் கலக்கிக் கொண்டிருந்தான். அவ்வூரில் இருந்த மக்கள் விலை உயர்ந்த பொருட்களை இழந்து வருந்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஊரைச் சேர்ந்த சிறுவன் ஆழ்வார் எப்படியாவது அந்தத் திருடனுக்குப் புத்தி புகட்ட எண்ணினான்.

ஒரு நாளிரவு ஆழ்வார் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தான். பக்கத்து வீட்டில் ஏதோ சத்தம் கேட்பதாகத் தோன்றியது.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஊரையே கலக்கிக் கொண்டிருந்த அந்தத் திருடன் அடுத்த வீட்டிலிருந்து பாத்திரம் பண்டங்களை எடுத்



துப் போவதைப் பார்த்தான் ஆழ்வார்.

அன்று பௌர்ணமியாதலால் நிலா வெளிச்சத்தில் திருடனுடைய முகம் ஆழ்வாருக்கு நன்கு தெரிந்தது. வீட்டில் பெரியவர்கள் யாருமில்லை. என்ன செய்வது என்று ஆழ்வார் தவித்தான்.

எப்படியானாலும் திருடன் ஊர் எல்லையைத் தாண்டித்தான் போவான். திருடன் கிளம்பிச் சென்றதும் ஆழ்வார் ஒரே ஓட்டமாகக் குறுக்கு வழியில் சென்று அங்கே இருந்த கிணற்றருகே உட்கார்ந் தான்.

'அச்சம் தவிர்' என்ற பாரதியின் புதிய ஆத்திசூடியைப் படித்தவன் ஆழ்வார். அதனால் அந்த இரவில் தனியே அங்கு [illegible]


அ.சு. கிருஷ்ணன்

இருக்க அவன் சிறிதும் பயப்படவில்லை.

திருடன் வரும் காலடி ஓசை கேட்டது. ஆழ்வார் பலமாக அழுவது போல நடித்தான்.

"ஏய், இராத்திரியில் கிணற்றருகே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" - அதட்டலான குரலில் திருடன் கேட்டான்.

"தண்ணீர் எடுக்கலாம் என்று கையில் கொண்டு வந்திருந்த வெள்ளிச் சொம்பை கிணற்றில் கயிறு போட்டு இறக்கினேன். ஆனால் சொம்பு கிணற்றுள்ளேயே விழுந்து விட்டது" - விசும்பியபாடியே ஆழ்வார் கூறினான்.



வெள்ளிச் சொம்பு என்று ஆழ்வார் கூறியதுமே திருடனின் மூளை, மின்னல் வேகத்தில் செயல்படத் தொடங்கியது.

எப்படியாவது கிணற்றில் இறங்கி வெள்ளிச் சொம்பைத் தேடி எடுத்து விட வேண்டும். பிறகு மேலே வந்த பிறகு சிறுவனை ஏமாற்றி சொம்புடன் ஓடிவிடலாம் என்று திருடன் நினைத்தான்.

"வேணும் என்றால் கிணற்றில் பையை இறங்கி சொம்பை எடுத்துத் தரட்டுமா? என் சட்டை வேட்டியை இந்தக் கல்லில் வைக்கிறேன். பத்திரமாகப் பார்த்துக்கொள்" - என்று கூறிய திருடன் கிணற்றில் குதித்தான்.

ஆழ்வார் உடனே திருடனின் உடைகளையும் பையையும் எடுத்துக் கொண்டு ஒரு புதரின் அருகே ஒளிந்து கொண்டான்.

திருடனோ கிணற்றின் ஆழம் வரை சென்று பார்த்தும் கூட சொம்பு கிடைக்காததால் களைத்துப் போய்த் தேடுவதை நிறுத்திவிட்டு மேலே வந்தான்.


மேலே வந்தவன் தன்னுடைய உடைகளும், பையைப் பார்த்துக் கொள்ளச் சொன்ன சிறுவனும் காணாமலிருப்பதைக் கண்டு திகைத்தான்.

தன் பொருள் காணவில்லை என்று தெரிந்தவுடன் அந்தத் திருடனால் ஓரிடத்தில் நிற்க முடியவில்லை. அவனுடைய மனச்சுமை அதிகரித்தது. இப்படியும், அப்படியும் அலைந்தான். சட்டை, வேட்டி இல்லாமல் எப்படி நடந்து செல்வது? விடிந்தால் அவனுடைய நிலையைக் கண்டு ஊரே சிரிக்குமே என்று நினைத்ததும் அவன் திண்டாடிப் போனான்.

"இதோ இருக்கு உங்க உடைகளும், பையும். எடுத்துக் கொள்ளுங்கள். பொருளைத் திருட்டுக் கொடுத்தவர்களுடைய வருத்தம் தெரிய வேண்டும் என்பதற்காகவே வெள்ளிச் சொம்பு கிணற்றில் விழுந்து விட்டதாகப் பொய் சொன்னேன். ஆடைகளையும் பையையும் எடுத்துக் கொண்டு சிறிது நேரம் மறைந்திருந்தேன்" என்று ஆழ்வார் கூறினான்.

"சிறுவனாக இருந்தாலும் உனக்கு எவ்வளவு அறிவு? உழைப்பதற்குச் சக்தி இருந்தும் இவ்வளவு நாள் திருடிக் கொண்டிருந்த என் செயல் எனக்கே அவமானமாக இருக்கிறது. தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். அதே போல என் சொந்தப் பொருளை இழந்தவுடன்தான் எனக்கு அறிவே வந்தது. இந்தப் பையில் சற்று முன்பு திருடிய பொருள்கள் இருக்கின்றன. இவைகளை திருடிய வீட்டிலேயே வைத்து விடுகிறேன். இனி எப்போதும் உழைத்தே உண்பேன்"- கைக் கூப்பிய படியே திருடன் கூறினான்.

ஆழ்வார் மனநிறைவுடன் வீடு திரும்பினான்.




'மாலுமிகளின் நண்பன்'

'பிலிம்சோல்லைன்' என்பது என்னவென்று தெரியுமா? கப்பலின் பக்கவாட்டில் ஒரு நேர்க்கோடு வரையப்பட்டிருக்கும். இந்தக் கோட்டின் பெயர்தான் பிலிம்சோல்லைன். எதற்காக இந்த கோடு? இந்தக் கோடு நீரில் மூழ்கும் அளவுக்குத்தான் கப்பலில் சரக்குகளின் பாரம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து தான்!


பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கப்பல்களில் அளவுக்கு அதிகமாகவே சரக்குகளை ஏற்றி விடுவார்கள். கப்பல்கள் சரியராகப் பழுது பார்க்கப்படுவதும் இல்லை. எனவே அதிக பாரம் காரணமாக பலகப்பல்கள் கடலில் மூழ்கி கப்பலோட்டிகள் பலரும் மரண மடைந்துள்ளனர். எனவே, இதைத் தடுக்க 1876-ம் ஆண்டில் சாமுவெல் பிலிம் சோல் என்னும் இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் (இவர் ஒரு நிலக்கரி வியாபாரியும் ஆவார்) ஒரு தனியார் மசோதாவை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சட்டம் ஆக்கும்படி செய்தார். அதன்படி கப்பல்களுக்கு பல கட்டாயமான பாதுகாப்பு முறைகள் அமுல்படுத்தபட்டன. அதில் ஒன்று தான் இந்த உறுப்பினர் பெயரில் அமைந்த 'பிலிம்சோல்லைன்' என்பது. இவரை 'மாலுமிகளின் நண்பன்' என அன்புடன் அழைக்கின்றனர்.

— எஸ். ஆலன்



தங்கத் தாமரை!
கதை அமைப்பு : ரே
ஓவியம் : சசி
வேதகிரி மன்னன் பூபதிக்குப் பிறந்த நாள். புலவர்கள் வாழ்த்தினர்.
ஆலயத்தில் விசேஷ பூஜை
ஆயிரம் பேருக்கு அன்னதானம்
ஆயிரம் பேருக்கு புடைவை வேட்டி தருமம்
உங்களைப் போல் தரும சீலர் உண்டா?


கலியுகக் கர்ணன் நீங்கள்தான்!
தனிகாவியமே பாடப் போகிறேன்!
அன்று இரவு, புகழ்ச்சியால் தன்னை மறந்து
என்னைப் போல் நல்லவர் யார் உண்டு?
மறுநாள் காலையில்—
மன்னவா, ஆலயக் குளத்தில் ஓர் அழகான தாமரை பூத்திருக்கு!
மன்னரை அழைத்து வாருங்கள் என்று அசரீரி கேட்டது!
தங்கத்தால் ஆன தாமரை மன்னா!
அப்படியா! உடனே வருகிறேன்.


ஆலயக் குளத்தில்—
நேற்றுவரை இந்தத் தங்கத் தாமரை இல்லையா?
இல்லை மன்னா!
காலையில்தான் தோன்றியிருக்கு! தாமரை எப்படி ஜொலிக்கிறது பாருங்கள்!
யாராவது எடுக்கப் போனால் நகர்ந்து விடுகிறது!
அசரீரி கேட்கிறது—
நல்லவர்கள் அழைத்தால், தங்கத் தாமரைதானே வரும்!
இது தெய்வலோகத் தங்கத் தாமரை! இந்த ஆண்டு முழுவதும் இது இருக்கும். அதற்குள் நல்லவர்கள் வரவில்லை என்றால் மறைந்துவிடும்.



அமைச்சரே, ஒவ்வொருவராக வந்து, படிகளில் இறங்கி தங்கத் தாமரையை அழைக்கச் சொல்லுங்கள்...
முதலில் யாரை அழைக்கச் சொல்வது?
பூக்கட்டிப் பண்டாரத்தை அழையுங்கள். என் தாத்தா காலத்தில் இருந்து பூக்கட்டும் திருப்பணி செய்து வருபவர்.
பூக்கட்டிப் பண்டாரம் வந்து—
தங்கத் தாமரையே அருகில் வா...!
தாமரை ஒதுங்கிப் போகிறதே!
ஆலய குருக்கள் வந்து—
எத்தனை காலமாக பக்தி சிரத்தையுடன் பூஜை செய்கிறேன்? நான் நல்லவன் இல்லையா? தங்கத் தாமரையே வாயேன் என்னிடம்?



தாமரை போய்விட்டதே!
எல்லோரும் முயன்று விட்டார்கள். இனி என்முறைதான்.
புடைவை, வேட்டி, அன்னதானம் செய்து எத்தனை கோவில்கள் கட்டியிருக்கிறீர்கள்! தங்கத் தாமரை உங்களுக்குத்தான் காத்திருக்கிறது. அரசே. ம்... இறங்கி அழையுங்கள்...
தங்கத் தாமரையே... என்னிடம் வா...
என்னது! தாமரை வேகமாக நகர்ந்து போய்விட்டதே!
தாமரையே... நீ பித்தலாட்டம். தரும சீலரான மன்னரைவிடவா நல்லவர் இருக்கிறார்கள்?
இருக்கிறார்கள். அவர்கள் வந்து அழைக்கும்வரை இங்கேயே காத்திருப்பேன்


அன்றிரவு—
எத்தனையோ கோவில் கட்டி, ஆயிரம் பேருக்கு புடவை, வேட்டி, அன்ன தானம் செய்த நான் கூட நல்லவன் இல்லை என்றால் வேறுயார்தான் நல்லவர்!
நாட்கள் ஓடின. தங்கத் தாமரை குளத்திலேயே மிதந்தபடியே இருந்தது!
ஒருநாள் மன்னர் தனியாக வேட்டைக்குக் கிளம்பினார்
வழி தவறிவிட்டது
நமச்சிவாயா! நமச்சிவாயா!
குரல் கேட்ட திசையில் ஓடினார்.


மன்னர் விரைந்து—
முனிவரே! இது புதை குழி ஆயிற்றே? எப்படி சிக்கிக் கொண்டீர்கள்?
எனக்குப் பார்வை கிடையாது. அதனால்தான் விழுந்து விட்டேன்.
கையை நீட்டுங்கள். பிடித்து இழுக்கிறேன்.
மரத்தைப் பிடித்த கை நழுவிவிட, மன்னரும் புதை குழியில் விழுந்தார்!
ஐயோ!
இருவரும் மெல்லமெல்ல புதை குழிக்குள் அமிழ்ந்தனர்
என்னைக் காக்க வந்து நீங்களும் சிக்கிக் கொண்டு விட்டீர்களே!
சுள்ளி பொறுக்க வரும் வள்ளி கவனித்து விட்டு,
என்னடா அதிசயம்! சாமியார், ராஜா ரெண்டு பேரும் பேசிக்கிட்டு வந்து சிக்கிக்கிட்டீங்களா?




வள்ளி பரபரத்தாள். காட்டுக் கொடிகளைப் பின்னி கயிறாக்கினாள்.
ஒரு முனையை மரத்தில் கட்டி மறு முனையை அவர்களிடம் வீசி
கெட்டியாப் புடிச்சு மேலே ஏறி வாங்க...
இருவரும் மேலேறி வந்து –
என் உயிரைக் காத்த உத்தமி நீ!
எல்லா நலன்களோடும் வாழும்மா!
தாங்கள் சிக்கிக் கொண்டதை மன்னர் விளக்கிவிட்டு,
உன் பேர் என்னம்மா? அரண்மனைக்கு வா. நல்ல பரிசு தரேன்?
எம் பேரு வள்ளி. பரிசு கிரிசு எல்லாம் யாருக்கு வேணும் மகாராஜா? ஆபத்துல-சிக்கியவங்களை காப்பது மனித நியாயம். அதைத்தான் பண்ணினேன்.
உயிரைக் காத்த உனக்கு பரிசு தர வேண்டாமா? போன மாதம் என் பிறந்த நாளின் போது எத்தனை ஆயிரம் பேருக்கு சாப்பாடு போட்டு, வேட்டி புடவை தந்தேன் தெரியுமா?


அந்த ராசா நீங்கதானா?
ஆமாம் வள்ளி. நீயும் அன்னதானம், வேட்டி புடவை வாங்கிட்டியா?
உழைத்துச் சாப்பிட ரெண்டு கை இருக்கும் போது எதுக்குங்க அன்னதானம், வேட்டி புடவை? எனக்கு இதெல்லாம் பிடிக்காது.
ஏன் வள்ளி?
அன்னதானம் போட்டு, மக்களை அந்த ஒருநாள் சோம்பேறியாக்கிட்டீங்களே!
வள்ளி! நீ என்ன சொல்றே!
"ஆமாம் ராஜா. உங்களுக்கு வேணுமின்னா அது புண்ணியமா இருக்கலாம். அதை விட, உங்க பேர்ல ஒரு ஏரியை வெட்ட வைச்சு, அத்தனை பேரையும் உழைக்கச் சொல்லி கூலி தந்திருக்கலாம். அன்னதானம் மக்களை சோம்பேறியாக்கும்.
அப்படியானால் என் முன்னோர் ஆலயங்களில் அன்னதானம் செய்தது எல்லாம் தப்புன்னு சொல்றியா?
உழைக்க முடியாத ஊனமுற்றோர், வயதானவர்கள், வெளியூர் பயணிகளுக்கு மட்டுமே அது பயன்படுவதாக இருக்க வேண்டுமே தவிர, உழைக்கக் கூடியவர்களை சோம்பேறிகளாக்குவதாக இருந்து விடக் கூடாது என்கிறேன்.



எத்தனை தெளிவான சிந்தனை!
இலவசமாக சாதம் போடு வதை விட, ஒரு தொழிலைக் கற்க வைத்து, உழைக்க வைத்து, பிழைக்க வாய்ப்புத் தாருங்கள்.
நீ உழைத்துத்தான் பிழைக்கிறாயா வள்ளி?
ஆம் மன்னா. ஆற்றில் படகு ஓட்டிப் பிழைக்கிறேன். இரண்டு கைகளை ஆண்டவன் தந்திருப்பதே உழைத்துப் பிழைக்கத்தானே மன்னா?
அதனால் உன் கொள்கைப்படி பரிசு எதையும் ஏற்க மாட்டாய். அப்படித்தானே வள்ளி?
ஆம் மன்னா.
வள்ளி, என் பங்குக்கு நான் உனக்கு ஏதாவது வரம் தர விரும்புகிறேன். மறுக்காமல் ஏற்றுக் கொண்டால்தான் என் மனம் அமைதி அடையும்.
நான் என்ன கேட்டாலும் நடக்குமா?
கண்டிப்பாக நடக்கும்மா. கேள்? என்ன வேண்டும்?


தவமுனிவரே, பார்வை இல்லாததால் தானே நீங்கள் புதைகுழியில் சிக்கினீர்கள்?
ஆமாம். அதில் என்ன சந்தேகம்?
தங்களுக்குப் பார்வை கிடைக்க வரமருளுங்கள்.
ஒளிவெள்ளம் பாய்கிறது.
எனக்குப் பார்வை வந்து விட்டது வள்ளி! என்னை வென்று விட்டாய்! வசதியாக, செல்வச் சீமாட்டியாக வாழ வாய்ப்பு இருந்தும் பிறர் நலனுக்காக ஒரு வரத்தை விட்டுக் கொடுத்து விட்டாயே வள்ளி!
வள்ளி, நான் சந்தித்த மனிதர்களில் மாறுபட்டவள் நீ. என் தவத்தின் வலிமையால் உனக்கு சொர்க்கத்தில் இடம்கிடைக்க வைக்கிறேன்.



இந்த பூலோகத்தை விட உயர்ந்ததா சாமி சொர்க்கம்?
கண்டிப்பாக அங்கே பசி, உறக்கம் இருக்காது. பிறப்பு இறப்பு இருக்காது. பிணி, மூப்பு இருக்காது. மகிழ்ச்சியான வாழ்க்கை. முனிவர்கள் தவம்புரிவதும், புண்ணிய சீலர்களின் இலட்சியமும் சொர்க்கத்தில்இடம் பிடிக்கத்தான் அம்மா.
மாமுனிவரே! சுருக்கமாக, உழைக்க மனம் இல்லாத, உழைக்க விருப்பமே இல்லாத, மாற்றமே இல்லாத சோம்பேறிகளின் உலகம் என்று கூறுங்கள். எனக்கு அது வேண்டாம். உழைக்க வேண்டும். பசிக்க வேண்டும். உண்டு உறங்கி மகிழ வேண்டும். அன்புக்குக் கட்டுப்பட வேண்டும், அன்பு காட்ட மனிதர்கள் வேண்டும். என்னை மன்னியுங்கள்.
இரு வள்ளி. என் இராஜ்ஜியத்திலுள்ள ஆலயக் குளத்தில் அழகான தங்கத் தாமரை ஒன்று தோன்றியிருக்கிறது. அது தெய்வீகமானதாம். நல்லவர்கள் அழைத்தால் அருகே வருமாம்.
அப்படியா!


ஆமாம். நான் உட்பட மக்களெல்லாம் முயன்று பார்த்து விட்டோம். ஆனால் அது நெருங்கி வரவில்லை. நீ வந்து முயற்சி பண்ணக் கூடாதா வள்ளி?
மன்னியுங்கள் அரசே! நேரமில்லை. என் படகை எதிர்பார்த்து பயணிகள் காத்திருப்பார்கள். உங்களிடம் பேசியதில் தாமதமாகி விட்டது.
இன்று இல்லா விட்டாலும் நாளைக்கு வரக்கூடாதா வள்ளி?
இருக்கிற வேலையை எல்லாம் விட்டு விட்டு எல்லோரும் அதனிடம் சென்று அழைத்துப் பார்க்க வேண்டும் என்பதே நியாயமில்லாத வாதம். அது உண்மை யாகவே தெய்வீகத் தாமரையாக இருந் தால், யார் நல்லவர்கள் என்பது அதற்குத் தெரியாதா என்ன? அவர்களைத் தேடி அதுவே வரட்டும். நான் வருகிறேன்.
வள்ளி போனதும் –
வள்ளியைத் தேடிக் கொண்டுதான் தங்கத் தாமரை போகிறது முனிவரே!
ஆம் மன்னா. அவள் நமக்கெல்லாம் வழிகாட்டி! வாழ்க வள்ளி.

சிதறாது கவனம் தப்பாது குறி!

உலகத்தின் எல்லா நாடுகளிலும் சிறுவர் விரும்பி ஆடும் விளையாட்டு கோலி. கோலிகள் மண்ணால்தான் முதலில் செய்யப்பட்டு ஆடப்பட்டன. இவை உறுதியாக இருக்க செங்கல்லைப் போல் சுடப்பட்டு பயன்படுத்தப்பட்டன. சிந்துநதி நாகரிக காலத்தில் விளையாடப்பட்ட சுடப்பட்ட மண் கோலிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. பிறகு மாவுக் கல் கோலிகள்(LIME STONE). கல் கோலிகள் (தேய்க் கப்பட்டு உருட்டப்பட்டவை), இரும்பு கோலிகள், பீங்கான் கோலிகள், கண்ணாடி கோலிகள் என்று இவை எல்லாவற்றாலும் செய்யப் பட்டு ஆடப்பட்டன. உள்ளே இரும்பை வைத்து கடினமான பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட வண்ண கோலிகள் கூட இன்று வந்து விட்டன.



கோலி மிகவும் எளிமையான; ஆபத்து இல்லாத ஆட்டம். வீட்டுக்குள்ளேயே விளையாடலாம். குழிவைத்து விளையாட தோட்டமும் மண்தரையும் ஏற்றவை. வீட்டுக்குள் என்றால், வட்டம் வரைந்து ஆடலாம்.

வில், அம்பு விளையாட்டுக்கும், துப்பாக்கி சுடும் ஆட்டத்திற்கும் குறி வைத்தல் இன்றியமையாதது. கண்களும், கையும், வேக அளவும் இணைந்து செயல்பட வேண்டும். இதைப் போலவே கோலி ஆட்டத்திற்கும் குறிபார்த்து அடித்தல் இன்றியமையாதது. தரையில் உள்ள இலக்கை (அடிக்கப்பட வேண்டிய கோலி, அல்லது குழி) தாக்க, இடது கை ஆள்காட்டி விரல் நுனியில் வைத்து எய்தப்பட வேண்டிய கோலிக்கு, கண்ணால் குறிபார்க்க வேண்டும். துப்பாக்கி சுடல், வில்அம்பு- விளையாட்டுகளில் இலக்கும், கண்ணும், அம்பு/துப்பாக்கியும் ஒரே கோட்டில் கொண்டு வரப்பட்டு இலக்கு தாக்கப்படுகின்றது. ஆனால் கோலி ஆட்டத்தில், அடிப்பவனின் கண்கள்(முகம்) நிமிர்ந்து உயர்ந்திருக்கும். இலக்கு, (அடிக்கப்பட வேண்டிய கோலி) தரையோடுதரையாய் விலகி இருக்கும். இடது கை ஆள்காட்டி விரலின் நுனியில் கோலியை வைத்து, வலது கை விரல்களால் கோலியையும் விரலையும் பின்னுக்குச் சாய்த்து, இடது கை ஆள்காட்டி விரல் நுனியில் எதிர்ப்பு விசை யைத் திரட்டிக் கொண்டு வந்து இலக்கை நோக்கி அதைச் செலுத்த(அடிக்க) வேண்டும். எனவே கோலி ஆட்டத்தில் இலக்கு, இலக்கை அடிக்க வேண்டிய விசை செலுத்தும் முனை, பார்வை ஆகிய மூன்றும் முக்கோணமாக உள்ளன. இந்த மூன்றும் வில் அம்பு/துப்பாக்கி சுடுவதில் ஒரே கோட்டில் அமைகின்றன.

குஜராத்திலும், ராஜஸ்தானிலும் பெரியவர்கள் கூட கோலி ஆடுவார்கள். போட்டிகள் வேறு உண்டு.

குழந்தைகளுக்காகப் பாடல் எழுதும் கவிஞர்களைக் கோலி கவர்ந்திருக்கிறது. குழந்தைக் கவிஞர் பூனையின் கண்களை (கருமணி) கோலி குண்டுக்கு உவமையாக்கி, "கோலி குண்டுக் கண்களால் கூர்ந்து ஏனோ பார்க்கிறீர்?" என்று பூனையைக் கேட்கிறார்.


கோலிகளைக் கைகளால் தூக்கிப் போட்டு அடித்தும் ஆடுகிறார்கள். ஆனால் இது கோலி ஆட்டத்தின் அடிப்படையையே தோற்கடித்து விடுகிறது. குனிந்து இடது ஆள்காட்டி விரல் நுனிக்கு விசையைத் திரட்டி, கண்களால் குறி பார்த்து ஆடும் ஆட்டமே சிறப்பானது. இதனால் விரல்களுக்கு நல்ல பயிற்சி, குனிவதால் உடலுக்கு நல்ல பயிற்சி. கண்களுக்கும் நல்ல பயிற்சி.

— ரே

அட்டையில்: எஸ். பாஸ்கர்,

வண்ணப்படம் : ஸ்ரீஹரி.

ஈட்டி முடியார் சாபம்!



கரடு முரடான மலைப்பாதையில் பஸ் முக்கி முனகிப் போய்க் கொண்டிருந்தது.

இருள் கவிய ஆரம்பித்து விட்டதால், அதுவரை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பதாக இருந்த இயற்கைக் காட்சிகள், இப்பொழுது அச்சத்தையும் இனம் தெரியாத கலக்கத்தையும் தரத் தொடங்கியிருந்தன!

அழகுக் கிளைகளை நீட்டி அசைத்து, ''வணக்கம் வாருங்கள்!'' என்று வெளிச்சத்தில் கூறுவது போல் தலையசைத்த பிரும்மாண்டமான மரக்கிளைகள், இப்பொழுது கைகளை விரித்து விழுங்க அழைக்கும் அரக்கனைப் போல் தோன்றின! முகத்தை வருடி மகிழ்ச்சியைத் தோற்றுவித்த காற்றுகூட இப்பொழுது ஏதோ ஒரு இரகசியத்தைக் கூறுவதுபோல் கனத்து வீசியது!

விதம் விதமாகக் குரலெழுப்பி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்க வைத்த பறவைக் கூட்டம், "கசமுச" சத்தத்துடன் மரங்களை அடையும் ஒலி இப்பொழுது திருடனைக் கண்டு அஞ்சி கதவைத் தாளிடுவதுபோல் தோன்றியது!


சுற்றிலும் கும்மிருட்டு போர்வை போர்த்தியது. சில்வண்டுகளின் சத்தமும், நரிகளின் ஊளையிடு சத்தமும் தொடர்ந்து கேட்டன. 'சளசள'வென்று பேசிக் கொண்டு வந்த பயணிகள்கூடப் பேச்சை நிறுத்திக் கொண்டு விட்டனர். ஓர் இறுக்கமான சூழ்நிலை உருவாக்கிக் கொண்டிருந்தது.

"ஏண்டா, உங்க ஏலகிரி எஸ்டேட்டை இப்படி மலைப்பகுதியில் கொண்டுபோய் அமைச்சிருக்கீங்க? பேசாம மெரினா பீச்சிலோ, கிண்டியிலோ கொண்டு போய் வைச்சிருக்கக் கூடாது?" - ரமணிதான் கிண்டலடித்தான்.

பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லாம் சிரித்து அந்த நகைச்சுவையைத் தாங்களும் அனுபவித்ததைத் வெளிப்படுத்தினர்.

''மெரினா பீச்சல இந்த ஏலகிரி மலையை வைக்க உன் அறிவியல் மூளை ஏதாவது கண்டுபிடிச்சா, நீ விரும்பியபடியே ஏலக்காய் எஸ்டேட்டைக் கொண்டு வந்து வைச்சிடலாம். ஆனால் பாவம், பீச்சல தேங்கா, மாங்கா, பட்டாணி, சுண்டல்

சின்னபாபு



விக்கறவங்களும், டெல்லி மிளகாய் பஜ்ஜி விக்கறவங்களும்தான் திண்டாடுவாங்க" என்றான் பொன்முடி.

எல்லோரும் மறுபடி சிரித்தனர். பஸ், கொண்டை ஊசி வளைவில் திரும்பியது. சற்றுத் தொலைவில் சாலையில் ஏதோ சிவப்பு வெளிச்சம் ஆடியது.

"மேலே வர வேண்டாம்னு சிக்னல் தராங்க. டிரைவர் பஸ்ஸை நிறுத்துங்க" என்றான் பொன்முடி. பஸ் நின்றது. முன் விளக்குகளைப் போட்டு விட்டு, டிரைவர் கீழே இறங்கினார். "நானும் வரேன்" என்று கிளம்பினான் பொன்முடி.

"யாரும் பஸ்ஸை விட்டு இறங்காதீங்க. போன மாதம் இப்படித்தான் வழியில் பஸ்ஸை மறிச்சு நிக்க வைச்சு, நர பலிக்காக இரண்டு பேரைப் புடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க" என்று எச்சரித்தார் நடத்துனர்.

பஸ்ஸை விட்டு இறங்கியவர்கள் எல்லாம் அவசரம் அவசரமாக மறுபடி ஏறிக் கொண்டனர்!

பொன்முடியும் டிரைவரும் மட்டும் நடந்தனர்.

"என்ன முத்தையா! கண்டக்டர் புதுசா செய்தி சொல்றார்! நான் கேள்விப்படவே இல்லையே? உண்மைதானா?" என்று கேட்டான் பொன்முடி.

"இல்லை சின்னையா. பஸ்ஸில் இருக்கிறவங்க அத்தனைபேரும் இறங்கினாங்கன்னா, மறுபடி இவங்களை ஏத்தி, சரியா எல்லாரும் வந்திட்டாங்களான்னு 'செக்' பண்ணி பஸ்ஸை எடுக்கறது எத்தனை தொல்லை தெரியுமா? இருட்டுல யாராவது தவறிப் பள்ளத்துல விழுந்தால்கூட எல்லோருக்கும் தொல்லைதானே? அதான் இப்படிப் பயப்படுத்தியிருக்கிறார். ஆனால் ஒன்று சின்னையா, நரபலி தருவதை இந்த மலைவாழ் மக்கள் இன்னும் மறக்கலை. வெளியே தெரியாமல் அது பாட்டுக்கு அங்கொன்றும் இங்கொன்றுமா நடக்குது.

நல்லா பெருகிட்டால் இதெல்லாம் தன்னால் நின்னுடும்" என்றார் டிரைவர் முத்தையா.

இருவரும் சிவப்பு வெளிச்சத்தை நெருங்கி விட்டார்கள். ஹரிகன் விளக்கில், சிவப்புக் கண்ணாடிக் காகிதத்தை வைத்துச் சுற்றி, விளக்கை ஒரு மூங்கிலில் மாட்டி அதை அசைத்துக் கொண்டிருந்தார் ஒரு கிழவர்.

"கொண்டையா... என்னாச்சு?" கேட்டவர் டிரைவர் முத்தையாதான்.

"மேல்கையில, பாறை சரிஞ்சு பாதை மூடிப் போச்சு. கிழக் காம்பில் இருந்து கிரேன் வந்துதான் பாதை சரியாகணும். அவசர மானா மூலத்திட்டு வழியா திரும்பி சுத்திக் கிட்டுப் போங்க. இங்கே பாதை சரியாக ஆறு மணி நேரமாகும்"

டிரைவரும் பொன்முடியும் திரும்பினர்.

"ஐயா, எதிரே வரும் வண்டிக்கெல்லாம் தகவலை சொல்லிடுங்க" என்றார் பொறுப்புணர்ச்சியுடன் கிழவர்...


"சரி கொண்டையா" என்று நடந்தார் டிரைவர்.

இருவரும் பஸ்ஸில் ஏறி, ஆவலுடன் காத்திருந்த பயணிகளிடம் விஷயத்தை விளக்கினர். பயணிகளில் பெரும்பாலானவர்கள் மேற்குக் காம்புக்குப் போகின்றவர்கள். பஸ்ஸை மிகவும் கவனமாக ரிவர்ஸில் அடிஅடியாக நகர்த்தத் தொடங்கினார் டிரைவர். கண்டக்டரும், பொன்முடியும் பின்னால் பார்த்து விசிலடித்து வழி காட்டிக் கொண்டிருந்தார்கள். இருட்டில், மலைப்பாதையில் ரிவர்ஸில் வருவது என்பது எத்தனை பெரிய 'சவால்' என்பதை பொன்முடி அனுபவ பூர்வமாகக் கண்டு வியந்தான்.

ஒருவழியாக மூலத்திட்டுக்கு வந்து, சுற்று வழியில் மேற்குக் காம்புக்குப் போய்ச் சேரும் போது இரவு மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

பஸ் ஸ்டாண்டுக்கு பொன்முடியின் அப்பா





வும் அண்ணனும் காரோடு வந்திருந் தார்கள்.

"தம்பி வாங்க. பயணம் நல்லா இருந் ததா?" என்று வழக்கப்படியான கேள் வியைக் கேட்டு ரமணியை வரவேற்றார் பொன்முடியின் தந்தை.

"நீண்ட பயணமாக, புதுமையான பயணமாக இருந்ததுங்க. ரொம்ப அனுப விச்சு ரசிச்சோம்" என்று சிரித்தான் ரமணி.

எல்லோரும் பேசிக் கொண்டே கிளம்பினார்கள். ரமணிக்குக் கொலைப் பசி. அவன் சாப்பிட்டு விட்டுத் தனக்கு ஒதுக்கப்பட்ட ஓட்டல் அறையில் படுத்துக் கொண்டபோது மணி ஒன்றடித்தது.



"வெயிலைவிட மழை தான்டா உயர்வானது"

"எப்படிடா?"

"எவ்வளவு கடுமையா வெய் யில் அடிச்சாலும் ஸ்கூல் லீவு விடாதவங்க, கடுமையான மழைன்னா லீவு விட்டுடுவாங் களே!"

— சீர்காழி வி. ரேவதி

பொன்முடியின் தந்தை ஏலகிரி மலையில் பெரும்புள்ளி. பொன்முடியும் ரமணியும் சென்னையில் மாணவர் விடுதி யில் தங்கிப் படித்து வந்தார்கள். ரமணி யின் தந்தை கல்கத்தாவில் வங்கி மேலா ளர். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றலாகும் பணி. அதனால் அவன் படிப்பு பாதிக்கப்படாமல் இருக்க சென் னையில் விட்டு வைத்திருந்தார்.

பொன்முடியின் தந்தைக்கு இன்னும் இரண்டு நாட்களில் ஐம்பது வயது பூர்த்தி யாகிறது. ஜாதகப்படி பிறந்த நாள் இன் னும் இருபத்து மூன்று நாள் கழித்துத்தான். ஆங்கில தேதிக் கணக்குப்படிதான் இது. நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் இதைக் கொண்டாட விரும்பியதால் பொன்முடியும் கலந்து கொள்ள வந்திருந் தான். இந்த சாக்கில் தங்கள் ஏலகிரி எஸ்டேட்டைப் பார்க்க ரமணியையும் கட் டாயப்படுத்தி அழைத்து வந்திருந்தான் பொன்முடி.

மறுநாள் ரமணி எழுந்திருக்கும்போது மணி ஒன்பதாகி விட்டது. பொன்முடி தான் வந்து அவனை எழுப்பினான். பிரஷ்ஷையும் பேஸ்ட்டையும் எடுத்துக் கொண்டபோது, ரமணிக்கு என்னவோ தோன்றியது. பைக்குள் கையை முழுக்க விட்டுத் தேடினான். முகத்தில் கலவரம்; பரபரப்பு!

கிட் பேக்கை அப்படியே கட்டிலில் கவிழ்த்தான். சட்டை பேண்ட்டை எல் லாம் எடுத்து உதறிப் பார்த்தான்.

"என்னடா ஆச்சு! என்னடா இப்படித் தேடறே?" என்று கேட்டான் பொன்முடி.

"உங்க அப்பாவுக்கு என்னுடைய பரிசாகக் கொடுக்கக் கொண்டு வந்திருந்த சிடிசன் கைக்கடிகாரத்தைப் பெட்டியுடன் காணவில்லை!"

"நான்கூடப் பார்த்தேனே! புறப்படும் போது பெட்டியுடன் இதில்தானே வைத்தே? இரு நான் பார்க்கிறேன்". பொன்முடி தானும் ஒருமுறை அவன் பையை, பொருள்களை, சட்டை துணி களை உதறித் தேடினான். அந்த புத்தம் புதிய விலை மிக்க கைக்கடிகாரத்தையும், அது வைக்கப்பட்டிருந்த பெட்டியோடு காணவில்லை!

ரமணி கவலையுடன் பொன்முடியைப் பார்க்க, பொன்முடி நடந்த செயலுக்காக வெட்கித் தலை குனிந்து நின்றான்! அவன் கண்களில் நீர் திரண்டு இருந்தது.

"இப்படித் தலைகுனியத் தக்க ஒரு நிகழ்ச்சி எங்க ஊரில், நடந்ததை நினைத்து மிகவும் வருத்தப்படுகிறேன் ரமணி"

"இதுக்கு நீ ஏன்டா கலங்கறே? பேசாம போலீஸில் புகார் பண்ணி விடலாம். அவங்க பொறுப்பு. கண்டு பிடிச்சுடு வாங்க" என்றான் ரமணி.

"அது முடியாத காரியம் ரமணி"

"ஏன்டா? உங்க ஊர்லே போலீஸ் ஸ்டேஷன் கிடையாதா?"

"போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் தரலாமா வேண்டாமான்னு நிச்சயம் பண்ண முதல்ல ஒரு வி.ஐ.பி.கிட்டப் போய் அனுமதி கேட்கணும்"

"அப்படியா! யார் அந்த வி.ஐ.பி?"

"அவர்தான் ஈட்டிமலை முடியார். சுருக்கமா ஈட்டிமுடியார்னு சொல்லுவாங்க"

"பெயரைக் கேட்டால் மன்னர்கள் காலத்து சிற்றரசர் மாதிரி இருக்கே! அரசர்கள் ஆண்ட காலம்தான் மலையேறிப் போச்சே?"

"இவர் மன்னரல்ல. எங்கப்பாவின் நம்பிக்கைக்குரிய சாமியார். அவர் தலை முடியெல்லாம் ஈட்டிமுனை மாதிரி நெட்டுக்குத்தலா கூர்மையா இருக்கும். பார்த்தாலே நடுக்கமா இருக்கும். எங்கப்பா இவரைக் கேட்டுக் கொண்டுதான் எந்தக் காரியத்தையும் பண்ணுவார். இவர் வேண்டாம் என்று கூறிவிட்டால் கண்டிப்பாகச் செய்ய மாட்டார்."

"நான் கொண்டு வந்த விலை மிக்க கைகடிகாரம் திருட்டுப் போச்சு என்று புகார் கொடுக்கப் போவது நான்தானே? உங்கப்பா இல்லையே?"


"எங்கப்பா இங்கே பெரும்புள்ளி. அவருடைய விருந்தினரா, நீ வந்து தங்கியிருக்கே. நீ போலீசில் புகார் பண்ணினா, எங்கப்பா பெயரும் இதில் இழுபடும் இல்லையா? அதனால், கௌரவமாக அப்பாவிடம் சொல்லி அவருடைய ஆலோசனைப்படி நடப்பதுதான் மரியாதை"

அடுத்த ஐந்தாவது நிமிடம் ரமணி பொன்முடியின் தந்தையின் அறையில் இருந்தான். கூடவே பொன்முடி. நடந்ததை விளக்கமாகக் கூறினான் ரமணி.

"தம்பி, எங்க விருந்தினராக வந்திருக்கும் உனக்கு, இப்படிப்பட்ட கசப்பான அனுபவம் ஏற்பட்டிருப்பதை நினைச்சு ரொம்ப வருத்தப்படறேன். நீ போலீஸில் புகார் பண்ணுவதைவிட, நான் பண்ணுவதுதான் முறை. ஆனால் அதுக்கு முன்னால ஈட்டிமலையாரிடம் அனுமதியைக் கேட்டிடலாம்."

ரமணியால் தட்ட முடியவில்லை.


(அடுத்த இதழில் முடியலாம்!)



"மீனுக்குப் பிடித்தமான எண் எது?"

"இது தெரியாதா... 'ஆறு'!"


— கு. அருணாசலம்



" என்னம்மா! பலவிதமான நிறத்துல திடுதிப்புன்னு மாறிக்கிட்டே இருக்கீங்க!"

"தெரியாத்தனமா... பச்சோந்தியைப் பிடிச்சு தின்னுட்டேன்டா..."

— நெற்குப்பை கி. மனோகரன்



"வெங்கட் பற்றி என்ன நினைக்கிறே?"

"அவன் கட் அண்ட் ரைட்!"

— பொறையாறு
கானா. கணேசன்

இங்கேயுள்ள 18 படங்களையும் கவனமாகப் பாருங்கள். இவை 9 படங்களைக் கொண்ட இரண்டு தொகுதிகளாக உள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் 9 படங்கள் உள்ளன. **B** தொகுதியில் உள்ள 9 படங்களுக்குரியவற்றின் இரண்டாவது எழுத்தை மட்டும் எடுத்து இணைத்தால் 9 எழுத்துக்கள் கொண்ட உங்களுக்கு மிகவும் அறிமுகமான தமிழ்நாட்டுத் தியாகி ஒருவரின் பெயர் கிடைக்கும். **A** தொகுதியிலும் 9 படங்கள் உள்ளன. இவற்றில் 3ன் கடைசி எழுத்தை மட்டும் இணைத்தால் 3 எழுத்துக்கள் கொண்ட இந்தியாவின் பெரிய நகரம் ஒன்றின் பெயர் கிடைக்




A


கோடை விடுமுறைப்

கும். மீதி உள்ள 6 படங்களின் முதல் எழுத்தை மட்டும் இணைத்தால், 3 எழுத்துக் கொண்ட ஒரு தமிழ் மாதத்தின் பெயர், 3 எழுத்துக் கொண்ட பிரபலமான கவிஞரின் பெயர் கிடைக்கும். இந்த தியாகியின் பெயர், நகரத்தின் பெயர், மாதத்தின் பெயர், கவிஞரின் பெயரையும், இவை கிடைக்கக் காரணமாக இருந்த 18 படங்களின் பெயர்களையும் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி, இரண்டு ரூபாய் மதிப்புள்ள தபால் உறையில் வைத்து அனுப்புங்கள். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட்மாட்டா. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் முடிவு செய்யபடும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி: 31.5.97









B

போட்டி -1

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை-97.



சார் தபால்!

✉ "தாடகை ஆடிய தாயம்!" எங்கே குருட்டு நம்பிக்கைகளுக்கு வலுவூட்டும் விதமாக முடிந்து விடுமோ என்று பயந்து கொண்டிருந்தேன். திகில் படும்படி அடுத்து என்ன ஆகப் போகிறதோ என்ற பதைபதைப்பை ஏற்படுத்தி வளர்ந்த 3 இதழ் கதை, அறிவியல் விழிப்பை ஏற்படுத்தி முடிந்திருப்பது பாராட்ட வேண்டிய செயல். படங்கள் சூப்பர்! தொடரட்டும் "திக் திக் திக்" கதைகள்! - பரமக்குடி இரா. முத் தழகன், புதுவை, க. இளம்பூரணன், கடலூர் இல. பன்னீர் செல்வம், மாங்காடு இ. உசேன் முகமது, மாயூரம் க. பெரியநாயகம், திருவண் ணாமலை மு. கணபதி, காஞ்சி - 2 பொன். அகத்தியன், விருத்தாசலம் வி. பிரபாகர் பிரசன்னா, மதுரை க. ஸ்ரீகாந்த் மற்றும் பலர்.

✉ 'வெள்ளி மணி' படக்கதையின் செய்தியும் படங்களும் அருமை. கோகுலத்தின் தனிச் சிறப்பே படக்கதைதான்! - திருச்செந்தூர் வா. சபேசன், களத்தூர் மா. பொன்ராசன், எலப் பாக்கம் சா. முத்தாண்டி, பொள்ளாச்சி வி. அடைக்கலம், புதுகை. எஸ். கண்ணாத்தாள், மேல்மடையூர் சா. சுக்கூர், திருவண்ணாமலை ஸ்ரீ. ஸ்ரீபால், பழவங்காடு தா. முத்துராக்கு, சேலம் கி. எல்லப்பன், சென்னை - 1, கே.ஆர். ரவீந்தி ரன், திருச்சி - 14, வி. ஆர். கிருத்திகா, விருத் தாசலம் வி. பிரபாகர் மற்றும் பலர்.

✉ பொன்ராசன் எழுதிய "கனவு பலிக் கட்டும்!" புத்தாண்டை வரவேற்கும் பாடல், மிக அழகாக பொருள் நிறைந்து மனத்தில் பதிந்தது. படம் பிரமாதம்! - வடலூர் சா. ஞானப்பிர காசம், முத்தானம்பட்டி வா. திருமலை, அருப்புக்கோட்டை கு. பாண்டவராசன், மதுரை எ. தண்ணீர்மலை, குன்றக்குடி கி. தெய்வநாயகி, சிவகங்கை மா. சபரி, சீர்காழி. தா. முருகம்மை, பிள்ளையார்பட்டி ஜி. தேவிகா, விருத்தாசலம் வி. பிரபாகர் மற்றும் பலர்.

✉ "புத்தாண்டுப் போட்டி" நாடகம் ஒரே மூச்சில் படிக்க வைத்தது! - தில்லை. மா. பரசு, தஞ்சை - 2 தருமபாலன், சென்னிமலை கா. அருள்மொழி, திருப்பூர் கா. கணேஷ், விருதுநகர் நா. சுந்தர்பாபு, பாளை. எம். ரோஸ்மேரி, வேலூர் மா. முத்துக்கிருஷ்ணன், கெட்டிச் செவியூர் ஜெ. ரகுபதி, சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார் மற்றும் பலர்.

✉ "அசத்துகிறான் அர்ஜுன்" - அட்டைப் படமும் சரி, கட்டுரையும் சரி, அசத்தலாகவே இருந்தது. படிக்கும்போதே, நாமும் ஏதாவது சாதனை பண்ணி கோகுலத்தின் அட்டையில் இடம்பிடிக்க வேண்டும் என்ற வேகம் எழுந்தது! - சாத்தனூர் மா. செந்தில், சத்தியமங்கலம் கு. ஜெயஸ்ரீ. திருத்துறைப்பூண்டி வா. அப்பன்ராஜ், காயக்காடு பா. ராமகிருஷ்ணன், திருப்பாராய்த் துறை அப்துல் சலீம், ஆம்பூர் கா. கிருஷ்ண குமாரி, சின்ன சேலம் ஆர். பிரசன்னகுமார்.

✉ "தடைகளைத் தாண்டி" பரிசுக்கதை, புதிய கண்ணோட்டத்தில் இலட்சியத்தை நோக்கிப் பயணப்படுவதற்குக் கைவிளக்காக உதவும். அருமையான கருத்து - வைத்தீஸ்வரன் கோயில் சா. பிச்சுமணி, மேட்டுப்பாளையம் கி. ராஜாத்தி, ராணிப்பேட்டை தீபமங்களா, பெண்ணாடம் கு. வள்ளியம்மை, சாத்தூர் வி. மாசிலாமணி, சேலம் தா. சொர்ணாம்பிகை, தென்காசி கா. பொற்செல்வி, விருதுநகர் நா. ஏகாம்பரம், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், சின்னசேலம். ஆர். பிரசன்னகுமார் மற்றும் பலர்.

✉ அறிவியல் கதைகளுக்காகத்தான் கோகு லத்தை வாங்குகிறோம். எங்கள் 'விலங்கியல்' ஆசிரியர் கோகுலத்தில் வரும் விலங்கு பறவைக் கதைகளை உரக்கப் படிக்கச் சொல்லி, எல்லோ ரையும் கேட்க வைக்கிறார்! - ராமநாதபுரம் உ. தனகோபால், உத்தண்டி வெ. கனிமொழி, தஞ்சை நன்மாறன், திருத்தணிகை மா. வேல் முருகன், சின்னாளப்பட்டி கி. வேட்டியப்பன், விருத்தாசலம் வி. பிரபாகர் மற்றும் பலர்.

✉ உரக்கப் படிக்க உன்னதக் கதைகளைத் தவறாமல் தரவும். இது பெரிய எழுத்தில் இருப் பதால் 2, 3 ஆம் வகுப்புப் பிள்ளைகளுக்கும் புதிதாகக் கற்பவர்களுக்கும் பெரிதும் உதவியாக இருக்கிறது. - கடலூர் மா. கிருத்திவாசன், மாங் காடு இரா. பொன்மலை, மனாம்பதி தா. பெரு மாள், பிள்ளையார்பட்டி ஜி. தேவிகா, தரங்கை எஸ். பாதிரி, பாளை மு. சண்முகம், வாணியம்பாடி அப்துல் ரகுமான், அரக் கோணம் வா. தேனப்பன், குன்றக்குடி எஸ். மங்கையர்கரசி, குன்றக்குடி ரா. விஜயலக்ஷ்மி.

9. புதிய இலைகள்


மறுநாள் மாலை வைரவநாதன் வீடு திரும்பிய சற்று நேரத்தில் பணியாளர் அருமைநாயகம் வந்து அவரை மார்கரெட் அம்மையார் தன் வீட்டிற்கு வரும்படி சொன்னதாகத் தெரிவித்தார். அதைக் கேட்ட வார்டனின் முகம் வெளிறிப் போயிற்று. இனியும் தன்னைத் தொடர்ந்து அம்மையார் வேலைக்கு வைத்துக் கொள்வார் என்று அவர் சற்றும் நம்பவில்லை.

வியாதிப் படுக்கையில் போராடிக் கொண்டிருக்கும் தாய்; மேல் படிப்பிற்கு இடம் கிடைத்தும் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கும் மூத்த மகள், அதற்குக் கீழே மூன்று குழந்தைகள், இத்தனை பேரும் அவரது வருமானத்தை நம்பித்தான் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இந்நிலையில், உள்ள வேலையும் இல்லையென்று ஆகிவிட்டால் என்ன செய்வது?

தவித்துப் போன நெஞ்சோடு அவர் சைக்கிளை எடுத்துக் கொண்டு மார்கரெட் அம்மையாரின் வீட்டை அடைந்தார். அழகிய போகன்வில்லா பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்து காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்க, ஒரு சின்னப் பூவாளியால் அவற்றிற்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்த அம்மையார் வைரவநாதனைப் பார்த்ததும், "வாருங்கள்" என்று புன்னகையுடன் வரவேற்றார். அவரது முகத்தில் இயல்பான கனிவும், சாந்தமும் காணப்பட்டது.

தோட்டத்திலிருந்த சிறிய புல்வெளியில் போடப்பட்டிருந்த இரண்டு பிரம்பு கூடை நாற்காலிகளில் ஒன்றில் அவரை உட்காரும்படி சொன்னவர் விரைந்து உள்ளே சென்றார். வைரவநாதன் தயங்கிக் கொண்டு அமர, உள்ளே சென்ற திருமதி மார்கரெட் சற்று நேரத்தில் ஒரு காகித உறையோடு திரும்பி வந்தார்.

அதைப் பார்த்த வார்டனுக்கு தலையிலிருந்து கால்வரை பதற்றம் பற்றிக் கொண்டது. தன்னை வேலையிலிருந்து நீக்கி விட்டதற்கான உத்தரவுதான் அது என்று நினைத்தவர், எதிரே அமர்ந்த அம்மையாரைப் பார்த்துக் கலங்கிப் போன குரலில், "மேடம் நான் செய்தது பெரிய தப்புத்தான்... என்னதான் குடும்ப சூழ்நிலைகள் இருந்தாலும் இது மாதிரி நான் நடந்துக்கிட்டது ரொம்பக் கேவலமான காரியம்... அதிலேயும் ஒரு சின்னப் பையனை இதுக்கு உதவியா வச்சுக்கிட்டது எவ்வளவு பெரிய பாவம்னு இப்பத்தான் புரியுது... என்னை உங்களால மன்னிக்க முடியாதுதான்... ஆனா என்னை நம்பியிருக்கிற பெரிய குடும்பத்தைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க" என்ற



உதயன் எங்கே?

போது அவர் குரல் உடைந்து கண்கள் கலங்கி இருந்தன.

மார்கரெட் அம்மையார் அவரை ஆதரவுடன் பார்த்தார். "பரவாயில்லை வைரவநாதன் வாழ்க்கையில் பிரச்னைகளும் நெருக்கங்களும் வரும்போது இது போன்ற சபலங்கள் மனதை ஆட்கொள்வது சகஜந்தான்... ஆனால் குறுக்கு வழியில் செல்ல முயற்சிப்பது அதற்கு நிரந்தரத் தீர்வை

வி.ர. வசந்தன்

ஒரு நாளும் தந்துவிடாது... மாறாக மேலும் மேலும் சிக்கலைத்தான் தோற்றுவிக்கும்... போகட்டும் நீங்கள் இப்படி வருந்துவதே உங்களது மன மாற்றத்தைத்தான் காட்டுகிறது," என்றவர் சற்று நேரம் அமைதியாக காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த பூச்செடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பின் கம்மிய குரலில் "நான் என் பெற்றோருக்கு ஒரே பெண். என் மீது அவர்கள் அப்படியொரு பாசத்தைப் பொழிந்தார்கள். நான் அவர்களை விட்டுப் பிரிந்தபோது எனக்கு இருபது வயது. என் கணவரை வாழ்க்கையில் இழந்தபோது எனக்கு முப்பத்து ஐந்து வயது. ஒரு பெண்ணாக எவ்வளவு அழுத்தங்களையும், உணர்வு பூர்வமான போராட்டங்களையும், நெருக்கடிகளையும் நான் அனுபவித்திருப்பேன் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆனால் இந்த ஏழைச் சிறுவர்களுக்காக என் வாழ்க்கையை நான் அர்ப்பணித்த பின் என் மனதில் அவர்களது முன்னேற்றத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. என்னுடைய அந்த இலட்சியத்துக்கு இடைஞ்சலாக என் மனதில் வளருகிற எந்தக் களையையும் நான் அனுமதிப்பதுமில்லை. நம்முடைய சொந்த வாழ்க்கையைத் பெரிதாக நினைத்தால் பிறருக்குத் தொண்டு செய்கிற மனப்பக்குவத்தை ஒரு நாளும் அடைய முடியாது வைரவநாதன். இதைத்தான் அடிக்கடி உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

வார்டன் உணர்ச்சிவசப் பட்டவராக, "மேடம், என்னால் சூரியனைப் போல பிரகாசிக்க முடியாதுன்னாலும், சூரியன்கிட்ட இருந்து



ஒளியை வாங்கிப் பிரகாசிக்கிற ஒரு கண்ணாடிக் கல்லைப் போலாவது இருக்க முயற்சிக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்டதும் திருமதி மார்கரெட் கடகடவென்று சிரித்தார். "நல்ல உவமை! யாரை சூரியன் என்கிறீர்கள், யாரை கண்ணாடிக்கல் என்கிறீர்கள்? அதுவெல்லாம் கிடையாது. நாம் எல்லோருமே மனிதர்கள்; குற்றங் குறைகள் உள்ளவர்கள். ஆனால் உண்மையோடு முயன்றால் நம்மில் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும்" என்றவர் தன் கையிலிருந்த காகித உறையை வார்டனிடம் கொடுத்தார்.

அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரியாததால், மனதிற்குள் பீதி பரவ, தயக்கத்துடன் அதை வாங்கிக் கொண்டார். கவர் பிரிக்காமல் அதைத் தன் கைகளில் வைத்துக் கொண்டு அம்மையாரின் முகத்தைக் குழப்பத்துடன் பார்த்தார்.

அவரைப் பார்த்து முறுவலித்த திருமதி மார்கரெட்,



"அதைப் பிரித்துப் பாருங்கள்" என்றார்.

மனதில் இருந்த நடுக்கம் கைகளில் தொற்றிக் கொள்ள, உறையைப் பிரித்துப் பார்த்த வார்டன் திகைத்துப் போனார். அவர் எதிர்பார்த்ததுபோல் உள்ளே கடிதம் எதுவும் இருக்கவில்லை. மாறாக அவர் பெயருக்கு எழுதப்பட்ட ஒரு வங்கிக் காசோலை இருந்தது!

முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள அந்தக் காசோலையைப் பார்த்துப் பேச்சு வராமல் தடுமாறிப் போன வார்டன், "மேடம் இது..." என்று தயங்கினார்.


மார்கரெட் அம்மையாரின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அமைதியான குரலில், "உங்களுக்குத்தான்" என்றார்.

தன் காதுகளை நம்ப முடியாமல் ஒரு கணம் தவித்து வியப்பின் எல்லைக்குப் போய் விட்டவராக, "மேடம், என்ன சொல்றீங்க...! இது...!" என்று குழறினார். மௌனமாகத் தலையசைத்த அம்மையார், "ஆம், மிஸ்டர் வைரவநாதன் உங்களுக்குத்தான் இது. உங்கள் வீட்டிலுள்ள பிரச்சனைகளை நான் அறிவேன். வயது முதிர்ந்த தாயார், வியாதியில் நித்தமும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனே ஆபரேஷன் செய்யப் பணம் வேண்டும். பொறியியல் படிக்க இடம் கிடைத்தும், பணமில்லாமல் உங்கள் மகள் பூமா படிப்பைத் தொடர முடியாமல் கலங்கிக் கொண்டிருக்கிறாள்... உண்மைதான். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஒரு பாசமுள்ள மகனாக, தகப்பனாக நீங்கள் மன அமைதி இழந்து போனது சகஜந்தான்... இங்கு நீங்கள் பெற்றுக் கொள்ளும் ஊதியம் குறைவானது என்பதும் எனக்குத் தெரியும்... ஆனாலும் கூட இந்தப் பணம் உங்களது இக்கட்டான நிலையைச் சமாளிக்க இப்போதைக்குப் போதும் என்று நினைக்கிறேன்" என்றார்.

நன்றியால் மனம் நிறைய வைரவநாதன் தழுதழுத்த குரலில், "மேடம் உங்களுக்குத்தான் எவ்வளவு பெரிய மனசு!... நான் என்னோட குடும்ப நிலையை யார்கிட்டயும் சொன்னதில்ல... இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று கேட்டார்.

"இந்த இல்லத்தில் இருக்கிற ஒவ்வொருவருடைய சூழ்நிலைகள், மனப் போக்குகள் இதையெல்லாம் நான் அறிந்து வைத்திரா விட்டால், வேறுபட்ட குண இயல்புகளைக் கொண்டவர்களை என்னால் எப்படிச் சமாளிக்க முடியும்? உங்கள் குடும்பக் கவலைகளை நீங்கள் என்னிடம் தெரிவிக்காவிட்டாலும்கூட, அதை அவ்வப்போது எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தது அந்தப் பொறுப்புள்ள சிறுவன் மனோகரன்தான்" என்றார் அம்மையார்.


..."மனோகரனா சொன்னான்!" என்ற வார்த்தைகள், அதிர்ச்சியுடன் அவர் வாயிலிருந்து வந்தன. வார்டன் ஒரு நிமிடம் மனதுக்குள் வெட்கிப் போனார். தன்னுடைய தேவைகளைச் சமாளிக்கக் குறுக்கு வழிகளை நாடியதையும் அதற்கு மனோகரன் இடைஞ்



சல் செய்வதாக நினைத்து அவன் மீது கோபம் கொண்டதையும் அவர் எண்ணிப் பார்த்தார். அவன்தான் எவ்வளவு பெருந் தன்மையுடன் தன் நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறான்! நேர்மையை நாடுகிற நெஞ்சங்கள் உண்மையிலேயே எவ்வளவு உயர்ந்தவை!

அவர் கனத்துப்போன குரலில், "இந்த வெயில் காலத்துல வருமானம் இல்லாம தவிச்சுகட்டு இருக்கோமே...? இந்த நேரத் துல... இவ்வளவு பணம்?" என்று தயங் கினார்.

"உண்மைதான் வார்டன். இந்த நேரத் தில் இவ்வளவு பணத்தைத் தருவது கடின மானதுதான்... ஆனால் இதுவெல்லாம் என் னுடைய சொந்தப் பணம்... என் கணவர் இராணுவத் தில் மருத்துவராகப் பணியாற்றியவர் என் பதை உங்களுக்குச் சொல்லி இருக் கிறேன் இல் லையா...? அவர்



மரணமடைந்தபோது எனக்காக விட்டுச் சென்ற சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானமும் அரசாங்கம் கொடுத்த உதவித்தொகையுந்தான் என் பெயரில் வங்கியில் இருப்பவை. இதையெல்லாம் என்னுடைய எதிர்காலத் துக்கே, அதாவது வேலை செய்ய முடியாது படுக்கையில் வீழ்ந்து விடும் கடைசி காலத்துக்கு என்று வைத்திருந்தேன்... அதனாலென்ன? உங்கள் தாயாரும் எனக்கு ஒரு சகோதரியைப் போலத்தானே? உங்கள் மகள் எனக்கும் ஒரு மகளைப் போலத்தானே? அவர் களுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் பயன்படுவதைவிட இதற்கு அதிக பயன் எதுவும் இருக்க முடியாது என்று நினைக்கிறேன்..."

மார்கரெட் அம்மையாரின் விளக் கம் வார்டனின் மனதுக்குள் சென்று அவரை நெகிழ வைத்தது. மனதின் நெகிழ்ச்சி கண்களில் கண்ணீரை வர வழைத்தது. இத்தனை உயர்ந்த உள்ளம் கொண்டவருக்கு மனதாலும், செயலாலும் எவ்வளவு தீங்கிழைத்திருக்கிறோம் என்று நினைத்தபோது அவருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

அம்மையார் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். "... எனக்குப் பணம் பெரிதில்லை, இதயங்கள்தான் பெரியவை... எனது வாழ்க்கையில் எத்தனையோ அன்பு மனங்களை நான் சம்பாதித்திருக்கிறேன்... எனக்கு இந்தத் திருப்தி போதும்... நான் பலனற்றுப் படுக்கையில் வீழ்ந்து விடும் நாட்களில், நான் சம்பாதித்த அன்பு நெஞ் சங்கள் எனக்கு ஆதரவளிக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது... என் கணவரின் சேவைக்கு, அரசாங்கத் திடம் இருந்து கிடைத்து வரும் உதவித் தொகையில் என் வாழ்நாளை திருப்தி யாகக் கழித்து விட முடியும்... இந்தப் பணத்தை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள்... புதிய இலைகளோடு துளிர்விடுகிற ஒரு புதிய வாழ்க்கையை உங்களிடம் எதிர் பார்க்கிறேன்" என்றார் அன்பு ததும்பும் மிருதுவான குரலில்.

வார்டன் உடைந்து போனவராக, "உங்க பெருந்தன்மையால் குற்றக்கறை படிஞ்ச என் மனசைத் தூய்மையாக்

என்ன குறள்?

போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை மலைப்பைத் தருகிறது! அதோடு, பெரும்பாலானவர்கள் சரியான விடையை எழுதியவர்கள். பரிசுக்குரியவர்களை முடிவு செய்யக் குலுக்கல் முறையே கை கொடுத்தது?

சரியான விடை:

கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து- (குறள் 490)

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. அ. சீனுவாசன், புதுவை - 1.
2. இ. அன்பழகன் - புதுவை - 10.
3. ஜி.எஸ்.தீபாதேவி, திருநெல்வேலி - 8.
4. ஆர். ராஜகணபதி, கோவை - 45.
5. தி. சந்திரசேகரன், வர்கால்பட்டு.
6. டி. ரூபன், மதுரை - 7.
7. வி. யோகாம்பாள், காரைகால் - 2.
8. கி. குபேந்திரன், படப்பைக்காடு மதுக்கூர் அஞ்சல்.
9. ஞா. மாடசாமி, திருக்காட்டுப்பள்ளி,
10. ச. தேன்மொழி, திருப்பாராயத்துறை.
11. ஜா.அம்புரோஸ், ஆலம்பூண்டி,
12. ஆர். கௌசல்யா, நாங்குநேரி,
13. த.சே.அஸ்கர்அலி, கடைய நல்லூர்,
14. ஜெ.கலைச்செல்வன், திருப்பராய்த்துறை.
15. ஸ்ரீ.ஸ்ரீவித்யா, புதுக்கோட்டை -1.
16. சா. இ. வைகறை, நெய்வேலி -3.
17. த. உலகனந்த பெருமாள், நாயக்கன் பாளையம் - 641 020.
18. ஐ.தன்வந்திரி, ஆம்பூர் பேட்டை, வாணியம்பாடி,
19. என். தெய்வானை, சைதை, சென்னை - 15.
20. ச. இளங்கதிர், புதுவை - 9.

பரிசுபெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

கிட்டீங்க... இதுவரை இருந்த வைரவநாதன் இனிமேல் இல்லை மேடம். என்னுடைய நடவடிக்கைகளில் இருந்து கண்டிப்பா இதைத் தெரிஞ்சுக்குவீங்க'' என்று உணர்ச்சி மிகுதியால் தழுதழுத்தார்.

வழக்கமான புன்முறுவல் அம்மையாரின் முகத்தில் தவழ்ந்தது. "மனோகரன் மீது உங்களுக்கு இனிமேலும் கோபம் இருக்காதே?'' என்று கேட்டார்.

"நிச்சயமா இருக்காது மேடம். சரியான வழியை எனக்குக் காட்டியதிலே அவனுக்கும் ஒரு பங்கு நிச்சயமா உண்டு... எனக்கு அவன் ஒரு மகனைப் போல... பெற்ற பிள்ளை மேல் கோபம் வந்தா, அது எவ்வளவு நேரத்துக்கு மேடம்?'' என்றபோது வார்டனின் குரலில் புத்துணர்ச்சி பெரிதும் பரவி இருந்தது.

மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்தோடு வார்டனை ஏறிட்டுப் பார்த்த அம்மையார், "எங்கெங்கோ பூத்த இந்தப் பூக்களுக்கு நாம் காட்டிய அன்புக்கு அவர்கள் செய்யும் பிரதிபலனைப் பாருங்கள்...! நீங்கள் அவனை வெறுத்த போதிலும் மனோகரன் என்னிடம் உங்கள் சார்பாக அடிக்கடி பேசியதைத்தான் சொல்கிறேன். இந்த உலகத்தில் எது வேண்டுமானாலும் தோற்றுப் போகலாம். ஆனால் அன்பு ஒரு நாளும் தோற்கவே தோற்காது'' என்றார் நெகிழ்ச்சியுடன்.

வார்டன் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட வேளையில், "இப்போது புதிதாக வந்திருக்கிறானே உதயன், அவனைச் சற்றுக் கண்காணிப்பில் வைத்திருங்கள். அவன் ஆரம்பத்தில் வந்த புதிதில் படிப்பில் காட்டிய அக்கறை இப்போது இல்லை. காளிமுத்துவோடு சேர்ந்து அடிக்கடி வெளியே சுற்றுவதாக அறிகிறேன். ஒரு துளி விஷம் ஒரு குடம் பாலையே கெடுத்து விடுவது உண்டல்லவா?'' என்றபோது அவர் குரலில் கவலை தலைதூக்கியதை வார்டனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஒருகணம் மனதுக்குள் குற்ற உணர்ச்சியினால் தவித்தவர், "இனி இப்படி நேராமல் நான் பார்த்துக்கறேன் மேடம்'' என்றார்.

(தொடரும்)

சிரிப்பு





"காலம்-நேரம் சரியாவே புரியலேடா!"
"சின்ன வயசுல என்னடா பெரியவங்க மாதிரி பேசறே?"
"அதில்லேடா... 'காலமும் - நேரமும்' கணக்கு புரியவே மாட்டேங்குதுன்னு சொன்னேன்!"

— சீர்காழி வி. ரேவதி

"இவன் காசை முழுங்கிட்டான் டாக்டர்..."
"அதுக்காக நீ ஏண்டா பதட்டப் படறே?"
"அவன் முழுங்கினது என்னோட காசு டாக்டர்"


- சீர்காழி. வி. ரேவதி





"எனக்கு டைப்ரைட்டிங் தமிழ், இங்கிலீஷ் தெரியும்... அப்புறம் ஜொராக்ஸ் எடுக்கத் தெரியும்."
"ஜொராக்ஸ் தமிழா... இங்கிலீஷா...?"

— பொன். குமார்



"சே! உயர்வான ஸ்கூல்னு நினைச்சு அந்த நர்ஸரி ஸ்கூல்ல படிக்க வச்சது தப்பாப் போச்சு"
"ஏன் சார்?"
"L.K.G.க்கு கம்ப்யூட்டர் சயின்ஸ் வச்சிருக்காங்க; என் பையன் உடனே ஒரு P.C. வாங்கிக் கொடுன்னு நச்சரிக்கிறானே!"

- சீர்காழி. வி. ரேவதி



சாட்! பீட்! கித்! : சாக்லேட் திருடன், ரேவதி, பக். 66, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14.

கதை எழுதுவதே கடினமான வேலை. சிறுவர்கட்குக் கதை எழுதுவது இன்னும் சிரமமான வேலை. இதைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் கோகுலம் ஆசிரியர்.

துப்பாக்கி, வன்முறைகள் இல்லாமல் சிறுவர்கட்கேற்ற துப்பறியும் கதைகளை விறுவிறுப்புக் குறையாமல் எழுதியிருக்கிறார். இந்தக் கதைகளில் வரும் சி.ஐ.டிக்கள் பெரிய போலீஸ் ஆபீசர்கள் அல்ல. பள்ளியில் படிக்கும் இரு சிறுவர்களும் ஒரு சிறுமியும்! 'இந்தக் குழந்தைகளுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு நமக்குக் கிடைத்தால்?' என்று ஒவ்வொரு வாசகச் சிறுவரையும் நினைக்க இதிலுள்ள கதைகள் நிச்சயம் தூண்டும்.

வைரம், வைரப் பிள்ளையார் முதல் கார்த் திருட்டு வரை கண்டுபிடிக்கும் சாட், பீட்,கித்தை சபாஷ் சொல்லித் தட்டிக்கொடுக்காமல் இருக்க முடியுமா? பரிசுச் சீட்டுத் திருடன் அதை ஒளித்து வைத்த இடத்தை அசல் சி.ஐ.டி. கூட அவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்து விட முடியாது. சாக்லேட் திருடனைக் கூட ஓவியர் கலா படம் போட்டுக் 'க்ளூ' கொடுக்காதிருந்தால் வாசகரால் ஊகிக்கவே முடியாது! பெரியவர்களைக் கூட விரும்பிப் படிக்க வைத்த, கோகுலத்தில் வெளியான கதைகளில் அருமையான தொகுப்பு!

அபிராமியின் அட்டிகை, கூத்தபிரான், பக். 84, ரூ. 18/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14.

வானொலி மூலம் நமக்கு நன்கு அறிமுகமான ரேடியோ அண்ணா கூத்தபிரான் அபிராமியின் அட்டிகை மூலம் கோகுல வாசகர்களிடம் இடம்பிடித்து விட்டவர். கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான தொடர்கதை, இப்பொழுது புத்தகமாயிருக்கிறது. மனிதநேயத்தை வற்புறுத்த விரும்பும் இலட்சியத்தில் விறுவிறுப்புக்காகச் சம்பவங்கள் திணிக்கப்படவில்லை. அன்பு இல்லத்துக்கு அபிராமி வரநேர்வதும், அறிமுகமானவுடனேயே தலைவியாவதும், இல்ல மேம்பாட்டுக்கு உழைப்பதும் இல்ல வளர்ச்சிக்குத் தான் இடையூறாக இருப்பதனால் உடனே விலக முனைவதும் அபிராமிக்கு ஆசிரியர் கூட்டும் குணவண்ணங்கள். அட்டிகை காரணமாகக் குடும்பத்திலேற்பட்ட பழம் பகை பரபரப்பைக் கூட்டும் உத்தியாக வேகமளிக்கிறது. உபகாரி, உத்தமர் பொன்னுச்சாமி நாவலுக்கு வில்லனாகிறார். இறுதியில் அபிராமியின் அட்டிகை அத்தியூர் அற்புத நாயகியிடம் சேர, பகைமை எரிந்து பொன்னுச்சாமியின் மனம் மாறுகிறது. நாமும் மகிழ்ச்சியடைகிறோம். சிறுவர் சிறுமிகளிடையே பண்பு நலன்களை வளர்க்க உதவும் நல்ல விறுவிறுப்பான நாவல்.

'மணிக்கதைகள்' தொகுப்பு : ரேவதி. பக். 136 ரூ. 25/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

எழுத்தார்வமுள்ள மாணவர்களுக்குப் போட்டி நடத்தி ஊக்கி எழுத்தாளர்களாக்கிய பெருமை கோகுலத்துக்கு! இப்பொழுது அவர்களை மணிக்கதைகள் மூலம் நூலாசிரியர்களாக்கிப் பெருமைப்படுத்தியிருப்பவர்கள் பழனியப்பா பிரதர்ஸ்! மாணவ - எழுத்தாளர்கள் மூக்கில் விரல் வைக்கும்படி அசத்தியிருக்கிறார்கள்! அறிவியல் கதையென்ன? அறிவுரைக் கதைகள் என்ன? எத்தனை வகைக் கதைகள்! எல்லாம் மணியான மணிக்கதைகள்! குழந்தை இலக்கியத்துக்கு ஒளிமயமான எதிர்காலம்தான்! குழந்தைக் கதை நாயகர்களிடந்தாம் எத்தனைவிதமான அரிய பண்பு நலன்கள்! பகைவனுக்கருளும் பண்பு, ஊருக்கு உதவும் உள்ளம், அஞ்சாமை, கடமையில் நாட்டம், பெரியோரிடம் மதிப்பு, பெற்றோரிடம் பரிவு! ஏ-அப்பா!

மாணவர்க்காக மாணவரே படைத்துள்ள 'மணிக்கதைகள்' பள்ளி, பொது நூலகங்

களிலும் மட்டுமல்ல- வீட்டு நூலகங்களிலும் இடம்பெற வேண்டும்! ஆசிரியர் அறிமுகத்தை இறுதியில் வைக்காமல் ஒவ்வொரு கதைத் தலைப்புக்கும் கீழேயே தந்திருந்தால் இன்னும் சிறப்பாயிருந்திருக்கும்! பெருமை தரும் தயாரிப்பு!

'அழகு மயில்' மழலைப் பாடல்கள், கவிஞர் செல்ல கணபதி, பக். 32 ரூ. 7/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14.

சிறுவர் சிறுமியர் கண்ணைக் கவரும் வகையில் ஒரு குழந்தை பாடல் நூலை வெளியிட்டுள்ள பழனியப்பா பிரதர்ஸையும், ஓவியர் கலாவையும் மறந்துவிடாமல் முதலில் பாராட்டிவிட வேண்டும்.

மழலைப் பாடல்களில் மிக முக்கியமான அம்சம் சொல்லச் சொல்ல திரும்பச் சொல்லத் தூண்டும் சொற்கள், வள்ளியப்பாவின் 'லட்டு'ப் பாட்டைப் போல! கவிஞர். செல்ல கணபதி கண்ணுக்கும், நாக்குக்கும் சுவைதரும் வாழைப்பழம் தருகிறார்.

"தங்கம் போலவே மஞ்சள் நிறத்தில்
தகதகக்கும் பழங்கள்!"

ஆங்கில மழலைப் பாட்டொன்றில், லண்டன் சென்று, அரசியைப் பய முறுத்தி வரும் பூனை பிரபலமானது! ஆனால் சிறுமி செல்லக் குட்டி இங்கிலாந்தின் சின்ன ராணிக்கே சென்டு கட்டித் தந்து.

"சின்ன ரோஜா மலரைப் போல
சிரிக்கப் போகிறேன்!"

என்கிறாள்!

கவிஞரால் இன்னும் வளமான சிறுவர் ஒலி மாலைப் பாடல் திரட்டு நூல்களைக் கொண்டு வர முடியும்; கொண்டு வரவேண்டும். குவிந்த தோகையுடன் காட்டப்பட்டுள்ள' அழகு மயில்' விரித்த தோகையுடன் ஆடி மகிழ்விக்கிறது! பரிசளிக்க முற்றிலும் ஏற்ற நூல்.

எறும்பு தின்னிக்கு எத்தனை பற்கள்? ரேவதி பக். 70 ரூ. 15/-. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14.

பறவை, விலங்குகள் பற்றிய அறிவியல் உண்மைகளைச் சுவையாகக் கதை போலச் சொல்லிக் கருத்துத் திரட்டாக்கி, அறிவியல் உண்மைகளைச் சுருக்கமாக மறுபடியும் சொல்லி அளிக்கும் உத்தி கையாளப் பட்டுள்ளது.

தாயின் வாலை உறுதியாகப் பிடித்துக் கொள்ளும் எறும்புதின்னிக்குட்டி, மரங் கொத்தி அலகால் தட்டும் ஒலியின் வேறுபாடுகள், தனது சத்துமிக்க புழுக்கையைத் தானே உண்ணும் முயல், அழகூட்டும் முத்து அளிப்பது மட்டுமல்ல, சத்தான ஆகாரமாகவும் உதவும் சிப்பி, இரண்டாயிரத்து ஐநூறு வகைப் பல்லிகள், மனைவி உழைப்பில் உண்டு கொழுக்கும் சோம்பேறி ஆண் சிங்கங்கள், ப்ளேக் நோய் மருத்துவ ஆய்வுக்கு உதவும் மூஞ்சூறுகள், பெருந்தீனி வெட்டுக்கிளிகள் – இப்படிப் பலப்பல விவரங்களைத் தேனீ போலத் தேடித்தேடி தேன் போல சுவையாக இனிக்க இனிக்கத் தந்திருக்கிறார் ரேவதி. பள்ளி ஆரம்ப நிலைகளில் அறிவியல் பாட நூல்களே இப்படி எழுதப் பட்டால் எவ்வளவு பயனுள்ளதாயிருக்கும்! எல்லாம் கோகுலத்தில் வெளிவந்தவைகளின் திரட்டே. இது இந்த வரிசையில் 7-ஆம் தொகுதி – ஆர்.பி. சாரதி.

"உங்கள் நூலகம்" பகுதியில் சிறுவர்க்கான நூல்கள், அறிவியல் பொதுநூல்கள் மட்டுமே மதிப்புரைக்கு ஏற்கப்படும். மற்றவைகளை அனுப்ப வேண்டாம். கட்டணம் இல்லை. இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 97 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

மதிப்புரைக்காக வரப்பெற்ற நூல்கள்

1. பக்தி பரவசக் கதைகள்,
2. வால்ட்டிஸ்னி,
3. சோதனைகளைச் சாதனைகளாக மாற்றுங்கள்!
4. பேரறிவாளர்களின் பொன்மொழிகள்,
5. கண்மணிக் கதைகள்,
6. காட்டில் தேர்தல்,
7. புவனா தேடிய புதையல்,
8. அதிசய டினோசார்,
9. காட்டுக்குள்ளே திருவிழா,
10. தம்பி தங்கைகளுக்கு இஸ்லாம்,
11. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சிறுவர்க்கான கதைகள்.

அடுத்துவரும் இதழ்களில் இவைகளுக்கான நூல் மதிப்புரை வெளிவரும்.

ஓடியே போச்சு!

டாக்டர் என். ஸ்ரீதரன்

பரசுராம் அழகன்; படிப்பில் சூரன்; விளையாட்டில் வீரன். ஆனாலும் அவனிடம் ஒரு பெரிய குறை இருந்தது.

கோபம் வந்தால் அவன் பயங்கரமாகக் கத்துவான்; திட்டுவான்; கையில் அகப்பட்டதை எடுத்து வீசுவான்; புத்தகங்களைக் கிழித்தெறிவான்; பக்கத்தில் உள்ளவர்களை அடிப்பான். அவனை சமாதானப்படுத்துவது பெரும்பாடு.

பரசுராமின் தாத்தா ஐந்தாறு மாதங்களுக்கு ஒருமுறை கிராமத்திலிருந்து வருவார். பேரனுக்குக் கட்டுக்கடங்காமல் கோபம் வருவதை அவர் கவனித்தார். "கோபித்துக் கொள்ளாதே. வாய்க்கு வந்தபடி கத்தாதே" என்று உபதேசித்தால் அவன் கேட்கமாட்டான் என்பதைத் தாத்தா புரிந்து கொண்டார். பிறகு எப்படி அவனைத் திருத்துவது என்பது பற்றி யோசிக்கலானார்.

தாத்தா ஊரில் இருக்கும்போது பரசுராம் தினமும் இரவில் அவர் கதை சொல்லி ஆசையாகக் கேட்ட பிறகுதான் தூங்குவான். இந்த ஆசையைக் கருவியாகக் கொண்டு அவனைத் திருத்தலாம் என்று தாத்தாவிற்குத் தோன்றியது. ஆகவே ஒருநாள் இரவு அவர் புதிய கதை ஒன்றைச் சொல்லத் தொடங்கினார்.

"பரசு, ஒரு ஊர்ல உன் வயசில ஒரு பையன் இருந்தான். பேரு நவீன். அழகா யிருப்பான். நேர்மையானவன். எல்லோருக்கும் உதவி செய்வான். படிப்பில் கெட்டிக்காரன். பள்ளி ஹாக்கி டீம் காப்டனும் அவன்தான். ஆனா..." என்று நிறுத்தி விட்டுத் தாத்தா பொடிமட்டையைத் திறந்தார்.



பரசுராமானால் சஸ்பென்ஸ் தாங்க முடியவில்லை. "தாத்தா, இந்த ஆனா, ஆவன்னா வேலையெல்லாம் வேண்டாம். நேரா கதையைச் சொல்லிக்கிட்டே போங்க. நவீனிடம் என்ன கெட்ட பழக்கம் இருந்திச்சு, தாத்தா? அவன் பொடி போடுவானா?" என்று பரசுராமன் குறும்பாகக் கேட்டான்.

தாத்தா சிரித்தபடியே கூறினார், "நவீன், பொடி போடமாட்டான். ஆனா இந்தப் பொடி போலவே காரசாரமா கோபப்படுவான். பொடி உடம்புக்கு மட்டும் தானே கெடுதல்? கோபமோ உடம்புக்கு, மனசுக்கு, சுற்றியுள்ள சமூகத்துக்கும் கெடுதல் பண்ணுமே?"

"அது எப்படி, தாத்தா? நவீன் என் வயசுப் பையன்தானே? அவனோட கோபம் சமூகத்தை எப்படிப் பாதிக்கும்?"

தாத்தா விளக்கினார். "விதை, செடியாகி மரமாகுதில்லே! சிறுவன் வளர்ந்து பெரியவனா ஆகிறானில்லே அதுமாதிரி அவன் ...ட்ட இருக் ... எல்



லாப் பழக்கங்களும் வளர்ந்து அதிகமாகிக்கிட்டே போகும்."

"நவீன் வளர வளர அவன் கோபமும் வளர்ந்துக்கிட்டே போச்சா? என் அப்பா வயசு அவனுக்கும் ஆனபோது பயங்கரமான கோபக்காரனா மாறியிருப்பானே?"

"ஆமா. நவீனை அவன் - இவன்னு சொல்லக் கூடாது. படிச்சு முடிச்சதும் நவீனுக்கு ஒரு பெரிய கம்பெனியில மேனேஜர் வேலை கிடைச்சுடுச்சு. நம்ம கதையில இனிமே அவர் மிஸ்டர் நவீன் ஆயிடறாரு. அவர் ஆபீசை நல்லா நடத்தினாரு. உடனுக்குடன் சரியான முடிவெடுப்பாரு. ஆனா அவருக்கு அடிக்கடி வர கோபம்தான், அவரோட பெயரைக் கெடுத்திடுச்சு."

"மிஸ்டர் நவீன் கோபத்தில யாரையாவது லெஃப்ட்-ரைட்டுன்னு பயங்கரமாத் திட்டித் தள்ளிவிட்டாரா?" என்று பரசுராம் ஆவலுடன் கேட்டான்.

"ஆமா, கோவிந்தன்னு ஒரு பியூன். அவருக்குத்தான் நவீனோட பயங்கர அர்ச்சனை கிடைச்சிது. ஒருநாள், பியூன் பிளாஸ்கிலேந்து காப்பி எடுத்துக் கொடுக்கச்சே ரெண்டு சொட்டு நவீனோட பேண்ட்டில தெறிச்சிடுச்சு. அதுக்கு அவர் எரிமலையா வெடிச்சிட்டாரு."

"பின்னே என்ன தாத்தா! அப்படியா ஒரு பியூன் அஜாக்கிரதையா இருப்பாரு? மானேஜருக்குக் காப்பி கொடுக்கச்சே எச்சரிக்கையா இருக்க வேணாமா?"

"நவீன் சுமுகமா பழகறவரா இருந்தா மத்தவங்களும் தைரியமா அவர்கிட்டே போயிருப்பாங்க. அவர்தான் பயங்கரமான கோபக்காரர் ஆச்சே? அதனால அவரைப் பியூன் நடுக்கத்தோட நெருங்கியிருப்பாரு. அப்போ டம்ளர் லேசா அசைஞ்சிருக்கும்."

"ஆனாலும் நவீனோட பேண்ட் கெட்டுப் போச்சே?"

"ரெண்டு சொட்டு காப்பி தெறிச்சா பூரா பேண்ட்டுமா கெட்டுப் போகும்? ஏதோ ஒரு இடத்தில லேசா கறை தெரியும். அவ்வளவுதான். ஆனா, ஒருத்தனை லேசாத் திட்டினாலும் அவன் மனசு நொறுங்கிப் போயிடுமே?"

"அதனாலென்ன? வெறும் பியூன்தானே? மானேஜர் திட்டினா குடிமுழுகியா போயிடும்?"

"பரசு, மனசு எல்லோருக்குமே ஒரே மாதிரித்தான். பியூன் மனசு, மானேஜர் மனசுன்னு வகையெல்லாம் கிடையாது. நாம யாரானாலும் நம்மை ஒருத்தர் திட்டினா நம்ம மனசு நொந்து போகத்தான் செய்யும். நாம

மானேஜரா இருந்தா திருப்பித் திட்ட முடியும். உடனே நம்ம மனசு சாந்தமாயிடும். ஆனா ஒரு பியூன் மானேஜர்கிட்ட முறைச்சுக்க முடியுமா? இருக்கிற வேலையும் போயிடுமே? நவீன் திட்டினது கோவிந்தனோட மனசில ரம்பம் போட்டுக் கீறின மாதிரி வலிச்சுக் கிட்டே இருந்திச்சு."

தாத்தா சொன்னது நியாயம்தான் என்பது போல் நவீன் தலையசைத்தான். தாத்தா கதையைத் தொடர்ந்தார் :

"நவீன் அன்னிக்கு சாயந்தரம் வழக்கம் போல ஆபீசிலிருந்து கிளப்புக்குப் போனாரு. வீட்ல எல்லோரும் ஊருக்குப் போயிருந்தாங்க. அதனால நவீன் ஹோட்டல்ல சாப்பிட்டு விட்டுத் திரும்பினாரு. இரவு பத்து மணி ஆயிடுச்சு. நேரடியாத் தூங்கப் போயிட்டாரு. கேட்டைத் திறந்ததும் ஓடிவரும் அவரது நாயைக் காணோம். வீட்டின் பின்புறம் படுத்துக் கிடக்கும் என்று நினைத்துக் கொண்டார்.



மறுநாள் அதிகாலையில் அழைப்பு மணிச் சப்தம் கேட்டு நவீன் எழுந்து வந்து கதவைத் திறந்தார். வாசலில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்! அவர் சொன்னார் :


"உங்க வீட்டு நாயை ஸ்டேஷன்ல கட்டிப் போட்டு வச்சிருக்கோம். நேத்து சாயந்திரம் அது ஒரு கான்ஸ்டேபிளோட காலைக் கவ்விடுச்சு. கால்ல பல் கீறல் தெரியுது. அதனால அந்த அப்பாவி மனுஷன் பல நாளைக்கு சிகிச்சை செஞ்சுக்கணும். நான் இங்கே உடனே வந்தேன். வீடு பூட்டி இருந்திச்சு."

நவீனுக்கு ஆச்சரியம் மேலிட்டது. அவரது அல்சேஷன் நாய் உக்கிரமானதுதான். ஆனால் யாராவது சீண்டினால்தான் அது துரத்தும். வீட்டுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கும் நாய் ஏன் சாலையில் போய்க் கொண்டிருந்த போலீஸ்காரரைத் துரத்தியது என்பது நவீனுக்குப் புரியவில்லை.

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார் : "கான்ஸ்டேபிளோட சிகிச்சை செலவைக் கொடுத்திடுங்க. அவருக்கு ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சிக்கும் மனக்கஷ்டத்துக்கும் ஈடுசெய்யற மாதிரி ஒரு கணிசமான தொகையை அன்பளிப்பா கொடுத்திடுங்க. அப்புறம் உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது. உங்க நாயையும் உடனே வீட்டுக்கு அனுப்பிடறோம்."

தனது வாழ்க்கையில் முதல் முறையாக நவீன் கோபத்தை அடக்கிக் கொண்டார். இன்ஸ்பெக்டரிடம் பணிவாகப் பேசினார்.





"நல்ல நாளா பார்த்துத்தான் நான் ஸ்கூலுக்கு போவேன்."

"உனக்கு நல்ல நாள் எது?"

"ஸ்கூல் என்னிக்கு லீவு விடறாங்களோ அன்னைக்குத்தான்."

– பா.ஜெயக்குமார்

சிகிச்சை செலவிற்கும் நஷ்ட ஈடாகவும் இன்ஸ்பெக்டர் சொன்ன தொகைக்குப் பேரம் பேசி, கடைசியில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து விட்டார்.

"பிறகு நவீன் ஸ்டேஷனுக்குச் சென்று நாயை மீட்டு வந்தார். ஏனோ நாய் மீதும் அவருக்குக் கோபம் வரவில்லை. வேறு சமயமாக இருந்தால் அதை உதைத்திருப்பார். "டாமி, நீ செஞ்சது ரொம்பத் தப்பு. உன்னோட பல் கூர்மையா இருக்கான்னு தெரிஞ்சுக்க இதுதான் வழியா? சே, சுத்த மோசம்" என்றார் நவீன் சோகமாக.

வழக்கமாகப் புயல் போல் வரும் நவீன் அன்று அமைதியாகத் தன் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார். பியூன் கோவிந்தன் தலைகுனிந்த படியே அறைக் கதவைத் திறந்து விட்டான். அவரும் உள்ளே வந்து தயக்கத்துடன், "ஐயா, நான் ஒரு பெரிய தப்பு பண்ணிட்டேன், மன்னிச்சுடுங்க" என்றார். உடனே நவீன் கத்தப் போகிறார் என்று கோவிந்தன் நடுங்கி னான்.

ஆனால் நவீன் அமைதியாக இருந்தார். கோவிந்தன் கைகூப்பிச் சொன்னான் :

"ஐயா, உங்க தயவாலதான் என் குடும்பமே நடக்குது. அதனால நீங்க திட்டினா நான் பொறுத்துப் போகணும். ஆனா நேத்து நீங்க திட்டினதைப் பொறுக்க முடியாமப் பழிவாங் கணும்னு துடிச்சேன். உங்க நாய் மேல உங்களுக்கு ரொம்பப் பிரியம்னு எனக்குத் தெரி யும். அதனால நீங்க கிளப்புக்குப் போனதும் நான் உங்க வீட்டுக்குப் போய் நாயை நைசா வெளியில் அழைச்சு ரோட்டில விரட்டிட்டுக் கதவை மூடிட்டேன். உங்க வீட்டுக்கு நான் அடிக்கடி வந்திருக்கிறதால நான் கூப்பிட்ட தும் நாய் என்னோட வந்திடுச்சு. நாய் காணா மப் போனதால ஐயா ரொம்ப வருத்தமா இருக்கீங்க போலிருக்கு. இன்னிக்கு லீவு குடுங்க. நான் எப்படியாவது நாயைத் தேடிப் பிடிச்சுக் கொண்டாந்திடறேன்.

"தேட வேண்டிய அவசியமில்லை. நாய் கிடைச்சிடுச்சு. ஆனா ரெண்டாயிரம் ரூபா செலவு" என்று ஆரம்பித்து நவீன் நடந்ததை விவரித்தார்.

"ஐயா, என்னோட தப்பால உங்களுக்குத் தண்டச் செலவு ஏற்பட்டுப் போச்சே! என் னோட சம்பளத்திலிருந்து மாசா மாசம் கொஞ்சம் கொஞ்சமா அந்தத் தொகையைக் கழிச்சுக்குங்க" என்றான் பியூன்.


நவீன் எழுந்து வந்து பியூனை மென்மை யாகத் தட்டிக் கொடுத்தபடியே, "அதெல்லாம் வேண்டாம். இன்னிக்கு நான் கத்துக்கிட்ட பாடத்துக்கு ரெண்டாயிரம் ரூபாய் கட்டணம் கொடுக்கலாம்தான். நான் முதல் முறையா கோபத்தை அடக்கிக்கிட்டேன். இல்லைன்னா விஷயம் கோர்ட்டுக்குப் போய் வழக்காடும்படி ஆகியிருக்கும். நாயும் கிடைக்காமப் போயி ருக்கும். கோபத்தால எப்பவும் நஷ்டம்தான்னு புரிஞ்சுக்கிட்டேன். நாம யாரைக் கோபிச்சுக் கிறோமோ அவங்களுக்கு நம்ம மேல கோபம் வரது நியாயம்தான்னு தெரிஞ்சுக்கிட்டேன்" என்று கூறிவிட்டுக் கோவிந்தனைப் பார்த்துச் சிரித்தார். கோவிந்தனும் அடக்கத்துடன் புன்னகைத்தான்."

தாத்தா கதையை முடித்து விட்டார். பரசு ராமை உற்றுக் கவனித்தார். அவன் முகத்தில் பல மாறுதல்கள் தெரிந்தன. ஏதோ முடிவு செய்து அவன் எழுந்தான். "பரசு, தூங்காமே ஏன் எழுந்திட்டே?" என்று தாத்தா கேட்டார்.

"தாத்தா, நான் தினமும் கோபத்தோட வீட்ல சண்டை போட்டுக்கிட்டே இருப்பேன். இனிமே எப்பவும் அமைதியா இருக்கப் போறேன். இப்பவே போய் அப்பா – அம்மாகிட்டே மன்னிப்புக் கேட்டாதான் தூக் கம் வரும்" என்றான் பரசு திடமாக.

"வாயால மன்னிப்புக் கேட்க வேண்டிய தில்லை, பரசு. நீ எப்பவும் சாந்தமா இருந்தா போதும். நீ திருந்திட்டேன்னு அவங்களே புரிஞ்சுக்குவாங்க" என்றார் தாத்தா முடிவாக.

திரும்பி விடு!



முன் ஒருகாலத்தில் ஒரு மலைப்பகுதியில் அம்மாக் குதிரையும் அதன் மகன் குட்டிக் குதிரையும் வசித்து வந்தன. குட்டிக் குதிரைக்கு அம்மாக் குதிரை மீது ரொம்பப் பிரியம். எனவே, அம்மாக் குதிரையைச் சிறிது நேரம் கூடப் பிரியாமல் அருகிலேயே இருக்கும்.

ஒருநாள், அம்மாக் குதிரை குட்டிக் குதிரையைப் பார்த்து, "மகனே, இப்போது நீ பெரியவனாக வளர்ந்து விட்டாய். சின்னச் சின்ன வேலைகளில் எல்லாம் இனி நீ எனக்குக் கைகொடுத்து உதவ வேண்டும்" என்று கேட்டது.

குட்டிக் குதிரையும் உடனே தலையசைத்து, "சரி அம்மா, கண்டிப்பாகச் செய்கிறேன்" என்றது. அம்மாக் குதிரைக்கு மிகவும் மகிழ்ச்சி.

"இந்தப் பையில் உள்ள கோதுமையை ஆலைக்கு எடுத்துப் போய் மாவாக அரைத்துக் கொண்டு வா" என்றது அம்மாக் குதிரை.

குட்டிக் குதிரை உடனே கோதுமைப் பையைத் தன் முதுகின் மேல் போட்டுக் கொண்டு புறப்படத் தயாரானது. "அம்மா நீயும் என்னுடன் வருகிறாயா?" என்று சிறிது நின்று அம்மாக் குதிரையின் பக்கம் திரும்பிக் கேட்டது.

"எதற்கு? நானும் வருவதென்றால் உன்னை ஏன் போகச் சொல்கிறேன்? தனியாகச் சென்று வர உனக்கும் பழக்கம் வேண்டாமா? நீ மட்டும் தனியாய்ப் போய் வா" என்றது அம்மாக் குதிரை. "கோதுமையை அரைத்துக் கொண்டு சீக்கிரம் வா, உனக்குச் சாப்பாடு தயார் செய்து வைக்கிறேன்" என்றும் ஆசைகாட்டி அனுப்பியது அம்மாக் குதிரை.

கோதுமைப் பையைச் சுமந்து கொண்டு குட்டிக் குதிரை மாவு ஆலைக்குக் கிளம்பியது. வழியில் ஒரு நதி. நதியில் நீர் ஓடிக் கொண்டிருந்தது. தண்ணீரைப் பார்த்தவுடன் குட்டிக் குதிரை திகைப்படைந்து விட்டது. "ஆறு ஆழமாக இருக்கும் போல் தெரிகிறதே! எப்படி இறங்கிப் போக முடியும்? துணைக்கு கூட அம்மாவும் பக்கத்தில் இல்லை. இப்போது என்ன செய்வது?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டது. கவலையோடு அங்கும் இங்கும் பார்த்தது. சிறிது தொலைவில் ஒரு காளை மாடு மேய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. குட்டிக் குதிரை மாட்டின் அருகே சென்றது.

"காளை மாமா, இந்த நதியை என்னால் கடந்து செல்ல முடியுமா? சொல்லுங்கள்!" என்று காளையிடம் கேட்டது குட்டி.

"இந்த நதி ஆழம் இல்லாதது. என் மகன் கூட இறங்கிப் போனான். தண்ணீர் அவன் முதுகு வரைக்கும் கூட வரவில்லை. அதனால், நீ தாராளமாய் இறங்கிக் கடந்து போகலாம்" என்றது காளை.

குட்டிக் குதிரைக்குத் தைரியம் வந்து விட்டது. நீரில் இறங்க, தண்ணீரின் ஓரத்துக்கு வந்து விட்டது. அந்த நேரத்தில் மரத்தின் பக்கமிருந்து ஒரு குரல் கேட்டது.

"நில்லு, நில்லு! அவசரப்பட்டு ஆற்றுக்குள் இறங்கி விடாதே!"

யாருடைய குரல் இது! குதிரைக் குட்டி ஒரு கணம் திகைத்து நின்றது. மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்த ஓர் அணில்தான் எச்சரிக்கைக் குரல் கொடுத்தது. அடர்த்தியான தனது வாலை அசைத்தபடி, குட்டிக் குதிரையை உற்றுப் பார்த்த அணில், "குட்டிக் குதிரையே, அந்தக் கிழட்டு மாடு சொன்னதை நம்பி விடாதே! நதியில் தண்ணீர் மிகவும் ஆழமாக ஓடுகிறது; இறங்கினால் மூழ்கிப் போய் விடுவாய்" என்று மறுபடி எச்சரிக்கை செய்தது.

மு.ப. கௌதம்பாரதி

"ஆழம் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"என் நண்பன் நேற்று ஆற்றுக்குள் இறங்கினான்! அவ்வளவுதான்! பெரிய அலை அப்படியே அடித்துக் கொண்டு போய் விட்டது. நானே என் கண்களால் பார்த்தேன். அதனால் தான் எச்சரிக்கை செய்கிறேன்" என்றது அணில்.

"அப்படியானால் ஏன் இந்தக் காளை மாமா, மட்டும், ஆழமே இல்லை. சும்மா இறங்கு என்று சொன்னது?" என்று கேட்டது குதிரைக் குட்டி.

"என் நண்பன் அணில் என் கண்ணெதிரே மூழ்கி விட்டானே! அந்தக் கிழட்டுக் காளை சொல்வதையெல்லாம் நம்பாதே. திரும்பி விடு" என்று அணில் மறுபடியும் எச்சரித்தது.

ஆறு ஆழமானதா, இல்லையா என்று ஒரு முடிவுக்கு வர முடியாமல் குட்டிக் குதிரை குழம்பிப் போனது. "வீட்டுக்குப் போய் அம்மாவிடமே கேட்டு விடலாம்" என்று வீடு திரும்பியது.

திரும்பி வந்த குட்டிக் குதிரையைப் பார்த்து, அம்மாக் குதிரை வியப்படைந்தது.

"வழியில் குறுக்கே ஒரு நதி இருக்கு. அது மிகவும் ஆழமாயிருக்கு. என்னால் இறங்கிக் கடந்து போக முடியலே" என்றது குட்டிக் குதிரை.


"அந்த நதி ஆழமே இல்லையே! நேற்று கூட குரங்கு மாமா பல தடவை கடந்து தானே விறகுக் கட்டுக்களைக் கொண்டு போனார்! தண்ணீர் தனது அடிவயிற்று அளவு கூட இல்லை என்று அவர் என்னிடம் சொன்னாரே?" என்று அம்மாக் குதிரை கேட்டது.

"இதையேதான் காளை மாமாவும் சொன்னார்" என்றது குட்டிக் குதிரை.

"அப்புறம் என்ன? கடந்து சென்றிருக்க வேண்டியதுதானே?"


"தண்ணீர் மிகவும் ஆழமாக ஓடுகிறது. என் நண்பனைக் கூட அடித்துச் சென்று விட்டது. நீ இறங்காதே என்று அணில் பயப்படுத்தியது அம்மா. அதான் தயங்கி வந்து விட்டேன். இப்போ, யார் சொல்வதை நம்புவதுன்னு தெரியலே" என்றது குட்டிக் குதிரை.

"ஒரு விஷயம் யாரால் சொல்லப்படுகிறது என்பது மிகவும் முக்கியம்! அதை இன்னும் நீ புரிந்து கொள்ளவில்லை. எச்சரித்து பயப்படுத்திய அணில் மிகவும் சிறிய பிராணி. அதன் நிலையில் பார்த்தால் ஆற்றுத் தண்ணீர் ஆழமாய் ஓடுவது மாதிரிதான் இருக்கும். ஆனால் குதிரைக் குட்டியாகிய நீ பெரிய பிராணி அல்லவா?



உனக்கு அதே ஆற்றுத் தண்ணீரின் அளவு மிகவும் கொஞ்சமாகத்தானே இருக்கும்? யார் என்ன சொன்னால் என்ன? அதன் உண்மையை ஆராய வேண்டாமா?" என்று கேட்டது அம்மா.

நதியின் நீர் ஆழமில்லை என்பதை உணர்ந்து கொண்ட குதிரைக்குட்டி, நதியைக் கடக்கும் முடிவோடு விரைந்தது.



● அருணாதேவி, தக்கோலம்.

? கண்களில் புரை வளர்ந்து பார்வையை மறைத்து விடும் என்கிறார்களே, அப்படி யென்றால் என்ன? இதைத் தடுக்க வழி உண்டா?

! நமது கண்கள் ஒரு காமிராவைப் போல பணி செய்வது உனக்குத் தெரியுமில்லையா, அருணாதேவி? காமிராவில் 'லென்ஸ்' வழி யாக ஒளிக்கதிர்கள் புகுந்து புகைப்படம் கொடுப்பது போல, நம் கண்களில் உள்ள 'விழி லென்ஸ்' வழியாக ஒளிக்கதிர்கள் நுழைந்து 'பார்வை' கொடுக்கிறது. இந்த விழி லென்ஸ் சாதாரணமாக ஒரு பளிங்கு போல் இருக்கும். வயது ஆக ஆக இதன் பளிங்குத் தன்மை குறைந்து கொண்டே வரும். ஒரு கட்டத்தில் புகைபிடித்த கண்ணாடி மாதிரி இது ஆகி விடும். இப்படிப்பட்ட நிலை மையில் ஒளிக்கதிர்கள் விழிலென்ஸில் முழுவதுமாகப் புகுந்து செல்ல இயலாது. இதனால்தான் பார்வை குறைகிறது. இந்த நிலைமைக்குக் 'கண் புரை நோய்' (CONTARACT) என்று பெயர். இதைத் தடுக்க முடியாது. முது மையில் தலைமுடி நரைப்பதைப் போல கண் களில் புரை வருகிறது. அவ்வளவுதான்! ஆனால் இதைத் தள்ளிப் போடலாம். முட்டை, பால், காரட், முட்டைகோஸ், ஈரல் போன்ற சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டு வந்தால் கண்புரை வருவது தாமதமாகும்.

● க. துரை, வெள்ளையாம்பட்டு.

? என்னுடைய மாமா மகனுக்கு தலை முடி, கை, கால்கள், மற்றும் உடம்பு முழுவதும் வெள்ளை நிறத்தில் படைகள் உள்ளன. இதைக் குணப்படுத்த முடியுமா, முடியாதா, டாக்டர்?

! நீ சொல்வதைப் பார்க்கும் போது உன் மாமா மகனுக்கு 'வெண்படை நோய்' (VITILIGO) உள்ளது போல் தெரிகிறது. இது தோலில் உள்ள நிறமிகள் குறைவதால் ஏற்படுகின்ற நோய்; தொற்று நோயுமில்லை; பயப்படக் கூடிய நோயுமில்லை. நீ உடனடியாக உன் மாமா மகனை அருகிலுள்ள தோல் நோய் மருத்துவ நிபுணரிடம் அழைத்துச் செல். நோய் குணமாக நிறைய வழிகள் உள்ளன.

● ஆர். நந்தகுமார், வெள்ளிக்கிடங்கு.


? டாக்டர், எனக்கு அடிக்கடி நெஞ்சில் 'சுருக், சுருக்' என்று ஊசியால் குத்துவது போல வலிக்கிறது. இது எதனால்? என்ன நோயின் அறிகுறி? எனக்குப் புற்றுநோயாக இருக்குமோ என்று பயமாக உள்ளது (எனக்கு வயது 15தான் ஆகிறது).


! பயப்படாதே, நந்தகுமார்! உனக்குப் புற்று நோய் இருக்க வாய்ப் பில்லை. இந்த வயதில் நெஞ்சுவலி ஏற்படுவதற்கு முக்கிய காரணம் ரத்தசோகை. அடுத்த காரணம், டென்சன்! இரும்புச் சத்து நிறைந்த கீரைகள், பால், முட்டை, பழங்கள், பேரீச்சம்பழம், பச்சை நிறக் காய்கறிகள், ஈரல் போன்றவற்றை அடிக்கடி சாப்பிடு. ரத்த சோகை வராது; நெஞ்சுவலியும் விடைபெற்றுக் கொள்ளும். நீ செய்யும் எந்த வேலையையும் நிதானமாக - அவசரப்படாமல் - பயப்படாமல் செய்.

பித்தவெடிப்பு ஏன் வருகிறது?









இதுவும் உன் நெஞ்சுவலியைக் குறைக்க உதவும்.

● மு. சி. உம்மு அம்மாரா, லால்பேட்டை.


? டாக்டர்! எனக்கு ஒரு சந்தேகம்! கண் ஆபரேசன் செய்யும் போது நோயாளியின் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே ஆபரேசன் செய்வார்களா? அல்லது மயக்க ஊசி போட்டு விட்டுச் செய்வார்களா?

! முதலில் கண்ணுக்கு அருகில் - கன்னத்தில் மயக்க ஊசி போடுவார்கள். சிறிது நேரத்தில் கண் உள்ள பகுதி முழுவதும் மரத்துப் போகும். வலி தெரியாது. அதற்குப் பிறகு கண்களைத் திறந்து வைத்துக் கொண்டுதான் கண் ஆபரேசன் செய்வார்கள். சந்தேகம் தீர்ந்ததா, அம்மாரா?

● க. மீனாட்சி, மன்னார்குடி.

? என் காலில் பித்த வெடிப்புகள் அதிகமாக உள்ளன. இது ஏன் வருகிறது? முற்றிலும் இதை நீக்க என்ன வழி!





! பித்த வெடிப்புகள் காளான் கிருமிகளின் பாதிப்பால் வருகிறது. காலில் ஈரப்பசை அறவே இல்லாவிட்டாலும் பித்த வெடிப்பு உண்டாகும். மருத்துவர் யோசனைப்படி தருந்த காளான் கொல்லிக் களிம்பு களைப் பாதங்களில் பூசினால் பித்தவெடிப்பு குணமாகும். அத்தோடு பாதங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியதும் அவசியம்.

● அ. ஹாஜாநஜ்முதீன், மதுக்கூர்.

? பபின்கம் சாப்பிட்டால் புற்றுநோய் வரும் என்று என் நண்பன் சேக் கூறுகிறான்; உண்மையா, டாக்டர்?

! உண்மைதான், தம்பி. வருடக்கணக்கில் தொடர்ந்து பபின்கம் சாப்பிட்டால் வாயில் புற்றுநோய் வர அதிக வாய்ப்புள்ளது உன் நண்பன் கூறுவது சரிதான்!

● கோவி. அஞ்சுகம், புத்திராம்பட்டு.

? நூறு வயது வரை வாழ ஒரு வழி சொல்லுங்கள், டாக்டர்!

! 'உடல் வளர்த்தேனே! உயிர் வளர்த்தேனே!' என்றார் திருமூலர். இதுதான் நூறு வயது வரை வாழச் சிறந்த வழி. பிறந்ததிலிருந்து சரியாக - வலுவாக - ஆரோக்கியமாக - நம் உடலை வளர்த்து வந்தால் நாம் நிச்சயம் நூறு வயது வரை வாழ முடியும், அஞ்சுகம்!

● கே. மகேஸ்வரி, குற்றாலம்.

? தொழுநோயின் அறிகுறிகள் என்னென்ன?

! தோலில் நிறம் மாறிய படைகள், சிவப்பு நிறத்தில் தோல் மினு மினுப்பு. படைகளில் உணர்ச்சிக் குறைவு. முடி உதிர்தல் போன்றவை தொழுநோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள். நோய் உடலில் பரவப் பரவ நரம்பு பாதிப்பு, முகத்தில் முண்டுகள் தோன்றுதல், மூக்கு அமுங்குவது, காது வீங்கி விரைத்துக் கொள்வது, கை கால் விரல்கள் உள் நோக்கி மடங்குவது, விரல் இழப்பு, பாதத்தில் குழிப்புண்கள் தோன்றுவது போன்ற மோசமான அறிகுறிகள் வெளிப்படும். ஆனால் ஒன்று மகேஸ்வரி... தொழுநோயை துவக்கத்திலேயே கவனித்து சிகிச்சை பெற்று விட்டால் ஆறே மாதங்களில் இதைக் குணப்படுத்தி விடலாம்!

● டி. ரம்யா, சென்னை - 63.

? காப்பி, டீ உடம்புக்குக் கெடுதலா, டாக்டர்?

! இதிலென்ன சந்தேகம், ரம்யா? காப்பி, டீ நம் உடம்புக்குக் கெடுதல்தான். இவை நம் உடம்பில் உள்ள நரம்பு மண்டலத்தை சிறிது சிறிதாகக் கெடுக்கிறது. நரம்புத் தளர்ச்சிக்கு வழி அமைக்கிறது. வயிற்றுப் புண்ணுக்குப் பாதை போடுகிறது. ரத்தக் குழாய்களை சீர்குலைக்கிறது. என்றாலும், காலையில் எழுந்ததும் நாம் அதைத்தான் நாடுகிறோம். தெரிந்தே செய்கின்ற தவறுகளில் முதன்மையானது இது! என்று தணியும் நம் காப்பி, டீ தாகம்?

டாக்டர். கு. கணேசன்

புத்தி வந்தது!



தங்கபுரத்தின் ராஜா தருமசீலர் நாட்டு மக்களையெல்லாம் அன்போடு பாதுகாப்பவர். மக்களையெல்லாம் நல்ல பழக்க வழக்கத்திலே செலுத்தி, மாற்றி அவர்களை நல்ல குடிமக்களாக ஆக்குபவர். ஒவ்வொரு நாளும் இரவு மாறுவேடத்தில் குடிமக்களுடைய பேச்சையும் செயல்களையும் கவனித்து குறை தீர்த்து வருபவர். அப்படியிருந்தும் கொஞ்ச நாட்களாக நாட்டு மக்களின் மனதிலே தங்கத்தின் மேலேயும், தங்க நகைகளின் மேலேயும் அளவுக்கு மேல் ஆசை பிறந்திருந்தது. ஆண்களும், பெண்களும் விதவிதமான நகைகளையெல்லாம் செய்து அணிந்து வர ஆரம்பித்து விட்டார்கள்.

இதையெல்லாம் ராஜா நேரிலேயும், அமைச்சர் மூலமாகவும், நாட்டு அதிகாரிகளின் மூலமாகவும் அறிந்து கொண்டார். உணவு தானியங்களை சேமிக்க வேண்டிய மக்கள் தங்கத்தையும், தங்க நகைகளையும் சேமிக்க ஆரம்பித்து விட்டார்கள்! விளைவித்த தானியங்களையெல்லாம் அயல் நாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்று, பதிலாக தங்கமாகவும், தங்க நகைகளாகவும் எடுத்துக் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள்!

மக்களைத் தங்கநகை மோகத்தில் இருந்து எப்படி மீட்பது? மக்களின் உயிர் காக்கும் உணவு தானியங்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குப் போகின்றனவே? இதையெல்லாம் எப்படித் தடுப்பது? மன்னர் ஒரு முடிவுக்கு வந்தார்.

அரண்மனை பொக்கிஷத்தில் இருந்த தங்க வெள்ளக் கட்டிகளை பணியாளர்களிடம் கொடுத்து, மாறுவேடத்தில் அனுப்பி வைத்து, மக்கள் விற்கும் உணவு தானியங்களை எல்லாம் வாங்கி வரும்படி ஏற்பாடு செய்து, நிலவறைக்குள் சேமித்து வைத்தார் மன்னர். இப்படி வெளி நாடுகளுக்குச் செல்ல இருந்த அத்தனை உணவு தானியங்களும் அரண்மனை நிலவறைக்குள் பாதுகாத்து வைக்கப்பட்டன.


காலம் ஓடியது. அந்த ஆண்டு பயங்கர வறட்சி. மழை பொய்த்து விட்டது. மக்கள் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் அல்லாடினார்கள். தாங்கள் சேர்த்து வைத்திருந்த தங்க நகைகளை விற்று வெளிநாடுகளில் தானியம் வாங்க முயன்றார்கள். உணவு தானியம் கிடைத்தது. ஆனால் ஒன்றுக்குப் பத்து விலையில்!

உணவு தானியங்களைச் சேமிக்காது நகைப் பைத்தியம் பிடித்து எல்லாவற்றையும் பறிகொடுத்து பசி தீர வழியில்லாமல் தவிக்கிறோமே என்று அப்பொழுதுதான் வருந்த ஆரம்பித்தனர் மக்கள்.

மன்னர் எதிர்பார்த்ததும் இதைத் தானே? மிகக் குறைந்த விலைக்கு, சேமித்து வைத்திருந்த தங்க வெள்ளி நகைகளுக்குப் பதிலாக, உணவு தானியங்கள் மக்களுக்கு விற்கப் பட்டன. மக்களுக்கும் புத்தி வந்தது. நாடு பஞ்சத்திற்குப் பலியாகாமல் தப்பியது. மன்னர் மனமகிழ்ந்தார்.

— எஸ். வஜ்ரவேலு.

மாயக் கண்ணாடி!



காட்டில், முயல் ஒன்று இருந்தது. அதற்கு ஒரு மூக்குக் கண்ணாடி கிடைத்தது. அதை அணிந்து கொண்டது. அதன் வழியாகப் பார்ப்பவை எல்லாம் சிவப்பாகத் தெரிந்தன!

உடனே முயல், 'இது ஒரு மாயாஜாலக் கண்ணாடி! இதை அணிந்து கொண்டு, காட்டில் உள்ள எல்லா மிருகங்களையும் பயப்படுத்தி விடலாம்' என்று மகிழ்ந்தது.

எதிரே நரி வந்தது. கண்ணாடி அணிந்த முயலை, அது ஏதோ ஒரு பயங்கர மிருகம் என்று நினைத்துப் பயந்து நடுங்கத் தொடங்கியது!

"என்ன நரியாரே! ஏன் உமது உடம்பு இப்படிப் படபடவென்று ஆடுகிறது? பயமா? நான்தான்... உன் நண்பன் முயல்... மாயக் கண்ணாடி அணிந்திருக்கிறேன்..." என்றது முயல் வெற்றிக் களிப்புடன்.

நரியின் பயம் நீங்கியது.

பிறகு முயல், "என்ன நரியாரே! உம் உடலின் நிறம் ஏன் இப்படிச் சிவப்பாகி விட்டது?" என்று வியப்புடன் கேட்டது.

"இல்லையே! பழுப்பாகத்தானே இருக்கிறது!" என்றது முயல்.

"இல்லவே இல்லை. உமக்குத் தெரியவில்லை. என் கண்ணாடி காட்டிக் கொடுத்து விட்டதே! இன்னும் சொல்லட்டுமா? உம் வயிற்றுக்குள் இரண்டு சுண்டெலிகள் கிடக்கின்றன... சரியா?" என்று கேட்டது முயல்.

உண்மை என்ன தெரியுமா? அதற்குச் சற்று முன்புதான் இரண்டு சுண்டெலிகளை, நரி பிடித்துத் தின்றதை, முயல் மறைந்திருந்து பார்த்திருந்தது.

நரி, முயல் சொன்னதை உண்மை என்று நம்பி விட்டது. "ஐயோ...! நான் நிறம் மாறிவிட்டேனே! என்ன செய்வேன்?" என்று அது கவலையுடன் அலறியது.

"இன்னும் சொல்லட்டுமா...?" என்ற முயல், "வானத்தின் நிறத்தைக் கூட என் மாயக் கண்ணாடி மாற்றிவிடும். அது மட்டுமா? எந்தத் தடையையும் ஊடுருவி, இதைக் கொண்டு பார்த்து விட முடியும்! இந்தப் புதருக்குள் கரடி ஒன்று நாக்கால் தன் முகத்தை நக்கிக் கொண்டிருக்கிறது. அந்த மலைக்கு அப்பால் உள்ள ஓடை நீரில் ஒரு காக்கை குளித்துக் கொண்டிருக்கிறது..."

"இன்னும்... இந்தக் காட்டை நோக்கி, வெகு தூரத்தில் ஒருவன் வந்து கொண்டிருக்கிறான். அவனுடன் ஒரு வேட்டை நாயும் வருகிறது... அவன் ஏன் இங்கு வருகிறான் தெரியுமா?"

"உன்னைத் துரத்திப் பிடித்துக் கொன்று, உன் தோலால் சட்டை தைக்க வேண்டும் என்று தான் அவன் வருகிறான். எல்லாம் என் மாயக் கண்ணாடியில் தெரிகிறதே!" என்று இஷ்டத்துக்கு ரீல் விட்டது முயல்.

முயல் கூறியதில் ஒன்று கூட உண்மையில்லை. மனம் போன போக்கில் பொய் கூறி, அது நரியை மிரட்டியது.

"ஐயோ...!" என்று பதறிய நரி உடனே அங்கிருந்து தலைதெறிக்க ஓட்டமெடுத்து விட்டது.

முயல் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

வழியில், ஒரு மர நாய் அமர்ந்து ஏதோ செய்து கொண்டிருந்தது.

"ஹலோ! மரநாய்... என்ன செய்றீங்க!" என்றது நரி.

"யாரு? முயலாரா? என் சட்டை கிழிந்து விட்டது. தைக்க வேண்டும். ஊசி

ஜானகிமணாளன்



யில் நூலைக் கோர்க்கிறேன். ஊசியில் கண்ணுக்குள் நூலை நுழைக்கவே முடிய வில்லை" என்றது மரநாய்.

"அட....! இது தானா பிரச்சினை? கொடுங்கள் இப்படி... என் மாயாஜாலக் கண்ணாடி வழியாகப் பார்த்து, இதோ ஒரு நொடியில் கோர்த்துத் தருகிறேன்" என்று வாங்கிக் கோர்த்துக் கொடுத்தது முயல்.

மரநாய்க்கு ஒரே ஆச்சர்யம்.

அதற்குள், நரி சென்று முயலின் மாயக் கண்ணாடி பற்றிய செய்தியைக் காடு முழுவதும் ஒலிபரப்பி விட்டது.

அவ்வளவுதான். காட்டு மிருகங்கள் எல்லாம் பரபரப்புடன் ஓடிவந்து, முய லைச் சூழ்ந்து கொண்டன.

முயல் ஓர் உயரமான இடத்தில் ஏறி அமர்ந்து கொண்டது. வானத்தை அண்ணாந்து பார்த்துச் சொன்னது.

"ஆகா...! எத்தனை அற்புதக் காட்சி! ஒரு விண்வெளி ஓடம், செவ்வாய்க் கிரகத்தை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது..." என்று கதை விட்டது.

இன்னும், அதோ அதைப் பார்க் கிறேன்; இதோ இதைப் பார்க்கிறேன் என்று தனது புளுகு மூட்டையைத் தொடர்ந்து அவிழ்த்து விட்டுக்



கொண்டே இருந்தது.

எல்லா மிருகங்களும், அந்தப் புளுகு களை நம்பின! பீதியுடன் முயலை நோக்கின.

அது சொல்வது உண்மையா? பொய்யாகக் கூட இருக்கலாம் என்பதைக் கூட அவை நினைக்கவில்லை. காட்டுக் குள் ஒரே பரபரப்பு!

இப்படியாக மாலை வந்து விட்டது.

ஒவ்வொன்றாக, எல்லா மிருகங்களும் வீடு செல்லத் தொடங்கின. முயலுக்கும் பசியெடுத்தது.

அது கீழே இறங்கி வந்து வழக்கமாகத் தின்னும் புற்களைப் பறித்தது. அந்தப் புற்கள் அதன் கண்களுக்குச் சிவப்பாகத் தெரிந்தன. தான் சிவப்புக் கண்ணாடி அணிந்திருப்பதே முயலுக்கு மறந்து போய் விட்டது. எனவே, 'புற்கள் கெட்டுப் போய் விட்டன' என்று கருதி, வேறு செடி களைப் பறித்தது. அவையும் சிவப்பாகவே தெரிந்தன.

"ஐயோ! நான் என்ன செய்வேன்? என் உணவெல்லாம் இப்படிப் பாழாய்ப் போய்க் கிடக்கின்றனவே...! பசி வயிற்றைக் கிள்ளுகிறதே! எதை உண்பேன்?" என்று அரற்றியது. ஒரு மரத்தடியில் அமர்ந்து அழத் தொடங்கியது முயல்.

அந்த மரத்தின் பொந்து ஒன்றில், ஓர் ஆந்தை வசித்து வந்தது. பகல் முழுதும் உறங்கிய அது, இருள் வந்ததும், விழித்துக் கொண்டு, சோம்பல் முறித்தவாறு கீழே பார்த்தது.

மரத்தடியில் முயல் உட்கார்ந்து அழு வதைக் கண்டு, அதன் எதிரில் பறந்து வந்து அமர்ந்தது.

"என்ன முயலாரே? ஏன் இப்படி அழுகிறீர்கள்?" என்றது ஆந்தை.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? நான் உண்ணும் உணவு எல்லாம் சிவப்பாகி விட்டன. அதை எப்படித் தின்பேன் ஆந்தையாரே? நல்ல பசி... வாடுகிறேன்" என்று புலம்பியது முயல்.


ஆந்தை, 'இடி...இடி...' என்று சிரித்தது.

பிறகு, "நீங்கள் சரியான முட்டாள், முயலாரே! நீங்கள் அணிந்திருப்பது சிவப்பு மூக்குக் கண்ணாடி. அதனால் அதை அணிந்து பார்த்தால் எல்லாம் சிவப்பாகத் தானே தெரியும்? இதை மறந்து விட்டீர் களே?" என்றது ஆந்தை.

"அட... ஆமாம்!" என்றது முயல் அசடு வழிய.

தனது மாயாஜாலக் கண்ணாடியைக் கழற்றி எறிந்து விட்டு, முயல் புற்களைப் பறித்துத் தின்னக் கிளம்பிச் சென்றது. முயல் எறிந்து விட்டுச் சென்ற, அந்த மாயாஜாலக் கண்ணாடியை, ஆந்தை எடுத்து அணிந்து கொண்டது. இன்னும் அந்தக் கண்ணாடி ஆந்தையின் கண்களில் உள்ளதை நீங்கள் கூடப் பார்த்திருக் கலாமே?

ருஷ்ய நாடோடிக் கதை



என் பங்கு...


மனம் முழுக்க ஒரே மகிழ்ச்சியாய் இருந்தது மருதுவுக்கு.

பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுலாவுக்குச் செல்ல விரும்புவோர் பணம் கட்ட நாளைதான் கடைசி நாள். ஒரு வாரமாய் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் பிடி கொடுக்காத அப்பா, இன்று அலுவல் விட்டு வந்ததும் வராததுமாய் மருதுவை அழைத்து சுற்றுலா செல்ல ஒப்புதல் தந்ததோடு, கனையாய் இருநூறு ரூபாயையும் அவன் கையில் திணித்து விட்டார்.

யாரோ தன்னைத் தூக்கிக் கொண்டு போய் உல்லாசக் கோபுரத்தின் உச்சியில் அமர வைத்து விட்டதைப் போல் இருந்தது மருதுவுக்கு! தமிழ்ப் புத்தகத்திலும் வரலாற்றுப் புத்தகத்திலும் இருந்த பாட வரிகளில் மட்டுமே தெரிந்த, மைசூர் பிருந்தாவனமும், கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டும், பெங்களூர் விதான் சவுதாவும், லால்பாக்கும், ஊட்டியின் ஏரியும் அவன் கண் முன்னே அணி வகுத்து நின்றன. அவற்றை எல்லாம் நேரில் பார்க்கப் போகிறோம் என்று நினைத்தபோதே தனக்கு ஒரு தனி கவுரவம் வந்துவிட்டதைப் போல் மனதுக்குள் உணர்ந்தான் மருது.

"மருது கொஞ்சம் கடைக்குப் போயிட்டு வரீயா?" - அம்மா கேட்டதும் எப்போதும் சலித்துக் கொள்பவன் மலர்ச்சியான முகத்தோடு பையையும் பணத்தையும் வாங்கிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தான்.

கடைக்குச் சென்று வரும்போது கண்ணில் பட்ட நண்பர்களிடமெல்லாம் தான் சுற்றுலா



மு. நடராசன்



செல்ல கணக்கு ஆசிரியரிடம்தான் பணம் கொடுத்துப் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்!

"மருது கொஞ்சம் டி.வி.யை ஆன் பண்ணு. செய்தி கேட்போம்'' - அப்பா கூறவே டி.வி.யை வைத்தான்.

தனக்கே உரிய பிரத்யேக ஒலி முழக்கத்துடன் செய்தி ஆரம்பமானது!

''ஆந்திராவில் கடும் புயல்.

செல்ல இருப்பது குறித்து அறிவித்து விட்டான்.

அப்பா அறிவுறுத்தாமலேயே வீட்டுப் பாடங்களை நேரத்தோடு முடித்து விட்டு, மறுநாளைக்குத் தேவையானவற்றைக் கால அட்டவணைப்படி முறைப்படுத்தி எடுத்து வைத்துக் கொண்டான்.

அப்பா கொடுத்த இருநூறு ரூபாயை மறக்காமல் கணிதப் புத்தகத்தில் எடுத்து வைத்துக் கொண்டான். சுற்றுலா

வெள்ளச் சேதங்களைப் பிரதமர் விமானம் மூலம் பார்வையிட்டார்"

செய்தியால் ஈர்க்கப்பட்ட மருது டீ.வி. முன் அமர்ந்து கொண்டான்.

"ஐயாயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் சேதம். ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர். எண்ணிலா மக்கள் தம் வீடு மற்றும் உடமைகளை இழந்து தவிப்பு"- நெஞ்சை உலுக்கும் செய்தி தொடர அந்தக் கோரக் காட்சிகள் படமாய் ஓடின.

'எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடு. உயிரிழந்தோரின் பிணங்கள், கால் நடைகள், இயற்கையின் கோரப் பிடியில் சிக்குண்டு ஒடிந்து தொங்கும் மரங்கள், மின் கம்பிகள், பயிர் முழுவதும் மூழ்கிப் போன வயற் காடுகள். ஒட்டிய வயிறுடன் மரண பயத்தில் வயோதிகர்களும் சிறார்களும், கூரை பிய்ந்துபோய் குட்டிச் சுவராய் நிற்கும் குடிசைகள்..."

வாழ்விழந்து பரிதவிக்கும் அந்தக் கும்பலில் தன்னையும் ஒருவனாய் ஒருகணம் கற்பனை செய்தபோது நெஞ்சு பாரமாய் இருந்தது. துக்கம் தொண்டையைக் கௌவ, கண்களிலிருந்து தாரை தாரையாய்த் தண்ணீர் வழிந்தது மருதுவுக்கு.

புயல் பாதித்த இடங்களைப் பார்வையிட்ட பின் நிருபர்கட்கு அளித்த பேட்டியின்போது,

"கருணையே இல்லாத இயற்கையின் தாக்குதலால் சிதைந்து போன இவர்களின் வாழ்க்கையை சீரமைக்கக் கருணையோடு உதவுங்கள்"- சோகமான முகத்துடன் இருகரம் கூப்பி வேண்டுகோள் விடுத்தார் பிரதமர்.

என்ன நினைத்தானோ மருது, கண்களைத் துடைத்துக் கொண்டு 'விர்ர்...ரென்று' எழுந்து சென்றவன் சுற்றுலா செல்வதற்கென்று அப்பா அளித்திருந்த இருநூறு ரூபாயை எடுத்து வந்து அப்பாவின் கையில் திணித்தான். அப்பா அவனை வியப்புடன் பார்த்தார்: "அப்பா அந்த ஆதரவில்லா மக்களுக்காக என் சிறு உதவிப்பா. நான் உண்டியலில் சேர்த்து வைத்திருக்கும் பணத்தையும் தரேம்பா. நாளைக்கே அனுப்பி வைங்கப்பா ப்ளீஸ்...

மனிதநேயம் மிக்க தன் மகனைப் பார்த்து உண்மையிலேயே பெருமைப் பட்ட தந்தை, அவர் பங்கையும் கொஞ்சம் சேர்த்து அனுப்புவதாகவும், அதை ஈடு செய்ய வேண்டி, அந்த மாதம் முழுக்க ஸ்கூட்டரை எடுக்காமல் சைக்கிளிலேயே பயணம் செய்யப் போவதாகவும் அறிவித்தார்.

"இந்தாங்க என் பங்கு. இந்த மாதம் முழுக்க மாலையில் நம் அனைவருக்கும் காபி கட்" என்றபடி நூறு ரூபாயைத் தன் பங்காகக் கொண்டு வந்து தந்தாள் மருதுவின் அம்மா.

"இந்தாங்கப்பா. இந்த உண்டியல்ல இருக்கும் காசையும் அதோடு சேர்த்து அனுப்பிடுங்க" என்று தன் பிஞ்சுக் கரங்களில் உண்டியலை ஏந்தி வந்த தங்கை சீதாவை அன்போடு வாரியணைத்துக் கொண்டான் மருது.

ஏதோ தனக்கு ஏற்பட்ட பெரும் துயரைக் குறைக்க வழி கிடைத்து விட்டதைப் போல் அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது மருதுவுக்கு!

"நீ எப்படி ஓட்டப் பந்தயத்துல முதல்ல வந்தே?"

"பின்னாடி ஒரு நாய் துரத்துச்சே...."

–பொன். குமார்



அக்காவாம் அக்கா!

தேவி நாச்சியப்பன்



அம்மாவும், அப்பாவும் எவ்வளவு சமாதானம் சொன்னாலும் சிந்து கேட்பதாக இல்லை. எப்பவும் இப்படித்தான். அவளுடைய கோபத்துக்குக் காரணம் விஜி அக்காதான்.


விஜிக்கு 13 வயது; எட்டாவது படிக்கிறாள். சிந்துவுக்கு 11 வயது. ஆறாவது படிக்கிறாள். விஜியும், சிந்துவும் அக்கா தங்கையர். விஜி எப்போதும் சிந்துவிடம் அன்பாக நடந்து கொள்வாள். ஆனால் சிந்து, அக்காவை ஒரு எதிரி போலவே நினைப்பாள். அதற்குக் காரணமும் இருந்தது. விஜியின் பழைய உடை, புத்தகங்கள் எல்லாம் ஆண்டு தவறாமல் சிந்துவுக்குத்தான் வந்து சேரும்!

புதுப்பள்ளிக்கூடத்தில் 6-ஆம் வகுப்பில் சேர்ந்தவுடன் எல்லா மாணவிகளும் புது சீருடை அணிந்து வந்தார்கள். அம்மாவும், அப்பாவும் "அக்காவுடையதைப் போட்டுக்கோ, போட்டுக்கோன்னு தொந்தரவு பண்றாங்களே!" என்று சிந்துவுக்கு மிகுந்த வருத்தம். நினைக்க நினைக்க அழுகையும், கோபமும் வந்தது. "அக்காவாம் அக்கா. அவளுடையதை நான் போட்டுக்க மாட்டேன்" என்று அடம்பிடித்தாள்.

சிந்துவின் அப்பா, "ஏம்மா, சிந்து நாம் இருக்கற நிலைமையில உங்க ரெண்டு பேருக்கும் பள்ளிக்கூட பீஸ் கட்டுவதே சிரமமாக இருக்கு. ஏதோ ஆண்டவன் புண்ணியத்திலே ரெண்டு பேருமே நல்லாப் படிக்கிறீங்க. கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கலாம்னு பார்த்தா நீ இப்படி அடம்பண்ணலாமா? விஜி நல்ல பொண்ணு. சீருடையை அழுக்காக்காமல், கிழிக்காமல் ரெண்டு வருஷம் பத்திரமா வச்சிருந்தா. இப்ப அவ உயரமா வளர்ந்திட்டதால அவளுக்கு வேறு சீருடை எடுக்கணும்" என்று சொன்னார்.

சிந்துவோட அம்மா, "விஜியோட சீருடையை சலவைக்குப் போட்டு வாங்கி வச்சிருக்கேன். புது டிரஸ் மாதிரியே இருக்கு. அதைப் போட்டுக்க மாட்டேன்னு, பள்ளிக்கூடம் புறப்படற நேரத்திலே அடம்பண்ணலாமா? சமத்து சிந்து, இதைப் போட்டுக்கம்மா. ரெண்டு மாதம் கழித்து உனக்குப் புதுசா ரெண்டு செட் சீருடை தைச்சுத் தர்றோம்" என்றாள்.

சிந்துவும் வேறுவழியில்லாமல், வேண்டா வெறுப்பாக அதே சீருடையைப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போனாள். மற்ற மாணவிகளின் புதிய சீருடையையும், தன்னுடைய சலவை செய்த சீருடையையும் சிந்து



அடிக்கடி பார்த்துக் கொண்டான். புது சீருடை போட்டிருக்கும் மாணவிகளுடன் பேசக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை!

உயர்நிலைப் பள்ளி என்பதால் ஒவ்வொரு பாட வேளைக்கும் ஒவ்வொரு டீச்சராக வந்து பாடம் நடத்தினர். 6-ஆம் வகுப்பு மாணவிகளின் சேர்க்கை பள்ளி திறந்த ஒரு வாரத்தில் முடிவடைந்தது. ஆசிரியைகள் அவரவர் பாடங்களுக்கான நோட்டுப் புத்தகம் மற்ற பொருட்கள் வாங்கச் சொல்லி ஒரு பட்டியல் கொடுத்தனர்.

சிந்து அம்மாவிடம், "அம்மா இன்னிக்கு எல்லா டீச்சரும் புத்தகம், நோட்டுப் புத்தகம், ஜியோமெட்ரி பாக்ஸ், கலர் பென்சில் எல்லாம் வாங்கணும்னு சொல்லியிருக்காங்க. அப்பா ஆபீஸில் இருந்து வந்ததும், நானும் அப்பாவும் போய் எல்லாவற்றையும் வாங்கி வருகிறோம்" என்று உற்சாகமாகச் சொன்னாள்.

அம்மா, "சிந்து உனக்கு நோட்டுப் புத்தகம் மட்டும் வாங்கினால் போதும். மற்றதெல்லாம் நம்ப வீட்டிலேயே இருக்கு" என்று சொல்லி முடிப்பதற்குள், சிந்துவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது.

சிந்து அழுதுகொண்டே, "எப்பப் பார்த்தாலும் பழசு, பழசு. நான் எதையுமே புதுசா பயன்படுத்தக் கூடாதா? எதுவுமே புதுசாக வாங்கித் தராமல் ஏன் இப்படிக் கஷ்டப்பட்டுத்துகிறீர்கள்? உங்களுக்கெல்லாம் விஜியைத்தான் பிடிக்கும். அவளுக்குத்தான் புதுசா வாங்குவீங்க. எனக்கு எதுவுமே வாங்க மாட்டீங்க" என்று அழுது கொண்டே கூறினாள்.


அம்மாவும் எவ்வளவு பொறுமையாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு பொறுமையாகச் சொன்னாள். வீட்டு நிலைமை அப்பாவின் கஷ்டம் எல்லாவற்றையும் சிந்துவிடம் சொல்லிப் புரியவைக்க முயற்சி செய்தாள்.

சிந்து எப்படியாவது புதுசு வாங்கி விட வேண்டும் என்று நினைத்தாள். அதனால், "எனக்கும் அக்காவுக்கும் ஜியோமெட்ரிபாக்ஸ், கலர் பென்சில் போன்றவை ஒரே நாளில் தேவைப்பட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள்.

அதற்கு விஜி, "யாருக்கு முதலில் தேவையோ அவர்கள் வச்சுப்போம். அவுங்க பீரியட் முடிஞ்சவுடன் இன்னொருத்தர் வாங்கிக்கலாம்" என்றாள். சிந்து விடுவதாக இல்லை. "ரெண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் தேவை இருந்தா...?" என்றாள். "அப்படி இருந்தா, நான் டீச்சரிடம் சொல்லி பக்கத்துப் பெண்ணிடம் வாங்கிக்கிறேன்" என்றாள் விஜி.

வழக்கம் போல் சிந்து கோபமாக முணு முணுத்துக் கொண்டே போய் விட்டாள்.

மறுநாள் காலை சிந்து பள்ளிக்கூடம் சென்றாள். அவள் வகுப்பு மாணவிகள் எல்லாம் அவர்கள் வாங்கிய புது ஜியோமெட்ரிபாக்ஸ், கலர் பென்சில் புத்தகம்



எல்லாவற்றையும் ஒருவரிடம் ஒருவர் காண்பித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். சிந்துவுக்கு அவமானமாக இருந்தது. தான் மட்டும் பழசை வைத்திருக்கிறோமே என்று கவலையாக உட்கார்ந்திருந்தாள். அப்போது சிந்துவின் தோழிகள் நர்மதாவும், திவ்யாவும் வந்தனர். சிந்துவைப் பார்த்து, "என்ன சிந்து, உடம்பு சரியில்லையா? ஒருமாதிரி இருக்கே," என்று



கேட்டார்கள்.

அதற்கு மேல் சிந்துவால் அழுகையை அடக்க முடியவில்லை. அழ ஆரம்பித்து விட்டாள். நர்மதாவும், திவ்யாவும் பலமுறை காரணம் கேட்டார்கள். சிந்து கொஞ்சம் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "ஏன் தான் ரெண்டாவது பெண்ணாகப் பிறந்ததேனோ? எல்லாமே என் அக்கா சனியன் பயன்படுத்தின பொருள்தான் எனக்கு. உங்கள மாதிரி புதுசு புதுசா எதையும் வாங்கித் தரமாட்டாங்க. நானும் உங்கள மாதிரி ஒரே பெண்ணாப் பிறந்திருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்? எனக்குத்தான் அந்த பாக்கியமே இல்லையே? அக்காங்கிற பேர்ல எனக்கு ஒரு சனியன் இருக்கே?" என்று சொன்னாள்.

திவ்யா, "அப்படி எல்லாம் சொல் லாதே சிந்து. உன்னைப் போல எனக்கு அக்கா இல்லையேன்னு எத்தனை வருத்தமா இருக்கு தெரியுமா?" என்றாள்.

அதற்கு சிந்து, "ஏன் சொல்ல மாட்டே? உனக்கும் என்னைப் போல எப்பவும் பழசையே பயன்படுத்தும்படி இருந்தா இப்படி எல்லாம் பேச மாட்டே" என்றாள்.

பேசிக் கொண்டிருக்கும்போதே இறை வணக்கத்திற்கான மணி அடித்தது. மாணவிகள் வரிசையில் சென்றனர். இறை வணக்கம் முடிந்தது. தலைமை ஆசிரியை மாநில அளவில் நடைபெறும் கட்டுரைப் போட்டியைப் பற்றிக் கூறினார். அதில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் இரு தினங்களில் பேர் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

மறுபடி பள்ளி திறந்து மூன்று மாதங்களாகி விட்டன. காலை இறைவணக்கத்தின் போது தலைமை ஆசிரியை, "இரு மாதங்களுக்கு முன்பு மாநில அளவில் நடைபெற்ற பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் நம் பள்ளி மாணவி சிந்து கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளாள்" என்று அறிவித்தார். மாணவிகள் உற்சாகமாகக் கைதட்டினர்.

பக்கத்திலிருந்த தோழிகள் கைகுலுக்கி மகிழ்ந்தனர். திவ்யாவும் நர்மதாவும் தங்களுக்கே பரிசு கிடைத்தது போல மகிழ்ந்தனர்.

திவ்யா, "சிந்து, எப்படி அத்தனை பிரமாதமா முதல் பரிசு கிடைக்கும்படி கட்டுரை எழுதினே? யாராவது எழுதிக் கொடுத்தாங்களா?" என்று கேட்டாள்.


அதற்கு சிந்து, "அதெல்லாம் இல்லை. சில புத்தகங்களிலிருந்து குறிப்புகள் எடுத்து எழுதி எங்க அக்காவிடம் கொடுத் தேன். அக்கா, தான் படித்த சில செய்திகளையும் அதோட சேர்த்து எனக்கு அழகான ஒரு கட்டுரையை எழுத உதவினாள். அதைத்தான் போட்டிக்கு அனுப்பினேன். அதுக்குத்தான் இப்போ பரிசு கிடைச்சிருக்கு!" என்று பெருமையாகக் கூறினாள்.

அப்போது நர்மதா, "பார்த்தாயா சிந்து? நீ சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபப்பட்டு அக்காவாம் அக்கான்னு உங்க அக்காவைத் திட்டுவையே? 'ஒரே பெண்ணாப் பிறந்திருக்கக் கூடாதா'ன்னு எங்கிட்ட ஏங்குவியே? இப்ப என்ன சொல்றே? உங்க அக்கா உண்மையாவே உனக்கு சனியன் தானா?" என்று கேட்டாள்.

சிந்து, "எங்க அக்காவாலதான் மாநில அளவில பரிசு பெற என்னால் முடிஞ்சிருக்கு. அப்படிப்பட்ட அக்காவையா சனியன்னு இனிமே சொல்வேன்? அக்காவோட அருமை இப்பத்தானே தெரியுது? அருமை அக்காவை வேண்டாம்னு சொல்லுவேனா? என் அக்கா எனக்கு எதிரி இல்லை. நல்ல தோழி! ஆலோசகர்! வழிகாட்டி... ம் அப்புறம்" என்று மேலே யோசித்தாள்.

உடனே திவ்யா, "போதும், போதும் சிந்து. தொடர விட்டா இங்கேயே உங்க அக்காவுக்கு ஒரு பெரிய பாராட்டு விழாவே நடத்திடுவே போலிருக்கே" என்றாள்.

அனைவரும் சிரித்துக் கொண்டே வகுப்புக்குச் சென்றனர்.



"எல்.கே.ஜிக்கும் யு.கே.ஜி.க்கும் என்ன வித்தியாசம்?"

"எல்.கே.ஜி.க்கு 7-8 கிலோ புத்தகம், யு.கே.ஜிக்கு 10-12 கிலோ!"

- சீர்காழி. வி. ரேவதி

நாய் மட்டும்தானா?

கே. காசிநாதன்



சுட்டிப் பெண் சங்கீதா "நான் போய்ட்டு வர்றேம்மா" என்று தாயிடம் கூறிக் கொண்டு வெளியே வந்தாள். வீடு இருக்கும் தெருவை விட்டுப் பிரதான சாலையை அடைந்தாள்.

பிரதான சாலையில் வேடிக்கை பார்த்தவண்ணமாக நடந்து வந்தாள் சங்கீதா. தனக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு வரத்தான் வந்து கொண்டிருந்தாள்.

சங்கீதா ஆறாம் வகுப்பு. கெட்டிக்காரி. மற்ற சிறுவரைப் போல் தும்பியைப் பிடித்துத் துன்புறுத்த மாட்டாள்; நாயைக் கல்லால் அடிக்க மாட்டாள். மற்ற சிறுவர் அவ்வாறு செய்தாலும் அவர்களுக்குப் புத்திமதி சொல்லுவாள்.

அந்தச் சாலையில் நிறைய வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன. சைக்கிள், ஸ்கூட்டர், ரிக்ஷா, ஆட்டோ, கார், லாரி, பஸ் என்று எல்லாமே இடம்பிடித்துப் போய்க் கொண்டிருந்தன.

சாலையில் தனியான ஆவலுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் நடப்பாள். இருந்தாலும் சாலை விதிகளை மீற மாட்டாள்.

அந்தச் சாலையிலேயே சற்றுத் தூரத்தில் சிறு கூட்டம்! என்னவாக இருக்கும் என்று சிந்தித்தவாறே நடந்தாள்.

யாராவது ஜோதிடர்; அல்லது கிளி ஜோசியம்; ஆருடம் சொல்லுவார்கள். அல்லது யாராவது வேடிக்கை காட்டுவார்கள். இந்த ஜனங்கள் எல்லா வேலையையும் விட்டு விட்டுக் கூடி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்' என்று நினைத்துக் கொண்டுதான் கூட்டத்தை நெருங்கினாள் சங்கீதா.

அருகில் சென்றதும் கூடியிருந்தவர்கள் ஆளுக்கொரு விதமாகப் பரபரப்பாகப் பேசிக் கொண்டது அவள் காதில் விழுந்தது.

"பாவம்! எப்படியோ அடிபட்டுடுச்சி. தவிக்குது! செத்திடுமோ என்னவோ!"

என்னவாகத்தான் இருக்கும் என்று பார்த்து விட்டுத்தான் போவோமே என்று அந்தக் கூட்டத்தினுள் நுழைந்



தான் சங்கீதா. அங்கே காயம்பட்ட ஒரு குரங்கு சித்ரவதைப்பட்டுக் கொண்டிருந்தது!

"பாவி ஸ்கூட்டர்காரன் இப்படி ஏத்திப்புட்டு போயிட்டானே!" என்று ஒருவர் பரிதாபப்பட்டார்.

அவள் விசாரித்ததில், ஒருவர் ஸ்கூட்டரில் வேகமாக வந்தபோது இந்தக் குரங்கு குறுக்காக ஓடியிருக்கிறது. ஸ்கூட்டர் வந்த வேகத்தில் இது குறுக்காக ஓடியதில் அதன் ஒரு கால் விரல்கள் நசுங்கி ரத்தம் பீறிட்டு வந்து கொண்டிருந்தது!

'எல்லோரையும் போல் நானும் வேடிக்கை பார்க்கக் கூடாது. தவறு குரங்கினுடையதாக இருந்தாலும் இதை எப்படியாவது காப்பாற்றியே ஆக வேண்டும்' என்று தீர்மானித்தாள் சங்கீதா.

கூட்டத்தை விட்டு விலகி வந்து ஒரு ஆட்டோவை வரவழைத்தாள். ஆட்டோ அருகில் வந்து நின்றதும், "யாராவது ஒருத்தர் என்னோடு கூட இதைத் தூக்கி ஆட்டோவில் வைக்க உதவுங்க" என்றாள்.

தாராள மனம் கொண்ட இரண்டு பேர் அவளுக்கு உதவி கள்.

வள் பள்ளிக் ப போகும் போதும் வரும் போதும் பார்த்த ஒரு கால்நடை மருத்துவரின் மருத்துவமனைக்கு ஆட்டோக்காரரைப் போகச் சொன்னாள்.

ஐந்தே நிமிடத்தில் ஆட்டோ அந்த மருத்துவமனையின் எதிரில் நின்றது. இவளுடைய இரக்க மனத்தையும் சாமர்த்தியத்தையும், அறிவையும் கண்ட மருத்துவர் குரங்குக்குச் செய்த சிகிச்சைக்குப் பணம் வாங்க மறுத்து விட்டார். சங்கீதா குரங்கைத் தூக்கிக் கொண்டு ஆட்டோவில் வீட்டுக்கு வந்தாள்.

குரங்கின் கால் குணமாக இரண்டு நாட்கள் ஆனது. அதுவரை அந்தக்

குரங்கைக் கவனமாகப் பார்த்துக் கொண்டாள் சங்கீதா. வேளை தவறாது மருந்து கொடுத்தாள். உணவு தந்தாள். வீட்டில் பெற்றோரும் பள்ளியில் ஆசிரியர்களும், நண்பர்களும் முதலில் வேண்டாத வேலை என்று நினைத்தாலும் கடைசியில் அவளைப் பாராட்டினர்.

கால் குணமான பிறகு குரங்கை அதன் இஷ்டம்போல் போகட்டும் என்று விட்டு விட்டாள் சங்கீதா. அதுவும் ஓடிவிட்டது. பதினைந்து நாட்கள் உருண்டோடி விட்டன.

அன்று இரவு சங்கீதாவும் அவள் தாயாரும் நகரத்திற்கு அப்பால் ஒரு ஒதுக்குப்புறமாக இருக்கும் நண்பர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். அந்த மண்டபம் புதிதாக உருவாகும் காலனியில் இருந்ததால் நகர பஜார் வீதியைத் தாண்டி, பேருந்து நிலையத்தைக் கடந்தபின் திரும்பி வரும்போது அவர்களுடன் யாருமே வரவில்லை.

சங்கீதாவும் அவள் தாயாரும் பேசிக் கொண்டு வந்தனர். எதிரே ஒரு முரடன் வந்து வழிமறித்தான்.

"மரியாதையா போட்டுட்டிருக்கிற நகைகளையெல்லாம் கழட்டிக் கொடு. இல்லாட்டி குத்திப்புடுவேன்" என்று கத்தியை எடுத்துக் காட்டினான் முரடன்.

"எங்களிடம் நகையோ பணமோ இல்லை" என்று அவர்கள் உண்மையைக் கூறினர். அவன் விடவில்லை.

அந்த நேரத்தில் பின்னாலிருந்து வேகமாக ஓடிவந்த ஒரு குரங்கு திருடனின் கழுத்துக்குத் தாவி ஏறி அவன் தோள்பட்டை, முகம் எல்லா இடங்களிலும் கடித்தது. நகத்தைப் போட்டுப் பிராண்டியது!

இதை சற்றும் எதிர்பாராத திருடன் ஆடிப் போனான்; ஓடிப் போனான்!

'தப்பித்தது போதும்' என்று இவர்கள் வேகம் வேகமாக நடந்தனர். கொஞ்ச தூரம் திருடனைத் துரத்திக் கொண்டு போன குரங்கு அவனை விட்டு விட்டு இவர்களோடு வந்து சேர்ந்து கொண்டது.

சங்கீதா குரங்கை அடையாளம் கண்டுகொண்டாள். அவள்எடுத்துச் சென்று சிகிச்சை தந்தாளே, அதே குரங்குதான் அது! வீடு போய்ச் சேருகின்ற வரை அது அவர்களுடன் கூடவே வந்தது!

வீட்டிற்குச் சென்றவுடன் சங்கீதாவின் தாயார் ஒரு தட்டு நிறையப் பலகாரங்களைக் கொண்டு வந்து வைத்தாள். அதைத் தின்றுவிட்டு அந்தக் குரங்கு ஓடிச்சென்று விட்டது!


நன்றியுள்ளது நாய் மட்டும்தானா?



காலம் கடந்த அறிவு!

அந்தக் காட்டில் யானையார் 'உம்' மென்று இருந்தார். மான் அதைப் பார்த்துக் காரணம் கேட்க, "இந்த இலை தழைகளையே தின்று தின்று அலுத்து விட்டது. வேறு வகையான உணவே கிடைக்கவில்லை" என்று கூறியது யானையார்.

"கவலை வேண்டாம் யானையாரே. காட்டின் எல்லையில் பசுமையான சோலை இருக்கிறது. குட்டைத் தென்னைகளும், வகை வகையான மரங்கள், செடிகள் எல்லாம் இருக்கு. அங்கே போனால் விதம்விதமான இலைகளைத்



இங்கலாம்" என்று கூறிய மான் யானையாரை சோலைக்கு இட்டுச் சென்றது.

யானை சோலையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தது. நிறைய நிறையச் சாப்பிட்டது. அன்றிலிருந்து தினம் தினம் சோலைக்கு வந்து தின்று கொழுத்தது.

வரவர மானைக் கூட எதிர்பாராமல் தான் மட்டுமே வந்து உண்டு செல்லத் தொடங்கியது.

ஒருநாள் யானையார் சோலையைத் தாண்டி மக்கள் பயிர் செய்துள்ள வயல்களுக்குச் சென்றது. அதைக் கவனித்து விட்ட மான் 'மக்கள் சிரமப்பட்டுப் பயிர் செய்துள்ள வயல்களையெல்லாம் நாசம் செய்யாதே. அது ஆபத்தை வரவழைக்கும். இந்த சோலையின் உணவே போதும்' என்றது.

யானையார் கோபத்துடன், "எனக்குப் புத்தி சொல்ல வந்த அற்பனே. உன் வேலையைப் பார். இங்கிருந்து ஓடு' என்று துதிக்கையைத் தூக்கி மானை அடித்து விரட்டியது.

யானையார் செழுமையாக இருந்த வயல்களுக்குச் சென்று சோளப் பயிர்களைப் பிடுங்கிச் சாப்பிட்டது. வயல் வெளியை யானை நாசம் செய்வதைக் கவனித்து விட்ட விவசாயிகள் ஒன்றுகூடி யானையைப் பிடிக்கப் பொறி வைத்தனர். பயிரைத் தின்ன வயலுக்கு வந்த யானையார் பொறியில் சிக்கிப் பிளிறியது. ஓடி வந்த மக்கள் யானையைப் பிடித்து மிருகக் காட்சி சாலையில் ஒப்படைத்தனர். அங்கு அது அடைக்கப்பட்டது. கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டன. வேளைக்குத்தான் உணவு. அதுவும் அளவாக. நினைத்த போது சாப்பிட முடியவில்லை. யானையின் சுதந்திரமும் பறிபோனது.

மானின் எச்சரிக்கையைக் கேட்காது நடந்து கொண்டதே தனது துன்பத்திற்குக் காரணம் என்பதை யானையார் உணர்ந்து கொண்டது. ஆனால் இப்பொழுது புத்தி வந்து என்ன பயன்? காலங்கடந்து விட்டதே!

- தமிழ்ச்செல்வி.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று, அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பிரதம நிர்வாக அதிகாரி : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



எல்லாம் இரண்டு இருந்தாலும்
உறிஞ்ச மட்டும் ஒருவாயா!

Registered with the Registrar of Newspaper of India under No. 2???/72 Registered No. TN/MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS ... * Registered as a Newspaper in Srilanka